2013, April 01 - 15

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

# சமகாலம்

Registered in the Department of Posts of Sri Lanka under No: QD/News/72/2013

14 MAY 2013

14/05/13



# இராணுவ மயமாக்கலின் பரிமாணங்கள்

- ஜெனீவாவுக்கு பிறகு
- இலங்கை - இந்திய உறவுகள்
- முஷாரப்பின் வருகை
- ராகுல் காந்தியின் துறவு
- ஐ.பி.எல். விவகாரத்தில் அடக்கி வாசித்த இலங்கை

| | | |
|---|---|---|
| INDIA..............IN₹ 50.00 | CANADA........CAN$ 10.00 | USA...........US$ 10.00 |
| SRI LANKA....SLR 100.00 | AUSTRALIA...AUS$ 10.00 | UK............GB£ 5.00 |
| SINGAPORE...SG$ 14.00 | SWISS.............CHF 10.00 | EUROPE..EU€ 5.00 |

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# New City Motors


## Link Lanka Technolagies




**லிங்க்**

**இலவசம்**

டெக்சி மீற்றர் உடன்
FM ரேடியோ
மீட்டர் டெக்சி Board, Sticker
USB பென் இணைக்கும் வசதி
MP3 பாடல் கேட்கும் வசதி
Remote Control
மூலம் இயக்கக் கூடிய விசேட வசதி







தவணைக் கொடுப்பனவு முறையிலும் Link Meterஐ கொள்வனவு செய்யலாம். (வரையறுக்கப்பட்ட காலத்திற்கு மாத்திரம்)

# New City Motors


## LINK LANKA Technologies

Office : 0112 690 744
Hotline : 0724 990 990
0723 333 933
Galle : 0114 345 960 - 4
0114 345 962

**Branches**

# 181, Araamiya Place, Dematagoda, Colombo - 09
#121/7c, Ragama Road, Kadawatha
#420/2, Matara Road, Magalla, Galle
Ambalangoda.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உள்ளடக்கம்


சர்வதேச ரீதியில்
தனிமைப்படும் இலங்கை அரசு 11
கலாநிதி பாக்கியசோதி
சரவணமுத்து

இந்திய-இலங்கை உறவுகள் குறித்து
கே.கொடகே, குல்தீப் நாயர் 14

வட மாகாணசபைத் தேர்தல் பற்றி
ஆபத்தான சிந்தனைகள் 19
கலாநிதி ஜெஹான் பெரேரா

ஜெனீவாவுக்குப் பிறகு 22
குமார் டேவிட்

தமிழர் அரசியலின் எதிர்காலம் 25
என்.சத்தியமூர்த்தி

ஐ.பி.எல். விவகாரத்தில்
அடக்கி வாசித்த இலங்கை 29
ரி.எஸ்.கணேசன்

இராணுவ மயமாக்கலின்
பரிமாணங்கள் 32
அ.மார்க்ஸ்

டில்லி டயறி 41
எம்.பி.வித்தியாதரன்

சென்னை மெயில் 46
முத்தையா காசிநாதன்


முஷாரப்பின் வருகையின்
பின்னணியில்
இராணுவத்தின் வியூகம் 50

ராகுலின் துறவு 54
கரன் தாப்பர்

அறிவியல் களரி 56
டாக்டர் எம்.கே. முருகானந்தன்

திரைவிமர்சனம் - பரதேசி 59

கடைசிப் பக்கம் 64
மா.கணபதிப்பிள்ளை










*Samakalam focuses on issues that affect the lives of people*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் வெளியீடு

சமகாலம்

2013, ஏப்ரல் 01-15




11




14



22



29



56



59



64

*of Sri Lanka, the neighbourhood and the world*

## ஆசிரியரிடமிருந்து...

# வடக்கில் அடாவடித்தனங்கள்

வட மாகாணசபைத் தேர்தலை எதிர்வரும் செப்டெம்பரில் நடத்துவதாக அரசாங்கம் வெளியுலகத்திற்கு உறுதியளித்திருக்கிறது. ஆனால், ஏதாவது ஒரு சாக்குப் போக்கைக் காட்டி அத்தேர்தலை மேலும் பின்போடுவதற்கு அது அக்கறை காட்டக்கூடும் என்ற சந்தேகங்களும் மறுபுறத்தில் இல்லாமல் இல்லை. என்றாலும், சர்வதேச சமூகத்தின் மத்தியில் குறைந்த பட்சமேனும் அதன் நம்பகத்தன்மையை நிலைநிறுத்த வேண்டுமானால் வட மாகாணத்தில் தேர்தலை நடத்தியேயாக வேண்டுமென்ற இக்கட்டான நிலையிலேயே அரசாங்கம் இருக்கிறது.

தேர்தல் ஒன்றை நடத்துவதாக இருந்தால் அதற்கான உகந்த சூழ்நிலையை உறுதிப்படுத்துவதே அரசாங்கத்தின் முதன்மையான பணியாக இருக்க வேண்டும். ஆனால், வடபகுதியில் அண்மைக்காலமாக இடம்பெற்று வருகின்ற அடாவடித்தனங்களை நோக்கும்போது சூழ்நிலையை மோசமாக்குவதற்கான திட்டமொன்று தீட்டப்பட்டு அதன் பிரகாரம் காரியங்கள் முன்னெடுக்கப்படுகின்றன என்றே நம்பவேண்டியிருக்கிறது.

வன்னியில் கிளிநொச்சியில் தமிழ்த்தேசியக் கூட்டமைப்பின் கூட்டத்தில் கலந்து கொண்டவர்கள் மீது நடத்தப்பட்ட தாக்குதல், உதயன் பத்திரிகை அலுவலகம் மீதான தாக்குதல் சம்பவங்கள் ஒருசில தினங்கள் இடைவெளிக்குள் நடந்தேறியிருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது. உள்நாட்டுப் போர் முடிவுக்குவந்து நான்கு வருடங்கள் பூர்த்தியாகப் போகின்ற நிலையிலும் இயல்பு வாழ்க்கைக்குத் திரும்ப முடியாமல், இராணுவ மயச்சூழ்நிலையில் வாழ்ந்து கொண்டிருக்கும் மக்கள் மீண்டும் ஜனநாயக அரசியற் செயற்பாடுகளில் படிப்படியாக நம்பிக்கை வைக்கக்கூடிய வகையிலான செயற்பாடுகளை முன்னெடுப்பதற்குப் பதிலாக, அரசாங்கம் மேலும் ஆரோக்கியமற்ற சூழ்நிலையை வலுப்படுத்துவதிலேயே அக்கறை காட்டுகின்றதென்ற குற்றச்சாட்டை முன்வைக்காமல் இருக்கமுடியவில்லை.

ஏனென்றால், வடக்கில் ஜனநாயக அரசியல் செயற்பாடுகளுக்கு குந்தகமான நடவடிக்கைகளும் ஊடக சுதந்திரத்துக்கு அச்சுறுத்தலான செயற்பாடுகளும் சட்டத்தையும் ஒழுங்கையும் பேணவேண்டிய சட்ட ரீதியான கடப்பாட்டைக் கொண்டவர்களின் கண் முன்னாலேயே நடந்து கொண்டிருக்கின்றன. இத்தகைய சம்பங்களுக்குப் பொறுப்பானவர்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்கள் போன்று சுதந்திரமாக நடமாடுகிறார்கள். இந்த கேவலமான கலாசாத்திற்கு முற்றுப்புள்ளி வைக்கப்படாவிட்டால், வடமாகாண சபைக்கு நடத்தப்படக்கூடிய தேர்தல் மூன்று தசாப்தங்களுக்கும் கூடுதலான காலத்திற்கு முன்னர் இடம்பெற்ற யாழ்ப்பாண மாவட்ட சபைத்தேர்தலையும் விட மோசமானதாகவே அமையும் என்பதில் சந்தேகமில்லை. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கடிதங்கள்













## இத்தாலியும் இலங்கையும்



டில்லி டயறியில் வெளியான மன்மோகன் சிங்கிற்கு தலையிடி தரும் இலங்கையும் இத்தாலியும் என்ற கட்டுரை படித்தேன். இரு இந்திய மீனவர்களை தவறுதலாகச் சுட்டுக்கொன்ற இத்தாலிக் கடற்படை வீரர்கள் தொடர்பில் இந்திய மத்திய அரசு அந்நாட்டுடனான உறவையே முறித்துக் கொள்ளும் அளவுக்கு கடுமையான முடிவுகளை எடுத்திருந்தது. இறுதியில் இத்தாலித் தூதுவரே இந்தியாவை விட்டு வெளியேற முடியாதநிலை கூட ஏற்பட்டது.

அதேவேளை, இன்றுவரை இலங்கை கடற்படையினரால் நூற்றுக்கணக்கான இந்திய மீனவர்கள் குறிப்பாக தமிழ்நாட்டு மீனவர்கள் கொல்லப்பட்டும் படுகாயப்படுத்தப்பட்டும் உள்ள நிலையில், எந்த இலங்கை கடற்படை வீரரும் கைது செய்யப்படவில்லை. தூதுவரும் இந்தியாவை விட்டு வெளியேற முடியாத நிலை ஏற்படவில்லை. இப்பாரபட்சம் ஏன்? இத்தாலிக்கு நடந்தது ஏன் இலங்கைக்கு நடக்கவில்லை?

ப.பகீரதன், மத்திய வீதி, திருகோணமலை

## டாக்டருக்கு பாராட்டு

டாக்டர் எம்.கே.முருகானந்தன் மருத்துவத்தில் மட்டுமன்றி அறிவியலின் பல்வேறு விவகாரங்கள் தொடர்பிலும் அசத்துகின்றார். சாதாரணமானவர்களால் விளங்கிக் கொள்ள முடியாத விடயங்களைக் கூட அவர்களுக்கு சுலபமாக விளங்கும் வகையிலான உவமானங்களுடன் எழுதுவதில் அவருக்கு நிகர் அவரே. பாராட்டுகள்.



திருமதி சரோஜினிதேவி,
சாவகச்சேரி

## மலாலாவுக்கு பிரகாசமான எதிர்காலம்



சமகாலத்தில் மலையகத்திற்கும் முக்கியத்துவம் கொடுப்பது வரவேற்கத்தக்க விடயம். வழமையாக பிரபலங்களின் புகைப்படத்துடன் அவர்களின் பிரபலமிக்க கூற்றுக்களும் ஒரு பக்கத்தில் வெளியாகி இருக்கும். கடந்த இதழில் அதைக் காணாதது மன நெருடலாக இருந்தது. மீண்டும் பள்ளிக்குப் போகும் மலாலாவின் தன்னம்பிக்கையும் மன உறுதியும் வியக்க வைக்கின்றது. அவ

## விமர்சனம் மாத்திரம் ஏன்?

சமகாலம் இதழ்களில் ஆரம்பத்திலிருந்தே கலையுலக விடயதானங்கள் என்றால் அது வெறுமனே சினிமாத் திரைப்படங்கள் பற்றிய விமர்சனங்களாக மாத்திரமே இருக்கின்றன. கலையுலகம் பற்றி சஞ்சிகையில் எத்தனையோ விடயங்களைத் தரமுடியும். தென்னிந்திய சினிமா மாத்திரம் தான் கலையுலம் என்றும் ஆகிவிடாது. மேற்குலக திரைப்படங்கள் பற்றி எத்தனையோ தரமான விடயங்களைத் தர முடியும். இது விடயத்தில் சமகாலம் கவனம் செலுத்துவது முக்கியமானதாகும். ஆசிரியர் குழு கவனிக்குமா?

க.வதனி, களுதாவளை,
மாத்தளை

விளம்பரங்களுக்கு : தொலைபேசி: 011-7767702, 011-7767703, 011-7322736

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ளின் எதிர்காலம் பிரகாசமாக இருக்கும் என்பதை இப்போது புரிந்து கொள்ள முடிகின்றது. கெட்டதிலும் நல்லது நடக்கும் என்பது மலாலாவின் வாழ்விலும் பொய்த்துவிடவில்லை.

மணியரசன் சிவா, கரவெட்டி கிழக்கு

## சினிமாத் தகவல்கள்




கறுப்பு, வெள்ளை சினிமாக்காலத்தை இன்றைய அச்சு, இலத்திரனியல் ஊடகங்கள் மறந்து வரும் நிலையில், சமகாலம் அந்தத் தவறைச் செய்யாததற்கு பாராட்டுகள். மார்ச் 15-30 இதழில் வெளியான ராஜசுலோச்சனா மற்றும் சந்திரபாபு ஆகிய தென்னிந்திய நட்சத்திரங்கள் பற்றிய தகவல்கள் பெறுமதிமிக்கவை. ஆசிரியருக்கு நன்றி.

ஆர். மகாலிங்கம், பண்டாரிக் குளம், வவுனியா.

## பிரமிக்கத்தக்க சாதனை



சமகாலம் இதழ் 18 இல் ஹூகோ ஷாவேஸுக்கு முக்கிய இடம் கொடுத்திருந்தமை வரவேற்கத்தக்கது. அவர்பற்றிய புரிதலை மேலும் மேம்படுத்த அவை உதவியிருந்தன. ஜே.பி.சந்திரபாபு மற்றும் ராஜசுலோசனா பற்றிய விடயங்களும் கலையுலகம்தொடர்பானவாசிப்புக்குஆர்வத்தை ஏற்படுத்தியிருந்தன. உயிரியல் கணினி பற்றிய விடயம் அறிவியல் வளர்ச்சியின் பிரமிக்கத்தக்க சாதனைகளுக்கு ஒரு சான்று வைக்கின்றது. சாத்தியப் படாதவைகளையும் சாத்தியமாக்குவதுதானே அறிவியல்.

எஸ்.நிசாந்தன், வெள்ளவத்தை

## சென்னை மெயில் பற்றி....



இலங்கைத் தமிழர் உரிமைப் போராட்டத்துக்கு ஆதரவாக தமிழகத்தில் எழுச்சி பெற்ற மாணவர் போராட்டம் பிரமிக்க வைக்கின்றது. அரசியல்வாதிகளை விட மாணவர்களின் எழுச்சி உணர்ச்சியும் உண்மையும் மிக்கது. அதனால்தான் அது இந்திய அரசையே அதிர வைத்துள்ளது. சென்னை மெயில் இது தொடர்பான செய்தியை சிறப்பாகத் தந்திருந்தது. கருணாநிதியின் காய் நகர்த்தல் தந்திரத்தினையும் கச்சிதமாக வெளிப்படுத்தி நிற்கும் கட்டுரையும் அருமை.

செந்தூரன் பிரகாஷ், சேமமடு




இருவாரங்களுக்கு ஒருமுறை

ISSN : 2279 - 2031

மலர் 01 இதழ் 19
2013, ஏப்ரில் 01 - 15

A Fortnigtly Tamil News Magazine

எக்ஸ்பிரஸ் நியூஸ் பேப்பர்ஸ் (சிலோன்) (பிரைவேட்) லிமிடெட்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு-14,
இலங்கை.
தொலைபேசி : +94 11 7322700
ஈ-மெயில்: samakalam@expressnewspapers.lk

ஆசிரியர்
வீரகத்தி தனபாலசிங்கம்

உதவி ஆசிரியர்
தெட்சணாமூர்த்தி மதுசூதனன்

ஒப்பு நோக்கல்
என்.லெப்ரின் ராஜ்



உங்களுடன் காரில் ஏறி பயணம் செய்வதற்கு பலர் விரும்புவார்கள். ஆனால், உங்களுக்குத் தேவையானவர்கள் யார் தெரியுமா? கார் பழுதடைந்து விட்டால் உங்களுடன் சேர்ந்து பஸ்ஸிலும் பயணம் செய்யக்கூடியவர்களே.

ஒப்ரா வின்பிரே

வாசகர் கடிதங்களை அனுப்ப வேண்டிய முகவரி:
ஆசிரியர்,
சமகாலம்
185, கிராண்ட்பாஸ் ரோட்,
கொழும்பு -14.
இலங்கை.
மின்னஞ்சல் : samakalam@expressnewspapers.lk
பெக்ஸ்; 011 7778752, 011-7767704, 011-2327827,

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வாக்குமூலம்....



இது ஒரு ஜனநாயக நாடு. பௌத்தர்கள் அல்லாதவர்களுக்கும் சமத்துவமான உரிமைகளும் சுதந்திரங்களும் இருக்கின்றன. பௌத்தர்களின் உரிமைகளை நாம் பாதுகாக்கின்ற அதேவேளை, பௌத்தர்கள் முன்னுதாரணமாக நடந்து ஏனையவர்களின் உரிமைகளைப் பாதுகாப்பது பொறுப்பாகும்.

*ஜனாதிபதி*
*மகிந்த ராஜபக்ஷ*

ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சிக்குப் பதிலாக ஐக்கிய தேசியக் கட்சியை அதிகாரத்துக்குக் கொண்டு வருவதன் மூலமாக நாட்டைக் காப்பாற்றிவிட முடியாது. அரசாங்கத்தைப் போன்றே எதிர்க் கட்சியும் கெடுதியானதே. ஊழல் மிகுந்த அரசாங்கத்துக்கும் வங்குரோத்தாகிப் போன எதிரணிக்கும் ஒரே மாற்று எனது ஜனநாயகக் கட்சியேயாகும்.

*சரத்பொன்சேகா*





போரில் வெற்றி பெறுவதற்கு முறையான தந்திரோபாயம் தேவை. ஆனால், சமாதானத்தை வென்றெடுப்பதற்கு மதிப்புவாய்ந்த நோக்கு வேண்டும். இலங்கை கிணற்றுத் தவளையின் மனோ நிலையில் இருக்கிறது. அதனால், உலகின் ஏனைய பகுதிகளில் இருந்து எம்மைத் தனிமைப்படுத்துவதற்கு நாமே எதிரிகளுக்கு உதவிக் கொண்டிருக்கிறோம்.

*தயான் ஜெயதிலக*

வடமாகாண சபையின் முதலமைச்சர் வேட்பாளராகப் போட்டியிடுவதற்காக அமைச்சர் பதவியைத் துறப்பேன். இந்த முடிவில் எந்தக் காரணத்துக்காகவும் மாற்றம் இல்லை. இது ஒரு ஜனநாயக நாடு. தேர்தல்களில் போட்டியிடுவதற்கு சகலருக்கும் உரிமையிருக்கிறது. நீண்ட காலமாக எதிர்பார்க்கப்படும் வடமாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியின் கீழ் எமது கட்சி நிச்சயம் வெற்றி பெறும்.

*அமைச்சர் டக்ளஸ்*
*தேவானந்தா*





குளிரூட்டப்பட்ட மாளிகைக்குள் இருந்து கொண்டு இலங்கைத் தமிழர்களின் கஷ்டங்கள் பற்றிப் பேசுகிற ஜெயலலிதாவும் கருணாநிதியும் இலங்கைத் தமிழர்களின் நல்வாழ்வுக்காக ஒரு சதத்தைத்தானும் கொடுத்திருக்கிறார்களா? சாப்பிட வழியில்லாமல் கஷ்டப்படுகிற இலட்சக்கணக்கான தமிழ் நாட்டுத் தமிழர்களையும் விட இலங்கைத் தமிழர்கள் நன்றாக வாழ்கிறார்கள் என்பதை ஜெயலலிதாவும் கருணாநிதியும் என்றாவது உணர்ந்திருக்கிறார்களா?

*அமைச்சர் விமல் வீரவன்ச*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



தமிழ் நாட்டுடன் எமக்கு நல்லுறவு இருக்கிறது. எமது ஜனாதிபதி ஞானம் உள்ளவர். அவர் இந்தப் பிரச்சினையைத் தீர்த்து வைப்பார். ஆனால், தூங்கிக் கொண்டிருக்கும் சிங்கத்தைத் தட்டியெழுப்பி காயப்பட்டுக் கொள்ள வேண்டாம் என்று நான் தென்னிந்தியாவுக்குக் கூறிக்கொள்ள விரும்புகிறேன். உண்ணாவிரதம் இருந்த தென்னிந்திய நடிகர்கள் உண்மையான கதாநாயகர்களாக இருந்தால் சாகும் வரை உண்ணாவிரதம் இருந்திருப்பார்கள். கதாநாயகர்கள் எப்போதும் சாகும் வரை உண்ணாவிரதமிருப்பார்கள் இடைநடுவில் கைவிடமாட்டார்கள்.

*அமைச்சர் மேர்வின் சில்வா*




இலங்கை கிரிக்கெட் அணியில் நான் 20 வருடங்களாக விளையாடியிருக்கிறேன். தமிழன் என்ற வகையில் எனக்கு எந்தப் பிரச்சினையுமே இருந்ததில்லை. நான் நெருக்கடிகளை எதிர் நோக்கிய வேளைகளில் எல்லாம் இலங்கை அரசாங்கமும் கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையும் முழுமையாக எனக்கு ஆதரவளித்தன. தமிழர்களுக்கும் இலங்கையர்களுக்கும் இடையே போர் நிலவிய காலகட்டமொன்று இருந்தது. ஆனால், எமது நாட்டில் மக்கள் இப்போது அமைதியாக வாழ்கிறார்கள். கடந்த காலத்தில் நடந்தவற்றை மறந்து நாமெல்லோரும் எவ்வாறு வாழுகின்றோம் என்பதை இந்தியாவில் உள்ளவர்கள் நேரில் வந்து பார்க்க வேண்டும்.

*முத்தையா முரளிதரன்*



எப்போது நான் திருமணம் செய்து கொள்வேன் என்று பத்திரிகையாளர்கள் என்னிடம் கேட்கிறார்கள். எப்போது நீங்கள் பிரதமராவீர்கள் என்றும் கேட்கிறார்கள். வேறு சிலர் நீங்கள் பிரதமராக வர மாட்டீர்கள் என்றும், அதையும் விடச்சிலர் நீங்கள் பிரதமராவீர்கள் என்றும் கூட கூறுகிறார்கள். இதெல்லாம் பொருத்தமில்லாத கேள்விகள்.

*ராகுல் காந்தி*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 'சர்வதேச சமூகத்தில் நண்பர்களை இழந்து வரும் இலங்கை'

சர்வதேச சமூகத்தின் வல்லாதிக்க நாடுகளினால் இலங்கையைச் சுற்றி ''விரிக்கப்பட்டு வருகின்ற வலையை'' பற்றி முறையாகப் புரிந்து கொள்ளாமல் அல்லது வேண்டுமென்றே புரிந்துகொள்ள மறுத்து அரசாங்கம் கடைப்பிடித்து வருகின்ற அணுகுமுறைகள் இன்னும் ஒரு சில வருடங்களில் ஆபத்தை தோற்றுவிக்கப்போகின்றது என்று இலங்கையின் முன்னாள் இராஜதந்திரிகள் பலரும் புத்திஜீவிகளும் அபிப்பிராயம் தெரிவித்திருக்கிறார்கள்.

உள்நாட்டு விவகாரங்களிலும் சரி வெளியுறவு விவகாரங்களிலும் சரி விவேகமுடையதும் உலகியல் அறிவுடையதுமான கொள்கைகளைக் கடைப்பிடித்திருந்தால் இன்று மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்க விவகாரங்கள் தொடர்பில் சர்வதேச சமூகத்துடன் மல்லுக்கட்ட வேண்டிய நிலை ஏற்பட்டிருக்காது என்று கூறும் இந்த இராஜதந்திரிகளும் புத்திஜீவிகளும் அவ்வாறு செய்யத் தவறியதன் மூலம் அரசாங்கம் அதன் வெளியுலக எதிரிகளுக்கு வசதி செய்து கொடுத்து வருகின்றது என்று குற்றஞ்சாட்டியிருக்கிறார்கள்.

எதைச் செய்ய வேண்டுமோ அதைச் செய்யாததன் மூலமும் எதைச் செய்யக்கூடாதோ அதைச் செய்வதன் மூலமும் அரசாங்கம் எதிரிகளுக்கு தாராளமாக உதவிக் கொண்டிருக்கிறது. ஒரு அர்த்தத்தில் இலங்கை அதன் எதிரிகளின் சிறந்த நண்பனாக நடந்து கொள்கிறது. இலங்கை நண்பர்களை இழந்துவிட்டது என்பது வெளிப்படையானது. 2009, 2012, 2013 ஆண்டுகளில் ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகளின் பேரவையில் இலங்கை தொடர்பில் கொண்டுவரப்பட்ட தீர்மானங்களுக்கு ஆதரவாகவும் எதிர்த்து வாக்களித்த நாடுகளையும் வாக்கெடுப்பில் கலந்துகொள்வதைத் தவிர்த்த நாடுகளையும் உன்னிப்பாக நோக்கினால் இலங்கை எவ்வாறு அதன் நண்பர்களை இழந்து வருகிறது என்பதை எளிதாகப் புரிந்துகொள்ள முடியும்.

ஐக்கிய நாடுகளில் சீனாவும் ரஷ்யாவும் இலங்கையைக் காப்பாற்றும் என்ற நம்பிக்கையுடன் அரசாங்கத்



தலைவர்கள் சர்வதேச சமூகத்துடனான தங்கள் உறவுகள் சம்பந்தப்பட்ட விடயத்தில் அணுகுமுறைகளைவகுத்துச் செயற்பட்டுக் கொண்டிருக்கிறார்கள். இது ஆபத்தான விளையாட்டாகும்.

மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களின் மூலமாக இலங்கைக்கு ஒரு ஆணை பிறப்பிக்கப்பட்டிருக்கிறது. அது ஐ.நா.வின் ஆணையாகும். ஐ.நா.வின் தீர்மானங்கள் மூன்று இடங்களில் கொண்டுவர முடியும். ஒன்று பாதுகாப்புச் சபை. அங்கே தீர்மானத்தை கொண்டுவருவது கஷ்டமானது. சீனாவும் ரஷ்யாவும் வீட்டோ அதிகாரத்தைப் பாவிக்கக்கூடிய நிலை இருக்கிறது. அடுத்தது பொதுச் சபை. அது எந்தவழியிலும் செயற்படலாம். இப்போதைக்கு பொதுச் சபை இலங்கைக்கு எதிராகப் போகப் போவதில்லை. ஆனால் இந்த நிலை எந்தவேளையிலும் மாறக்கூடும். அடுத்தது மனித உரிமைகள் பேரவை. அங்கே வீட்டோ அதிகாரத்தை பயன்படுத்தி சீனாவோ ரஷ்யாவோ இலங்கையை பாதுகாக்க முடியாது. அதன் காரணத்தினால் தான் 2009 முதல் அமெரிக்கா மற்றும் ஐரோப்பிய ஒன்றியம் போன்றவை ஜெனீவாவின் ஊடாக இலங்கை விவகாரத்தைக் கையாளுவதற்கு முயற்சித்து வருகின்றன.

2012ஆம் ஆண்டிலும் 2013 ஆம் ஆண்டிலும் இலங்கைக்கு எதிரான தீர்மானங்கள் ஜெனீவாவில் நிறைவேற்றப்பட்டதன் மூலம் இலங்கைக்கு ஐ.நா.வின் ஆணை ஒன்று இருக்கிறது. இவ்வருடத்தைய தீர்மானத்திற்குள் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் நவிபிள்ளையின் அறிக்கை பதித்து வைக்கப்பட்டிருக்கிறது. நவிப்பிள்ளையின் அறிக்கையினுள் தருஸ்மன் அறிக்கை பதித்து வைக்கப்பட்டிருக்கிறது. எந்தவகையான தந்திரமான முறையில் இலங்கையை சுற்றி வலைவிரிக்கப்படுகிறது என்பதை இதன் மூலம் உணர்ந்துகொள்ள முடியும் என்று இந்த நிபுணர்கள் கூறி இருக்கிறார்கள். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செய்திச்சரம்



அணுவாயுதங்களைப் பயன்படுத்தி அமெரிக்கா மீது தாக்குதல் தொடுக்கப்போவதாக வடகொரியா விடுத்திருக்கும் வெளிப்படையான எச்சரிக்கை வெறுமனே ஒரு வீராப்புப் பேச்சேதவிர வேறு ஒன்றுமில்லை என்றும் சர்வதேச ரீதியாகத் தனிமைப்படுத்தப்பட்டிருக்கும் அந்த நாடு அத்தகைய அணுவாயுதத் தாக்குதலை நடத்துவதற்கான வழிவகைகளை இன்னமும் அடையவில்லை என்று மேற்குலக அதிகாரிகளும் பாதுகாப்புத் துறை நிபுணர்களும் கூறுகிறார்கள்.

அண்மைய வருடங்களில் வடகொரியா அதன் ஏவுகணை ஆற்றல்களை படிப்படியாக மேம்படுத்தியிருக்கிறது என்பது உண்மைதான் எனக் கூறும் அமெரிக்க அதிகாரிகள் அமெரிக்க பெருநிலப்பரப்பில் இருந்து தொலைவில் உள்ள குவாம், அலஸ்கா, ஹவாய் போன்ற அமெரிக்கப்

# அமெரிக்கா மீது அணுவாயுத தாக்குதலை நடத்தும் ஆற்றல் வடகொரியாவிடம் இல்லை

பிராந்தியங்கள் மீதும் மாநிலங்கள் மீதும் ஏவுகணைத் தாக்குதல்களை நடத்தக்கூடிய ஆற்றல் வடகொரியாவிடம் இருக்கக்கூடும் என்று தெரிவித்திருக்கிறார்கள்.

இந்தக் கருத்துகளைக் கூட மிகைப்படுத்தப்பட்ட பீதிகளாகவே சில சுயாதீனமான நிபுணர்கள் வர்ணிக்கிறார்கள். நீண்டதூர ஏவுகணையில் பொருந்தக்கூடியதாக அணுவாயுதங்களை சிறியவையாகத் தயாரிக்கும் சிக்கல் மிகு விஞ்ஞானத் திறனை இன்னும் வடகொரியா பரீட்சித்துப் பார்க்கவில்லை என்று கூறும் அதிகாரிகள் இந்த திறனை அமெரிக்கா, ரஷ்யா,சீனாவும் ஏனைய சில நாடுகளும் பல தசாப்தங்களுக்கு முன்னரேயே பெற்று விட்டன என்று சுட்டிக்காட்டுகிறார்கள்.

மறுவார்த்தைகளில் சொல்வதானால், அமெரிக்காவின் சில பகுதிகள் மீது வடகொரியா தாக்குதல்களை நடத்தக்கூடியதாக இருக்கலாம். ஆனால், அமெரிக்காவின் பிரதான நிலப்பரப்பு மீது தாக்குதல்களை நடத்த முடியாது. அத்துடன் குறிப்பாக அணுவாயுதமொன்றைப் பயன்படுத்தித் தாக்கக்கூடிய அச்சுறுத்தல் அறவே இல்லை என்பதே இந்த அதிகாரிகளினதும் நிபுணர்களினதும் பொதுவான நம்பிக்கையாகவுள்ளது.

(18ஆம் பக்கம் பார்க்க...)

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

# ஏப்ரில் 18 சஞ்சய்தத் சரணடைகிறார்



மும்பை குண்டுவெடிப்புகள் வழக்கில் 5 வருடங்கள் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டிருக்கும் பிரபல பொலிவூட் நடிகர் சஞ்சய்தத் ஏப்ரில் 18 ஆம் திகதி பொலிஸாரிடம் சரணடையத் தீர்மானித்திருப்பதாக செய்திகள் வெளியாகியிருக்கின்றன.

சிறையில் அடைக்கப்படவேண்டிய திகதிக்கு 12 தினங்கள் முன்னதாக அவர் சரணடையத் தீர்மானித்திருக்கிறார். ஒப்பந்தம் செய்து கொண்ட திரைப்படங்களை முடித்துக்கொடுக்கும் பணிகளில் அவர் தீவிரமாக இறங்கியிருக்கிறார். ஏப்ரில் 13ஆம் திகதியளவில் படப்பிடிப்புகளைப் பூர்த்தி செய்து கொள்ளுமாறு அவர் தயாரிப்பாளர்களைக் கேட்டிருக்கிறார். ஏப்ரில் 13 -17 இடைப்பட்ட நாட்களில் ஒலிப்பதிவை முடித்துவிட சஞ்சய்தத் விரும்புகிறார் என்று அவருக்கு நெருக்கமான வட்டாரங்களை மேற்கோள்காட்டி ரைம்ஸ் ஒப் இந்தியா செய்தி வெளியிட்டிருந்தது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இஸ்ரேலுக்கான ஒபாமாவின் முதல் விஜயம்

அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமா தனது முதலாவது பதவிக் காலத்தில் பரந்தளவில் வெளிநாட்டு விஜயங்களை மேற்கொண்ட போதிலும், இஸ்ரேலுக்கு ஒரு போதுமே செல்லவில்லை. அதனால், இரண்டாவது பதவிக் காலத்தின் தொடக்கத்தில் வெளிநாடொன்றுக்கு அவர் மேற்கொண்ட முதல் பயணமாக அவரது கடந்த மாத இஸ்ரேல் விஜயம் அமைந்தது மிகவும் முக்கியத்துவம் வாய்ந்த ஒரு விடயமாகும். அந்த விஜயத்தின் போது ஒபாமா மத்திய கிழக்கில் சமாதானத்தைக் காண்பதற்கு 'இரு அரசுகள்' என்ற தீர்வுக்கு தனது முற்று முழுதான ஆதரவை வெளிக்காட்டியது மிகவும் கவனிக்கத்தக்கதாகும். 'இஸ்ரேல் ஒரு யூத-ஜனநாயக அரசாக செழித்தோங்கி நிலைத்துவாழ இருக்கக்கூடிய ஒரே வழி சுதந்திரமானதும் வளம் பெறக் கூடியதுமான பாலஸ்தீனம் ஒன்றைக் காண்பதேயாகும், என்று அவர் கூறினார்.

இந்தச் செய்தியைச் சொல்வதற்கு ஒபாமா இஸ்ரேலியப் பாராளுமன்றத்தைப் பயன்படுத்துவதை விடுத்து, இஸ்ரேலிய இளைஞர், யுவதிகள் குழுமியிருந்த அரங்கமொன்றையே தெரிந்தெடுத்ததைக் காணக்கூடியதாக இருந்தது. அவரின் அந்தப் பேச்சைக் கேட்ட இஸ்ரேல் இளஞ்சந்ததியினர் வரவேற்று ஆரவாரம் செய்தனர். அடிக்கடி எழுந்து நின்று கரகோஷம் செய்தனர். இஸ்ரேலிய மொழியில் இருந்தும் மத வரலாற்றில் இருந்தும் பல சொற்றொடர்களை தனது பேச்சின் இடையே புகுத்திய ஒபாமா, இஸ்ரேல் தரப்பிலும் பாலஸ்தீனத் தரப்பிலும் இருக்கும் கடும்போக்காளர்களிடமிருந்து தனது வேண்டுகோளுக்கு கண்டனங்கள் வருமென்பதையும் முன்னுணர்ந்திருந்தார். தீவிரவாதிகளின் குரல்களை விடவும் இஸ்ரேலிய இளைஞர், யுவதிகளின் குரல்கள் கூடுதலான அளவுக்கு ஓங்கி ஒலிக்க வேண்டுமென்று அவர்களிடம் ஒபாமா வேண்டிக் கொண்டார். காந்தீய அழைப்பொன்றையும் அவர் விடுத்தார். அவ்வாறு செய்வது ஒபாமாவின் ஒரு முத்திரையாக மாறியிருப்பதையும் அவதானிக்கக்கூடியதாக இருக்கிறது. 'இளையசந்ததியினர் தாங்கள் காண விரும்புகிற மாற்றத்தைத் தாங்களாகவே தோற்றுவிக்க வேண்டும், என்பதே அந்த அழைப்பாகும். தங்களது அபிலாசைகளை அடைவதற்கான ஒரு மார்க்கமாக வன்முறையை பல இன்று பாலஸ்தீனர்கள் இப்போது நிராகரிக்கிறார்கள் என்பதைச் சுட்டிக் காட்டி ஒபாமா இஸ்ரேலியர்களுக்கு ஒரு உற்சாகத்தையும் கொடுத்தார்.

ஐக்கிய நாடுகள் பொதுச்சபையில் உறுப்புரிமை அல்லாத அவதானி அரசு என்ற அந்தஸ்தை பாலஸ்தீனம் பெற்றுவிட்டது. மேலும், பாலஸ்தீனர்கள் மத்தியிலான உயர்ந்த பிறப்பு வீதம் காரணமாக இஸ்ரேலில் உள்ள அரபுக்களின் எண்ணிக்கை யூதர்களின் எண்ணிக்கையைத் தாண்டிவிடக்கூடிய நிலைமையும் காணப்படுகிறது. அவ்வாறு ஆகும்பட்சத்தில், இஸ்ரேலில் ஜனநாயகம் நிலைபெறுமானால் அரபுக்களின் அரசியல் ஆதிக்கம் ஏற்படலாம். அல்லது ஜனநாயகம் மதிக்கப்படாவிட்டால், பழைய தென்னாபிரிக்கா போன்று இன ஒதுக்கல் ஆட்சியொன்றே உருவாகும். அதனால், மத்திய கிழக்கு நெருக்கடிக்கு 'இரு அரசுகள்' தீர்வு மிகவும் நியாயபூர்வமானதாக இருக்கும். அத்தகைய தீர்வைக் காண்பதை நோக்கி இஸ்ரேலியர்களை எந்தளவுக்கு ஒபாமாவினால் தனது இறுதிப் பதவிக்காலத்தில் வழிக்குக் கொண்டு வரக்கூடியதாக இருக்கும்? இது முக்கியமான ஒரு கேள்வியாகும். ■



டெல்அவீவில் இஸ்ரேல் பிரதமர் நெதான்யாகு, ஜனாதிபதி ஷிமோன் பெரஸுடன் ஒபாமா



மேற்கு ஆற்றங்கரையின் ரமல்லாவில் பாலஸ்தீன அதிகார சபையின் ஜனாதிபதி அப்பாஸுடன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவுக்குப் பிறகு

உள்நாட்டு அரசியல்




# சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தலை எதிர்நோக்கும் இலங்கை அரசு

ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட 2013 தீர்மானம் அதன் வார்த்தைப் பிரயோகங்களிலும் உள்ளடக்கத்திலும் கடந்த வருடத்தைய தீர்மானத்தையும் விட வலிமை வாய்ந்ததாக அமைந்திருக்கிறது. இத்தீர்மானம் இலங்கை அரசாங்கத்துக்கு தெளிவானதொரு செய்தியை அனுப்பியிருக்கிறது. கடந்த வருடத்தைய இலங்கையின் நிகழ்வுப் போக்குகள் நல்லிணக்கத்தை மேம்படுத்தவில்லை என்றும் 2012 மார்ச் தீர்மானத்தின் மூலமாக வேண்டப்பட்டவாறு கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதில் போதுமான முன்னேற்றங்கள் காணப்படவில்லை என்றும் சர்வதேச சமூகம் மிகவும் துலத்தமாக இலங்கை அரசாங்கத்துக்குச் சொல்லிக் கொண்டிருக்கிறது என்பது முதலாவதும் முக்கியமானதுமான செய்தியாகும். நல்லிணக்கம் என்பது காலத்தை எடுக்கும் ஒரு செயன்முறை என்கிற அதேவேளை, நல்லிணக்கம் தொடர்பில் இதுகாலவரையில் மேற்கொள்ளப்பட்டிருக்கக்கூடிய நடவடிக்கைகளின் திசைமார்க்கம் அல்லது போக்கு வரும் நாட்களில் நல்லவை நடக்குமென்ற நம்பிக்கையுணர்வைத் தருபவையாக இல்லை என்பது உள்ளார்ந்தமாகவும் சில சந்தர்ப்பங்களில் வெளிப்படையாகவும் சொல்லப்படுகிறது. இலங்கை அரசாங்கம் அதன் நிலைப்பாடு தொடர்பில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்காவின் (Global South) முன்னணி நாடுகளின் நம்பிக்கையை வென்றெ


கலாநிதி பாக்கியசோதி சரவணமுத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

டுக்கத் தவறிவிட்டது என்பது கவனிக்கத்தக்கது. இந்தியா, ஜப்பான், தென்கொரியா, மலேசியா, சியராலியோன், பொட்ஸ்வானா, பிரேசில் மற்றும் ஆர்ஜன்டீனா ஆகிய நாடுகள் ஒன்றில் ஜெனீவா தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்திருக்கின்றன அல்லது வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாமல் இருந்துவிட்டன. இந்தப் பாணியிலான வாக்களிப்பு தனக்கெதிரான மேற்குலக சதி முயற்சிகள் பற்றிய இலங்கை அரசாங்கத்தின் வாதங்களை பெறுமதியற்றவையாக்கிவிட்டதுடன், இலங்கையின் வெளியுறவுக்கொள்கையின் ஒரு பெரிய தோல்விக்குச் சான்று பகருகின்றது. ஜெனீவாவில் ஆதரவாக நடந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்வதற்காக இந்த நாடுகளுக்கு வெளியுறவு அமைச்சர் விஜயங்களை மேற்கொண்டிருந்தார். அத்துடன் ஜப்பானுக்கு வேறு யாருமல்ல ஜனாதிபதியே கூட சென்றுவந்தார் என்பது குறிப்பிடத்தக்கது.

மேலும், ஜெனீவாத் தீர்மானம் கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கெனக் கூறிக் கொண்டு அரசாங்கம் வகுத்த செயற்திட்டத்தின் குறைபாடுகளை வெளிச்சம் போட்டுக் காட்டியதுடன், ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரின் அறிக்கை மீது கவனத்தைக் குவித்திருந்தது. பொறுப்புடைமை மற்றும் உண்மை கண்டறியும் பொறிமுறை தொடர்பில் நம்பகத்தன்மை வாய்ந்த, சுயாதீனமான விசாரணைகள் குறித்த அவரது கோரிக்கை மீதும் தீர்மானம் அக்கறை காட்டியிருக்கிறது. அதிகாரப் பரவலாக்கலை அடிப்படையாகக் கொண்ட அரசியல் இணக்கத்தீர்வொன்றுக்கான தேடுதல் குறித்தும் முக்கியமாகக் கவனம் செலுத்தியிருக்கும் தீர்மானம் 2013 செப்டெம்பரில் வடமாகாண சபைத் தேர்தல் நடத்தப்படுவது பற்றிய அறிவிப்பை வரவேற்கிறது. எதிர்வரும் செப்டெம்பரில் ஒரு வாய் மூல அறிக்கையையும் 2014 மார்ச்சில் இறுதியான விரிவான அறிக்கையையும் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகரிடமிருந்து ஜெனீவாத் தீர்மானம் வேண்டி நிற்கிறது. இறுதி அறிக்கை மீது ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் விவாதம் இடம்பெறும்.

இத்தீர்மானம், சிலர் எதிர்பார்த்ததைப் போன்று வலிமையானதாக இல்லாவிட்டாலும் கூட, இலங்கையை மனித உரிமைகள் பேரவையின் நிகழ்ச்சி நிரலில் தொடர்ந்து வைத்திருக்கப்போகிறது. அதனால், பேரவையின் உறுப்பு நாடுகளைத் திருப்திப்படுத்தக்கூடியதாக இலங்கையின் செயற்பாடுகளில் முன்னேற்றங்கள் ஏற்படவில்லையானால், மேலும் கடுமையான தீர்மானங்கள் கொண்டுவரப்படுவதற்கும் நடவடிக்கைகள் எடுக்கப்படுவதற்கும் வாய்ப்புகளை தீர்மானம் கொண்டிருக்கிறது. இந்த விடயத்தை இந்தியாவின் பிரதிநிதி ஜெனீவாவில் உரையாற்றிய போது பிரத்தியேகமாகச் சுட்டிக்காட்டியிருந்தார். தீர்மானத்தை இந்தியா நீர்த்துப் போகச் செய்ததாக ஊடகங்களில் செய்தி வெளியாகிய போதிலும், அதேபோன்று தமிழ் நாட்டில் போராட்டங்கள் தீவிரமடைந்த காரணத்தினாலேயே இந்தியா ஜெனீவாவில் தீர்மானத்துக்கு ஆதரவாக வாக்களித்தது என்று ஆய்வாளர்கள் கூறுகின்றபோதிலும், இங்கு முக்கியமான விடயம் என்னவென்றால், ஆசிய, ஆபிரிக்க, மற்றும் லத்தீன் அமெரிக்க பிராந்தியங்களின் முக்கிய நாடுகளினதும் ஆதரவையும் நெருங்கிய அயல் நாட்டின் ஆதரவையும் இலங்கை அரசாங்கம் இழந்துவிட்டதேயாகும். இடம்பெற்றிருக்கக்கூடிய சர்வதேச மனித உரிமை மீறல்கள், சர்வதேச மனிதாபிமான சட்ட மீறல்கள் தொடர்பிலான சுதந்திரமானதும் நம்பகத்தன்மையானதுமான விசாரணைகள் விடயத்தில் சர்வதேச சமூகத்தை திருப்திப்படுத்த வேண்டிய தேவையை இந்தியா வலியுறுத்தியமை மிகவும் முக்கியமானதாகும். இது ஒரு சர்வதேச விசாரணையாக இருக்க வேண்டும் என்று மனித உரிமைகள் பேரவையில் மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் சமர்ப்பித்த அறிக்கையில் குறிப்பிட்டிருந்தார். 2012 தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்ட நிபந்தனையின் பிரகாரம் இந்த அறிக்கையை அவர் கடந்த மாதக் கூட்டத் தொடரில் சமர்ப்பித்தார். விசாரணைகளைப் பொறுத்தவரை, இலங்கை அரசாங்கத்தின் இதுகாலவரையான நடத்தைகளையும் மனித உரிமை மீறல்களுக்குப் பொறுப்பானவர்கள் என்று சந்தேகிக்கப்படுபவர்கள் அல்லது குற்றஞ்சாட்டப்படுபவர்கள் சட்டத்தில் இருந்து விடுபாட்டு உரிமை பெற்றவர்கள் போன்று சுதந்திரமாகத் திரியக்கூடிய சூழ்நிலை காணப்படும் கலாசாரத்தையும் அடிப்படையாகக் கொண்டு நோக்கும் போது அரசாங்கம் இது விடயத்தில் எவ்வாறு நடந்துகொள்ளுமென்பதைப் பொறுத்திருந்தே பார்க்க வேண்டியிருக்கிறது. தவறும் பட்சத்தில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் மேலும் நடவடிக்கைகள் எடுக்கப்படக்கூடிய சாத்தியங்களும் இலங்கை அரசாங்கம் சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்தப்படக்கூடிய சாத்தியங்களும் இருக்கின்றன என்பதிற் சந்தேகமில்லை.

ஜெனீவா தீர்மானத்தினால் உடனடியாக ஏற்படுத்தக்கூடிய தாக்கம் இவ்வருடம் நவம்பரில் இலங்கையில் நடத்தப்படவிருக்கும் பொதுநலவரசு நாடுகளின் உச்சி மகாநாட்டின் மீதானதாகவே இருக்கும். இந்த மகாநாட்டில் கலந்து கொள்ளப் போவதில்லை என்று கனடா பிரதமர் ஸ்ரீபன் ஹார்பர் ஏற்கனவே அறிவித்துவிட்டார். இந்தியப் பிரதமர் கலாநிதி மன்மோகன்சிங்கும் மகாநாட்டில் கலந்துகொள்ளாமல் விடக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. அதைவிட, பிரிட்டிஸ் பிரதமர் டேவிட் கெமரூன் பங்கேற்காதிருக்கக்கூடிய சாத்தியங்கள் மிக அதிகமாக இருக்கின்றன எனலாம். பக்கிங்ஹாம் மாளிகையில் இருந்து உத்தியோகபூர்வ அறிவிப்பு எதுவும் வெளியிடப்படவில்லை என்ற போதிலும், (பிரிட்டனின் முன்னாள் காலனி நாடுகளை உள்ளடக்கிய இந்த)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுநலவரசு அமைப்பின் தலைவியான எலிசபெத் மகாராணியார் மகாநாட்டில் கலந்து கொள்ளப்போவதில்லை என்று பரவலாக ஊகிக்கப்படுகிறது. இத்தகைய நிலைவரங்கள் சகலதிற்கும் முக்கியகாரணி மனித உரிமைகள் மற்றும் நல்லிணக்கம் தொடர்பிலான ராஜபக்ஷ அரசாங்கத்தின் நடத்தைகளேயாகும்.

பொதுநலவரசு உச்சி மகாநாட்டில் பெரும்பாலான நாடுகளின் தலைவர்கள் அல்லது முழுத்தலைவர்களும் கலந்து கொள்வார்களேயானால், அதை, ஜெனீவா தீர்மானத்தைப் பயன்படுத்தி தன்னை சர்வதேச ரீதியில் தனிமைப்படுத்துவதற்கு மேற்கொள்ளப்படுகிற முயற்சிகளை முறியடிக்கக்கூடிய ஒரு பெரிய வெளியுறவுக் கொள்கை வெற்றியாக இலங்கை அரசாங்கம் கருதும் என்பதிற் சந்தேகமில்லை. உச்சி மகாநாட்டைப் பொறுத்தவரை சகலதுமே சுமுகமாகப் போகுமானால், அதுமுடிவடைந்த கையோடு ஜனாதிபதித் தேர்தலையும் பாராளுமன்றத் தேர்தலையும் அரசாங்கம் நடத்தக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. இந்த மாதம் லண்டனில் பொதுநலவரசு அமைச்சர்கள் மட்ட செயற்பாட்டுக்குழுவின் கூட்டம் நடைபெறவிருக்கிறது. அதில் இலங்கை சம்பந்தப்பட்டவிவகாரம் ஆராயப்படவிருக்கிறது. கனடா இது விடயத்தில் வெளிப்படையாகவே முன்னணியில் நிற்கிறது. வேறு நாடுகளும் தனிப்பட்ட முறையில் அனுதாபமாக இருக்கக்கூடும். ஆனால், உதாரணத்துக்கு அவுஸ்திரேலியா தேர்தல் வருடத்தில் குடியேற்றவாசிகள் பிரச்சினை மீது கவனம் செலுத்தி, இலங்கையின் ஒரு ஆதரவு நாடாக செயற்படுவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

கொழும்பில் பொதுநலவரசு உச்சி மகாநாட்டை நடத்துவதில் இருக்கக்கூடிய அபத்தத்தைச் சுட்டிக்காட்டி பொதுநலவரசு நாடுகளில் பெருவாரியான பத்திரிகை ஆசிரிய தலையங்கங்களையும் கட்டுரைகளையும் வெளியிட்டிருக்கின்றன. மனித உரிமைகள் விடயத்தில் இலங்கை அரசாங்கத்தின் செயற்பாடுகள், பிரதம நீதியரசர் பதவி நீக்கம் போன்ற பிரச்சினைகள் பொதுநலவரசின் அடிப்படைக் கோட்பாடுகளுக்கும் விழுமியங்களுக்கும் பெரும் அவமதிப்பாக அமைந்திருக்கின்றன என்பதே வாதமாக முன்வைக்கப்படுகிறது. உச்சி மகாநாடு இலங்கையில் நடைபெற்றால், அடுத்த இரு வருடங்களுக்கு பொதுநலவரசு அமைப்பின் தலைமைப் பதவி இலங்கையிடமே இருக்கும். அவ்வாறு அமையும் பட்சத்தில் மனித உரிமை மீறல்களைச் செய்ததாக குற்றஞ் சாட்டப்படக்கூடிய வேறு உறுப்பு நாடுகளுடனான பிரச்சினையை அந்த இருவருட காலத்திலும் எந்த இலட்சணத்துடன், எந்தளவு நம்பகத்தன்மையுடன் பொதுநலவரசு அமைப்பு கையாள முடியும்?

மெதுமெதுவாக, ஆனால் நிச்சயமாக இலங்கை அரசாங்கம் சர்வதேச தனிமைப்படுத்தலை எதிர்நோக்குகிறது. இலங்கைக்கு எதிராக தண்டனை இயல்புடைய நடவடிக்கைகளும் எடுக்கப்படக்கூடிய சாத்தியங்கள் இருக்கின்றன. இராணுவ மயமாக்கலை நிறுவனமயப்படுத்துவதையும் மதத் தீவிரவாதத்துக்கு அனுசரணையாகச் செயற்படுவதையும் விடுத்து, இலங்கை அரசாங்கம் நல்லிணக்கத்துக்கு முன்னுரிமை கொடுக்க வேண்டும். நல்லிணக்கத்தில் பற்றுறுதி கொண்டிருப்பதை நிரூபிக்கக்கூடிய சான்றுகளைக் காட்டவேண்டும். இதை வெறுமனே வாயளவில் அல்ல, செயலில் காட்ட வேண்டும். மோதலினதோ அல்லது நெருக்கடியினதோ காரணிகள் இனிமேலும் தொடர்ந்து நீடிக்காத அல்லது மீளவும் உருவாகாத ஒரு பின்போர்க்கால கட்டத்துக்கு நகருவதற்கான வாய்ப்பு இலங்கைக்கு இன்னமும் இருக்கிறது. இதைப் புரிந்துகொண்டிருப்பதாக அரசாங்கம் இன்னமும் காட்டிக் கொண்டதாக இல்லை. அவ்வாறு செய்யத் தவறுவதன் மூலம் எம்மெல்லோருக்குமே கெடுதிதான் மிஞ்சும்! ■

---

*(61ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

இந்தப் போக்கு அனைத்துப் படங்களிலும் இந்துத்துவ மனநிலையாக வெளிப்படுகிறது. பரதேசிப் படத்தில் சிறுபான்மையினருக்கு எதிராக விசமப்பிரசாரம் செய்யப்பட்டிருக்கிறது. மருத்துவம் பார்க்க வந்த டாக்டர்கள் கிறிஸ்தவ மதப்பிரசாரம் செய்வதாகக் கூறப்படுகிறது. ஆணும் பெண்ணும் ஆடிப்பாடி கிறிஸ்துவத்தைப் பரப்புவதாகவும் பிரசாரம் முடிந்தவுடன் கேளிக்கைகளில் ஈடுபடுவதாகவும் காட்டப்படுகின்றது. திட்டமிட்டு கிறிஸ்தவர்களை இழிவுபடுத்த வேண்டும் என்ற நோக்கோடு காட்சிகள் அமைக்கப்பட்டுள்ளன.


இப்படத்தில் ஒளிப்பதிவாளர் செழியன் சினிமாப் பிரக்ஞை உள்ளவர். பன்னாட்டு சினிமாக்களைப் பார்க்கும் பயிற்சியும் அனுபவமும் உள்ளவர். ஆனால் இவரது அனுபவமும் கற்பனையும் இப்படத்தில் முழுமையாக வெளிப்படவில்லை. இவர் சுதந்திரமாக இயங்குவதற்கான சூழலை உருவாக்கிக் கொடுப்பதில் இயக்குனர் கவனம் செலுத்தவில்லை. அல்லது அவரது ஆளுமை அதற்குத் தடையாக இருந்துள்ளது. எவ்வாறாயினும் இதுபோன்ற படத்தை எடுக்கத் துணிந்தது பாராட்டத்தக்கது. ஆனால் 'எரியும் பனிக்காடு' எனும் நாவலின் போக்கை அதன் உள்ளரசியலை விளங்கி அதற்கு உண்மையாக உழைத்திருந்தால் நல்ல படம் தமிழில் குறிப்பிடத்தக்க படம் கிடைத்திருக்கும்.

இவை யாவற்றையும் மீறி திரைக்கதை உருவாக்கத்திலும் அக்கறை காட்டியிருந்தால் அதற்குச் சமமாக காட்சிகள் இன்னும் அழகாகவும் நுட்பமாகவும் விரிவுபட்டிருக் கும். திரைக்கதையின் பல்வேறு அம்சங்கள் முழுமையாக உள்வாங்கப்பட்டிருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இந்திய-இலங்கை உறவுகள் குறித்து இரு இராஜதந்திரிகள்




குல்தீப் நாயர்

இந்தியாவும் இலங்கையும் ஒரு நீரிணையினால் மாத்திரமே பிரிக்கப்பட்டிருக்கின்றபோதிலும், ஒருபோதுமே நெருக்கமாக இணங்கச் சென்றதில்லை. இது பல நூற்றாண்டுகளுக்கு முன்னர் இங்கிலாந்தும் பிரான்ஸும் ஒன்றுடன் ஒன்று போருக்குப் போனதைப் போன்றதேயாகும். உண்மையில் கொழும்பும் புதுடில்லியும் தூர விலகியிருக்கிற இரு அயலவர்கள் உள்நோக்கங்களுடன் செயற்படுவதாக ஒன்றை மற்றது சந்தேகிக்கிற அளவுக்கு இரு நாடுகளுக்கும் இடையேயான அவநம்பிக்கை ஆழமானதாக இருக்கிறது. ஆனால், அவற்றின் பகைமை நிலப் பிராந்தியம் தொடர்பானதோ அல்லது கொள்கை தொடர்பானதோ அல்ல. இலங்கையில் வாழும் தமிழர்கள் பாரபட்சமாக நடத்தப்படுகின்றமை தொடர்பானதேயாகும்.


நாட்டுக்குள் தமிழர்கள் சுயாட்சியை அனுபவிக்கக் கூடிய வகையிலான ஏற்பாடொன்றை வகுப்பதில் இலங்கை ஈடுபட்டு வருகின்றது என்ற எண்ணத்தை புதுடில்லிக்கு கொழும்பு பல வருடங்களாகக் கொடுத்துவந்திருக்கிறது. பல தசாப்

## 'தமிழரின் அபிலாசைகளை சிங்களவர்கள் திருப்திப்படுத்தியேயாக வேண்டும்'

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# 'புதிய உடன்படிக்கைக்கான தருணம் இது'



கே.கொடகே

இந்திய காங்கிரஸ் கட்சியின் தலைவி சோனியா காந்தி அண்மையில் தெரிவித்த கருத்து இலங்கையில் உள்ள எங்களை அதிர்ச்சிக்கும் ஏமா ற்றத்துக்கும் உள்ளாக்கியிருக்கிறது. இலங்கைத் தமிழர்களுக்கு வார்த்தைகளில் வர்ணிக்க முடியாத அட்டூழியங்களைச் செய்ததாக அவர் இலங்கையைக் கண்டனம் செய்திருக்கிறார். கடந்த தேர்தல்களில் காங்கிரஸ் கட்சி வெற்றிபெற்ற பிறகு இந்தியாவின் பிரதமராக வருவதற்கான வாய்ப்பு இருந்தபோதிலும், அதைப் புறந்தள்ளிவிட்டு, மன்மோகன் சிங்கை பிரதமர் பதவிக்குக் கொண்டு வந்தமைக்காக சோனியா காந்திமீது நாம் பெருமதிப்பு வைத்திருக்கிறோம். ஆனால், இலங்கை நிலைவரங்கள் குறித்து அவர் அண்மையில் தெரிவித்த குறிப்பிட்ட சில கருத்துகள் எமக்குப் பெரும் அதிருப்தியைக் கொடுத்திருக்கின்றன என்பதை மனவேதனையுடன் கூறிக்கொள்கிறேன். எமது பிரச்சினையைப் பற்றி அவர் என்ன தெரிந்து வைத்திருக்கிறார் என்பதை அறிந்து கொள்வது அவசியமில்லாமல் இருக்கக்கூடும். ஆனால், தமிழ்த்தீவிரவாதிகளுக்கு ஆயுதங்களை வழங்கி, பயிற்சியளித்ததன் மூலமாக இனநெருக்கடியை ஒரு பயங்கரவாதப் போராக மாற்றி எமது நாட்டு க்கு பேரழிவை ஏற்படுத்தியவர் அவரது மாமியார் இந்திராகாந்தி என்பது அவருக்குத் தெரிந்திருக்கட்டும். இதைப்பற்றி மேலும் நிறைய விடயங்களைத் தெரிந்து கொள்ள வேண்டுமானால், சோனியா காந்தி, குறை ந்த பட்சம் 1984 பெப்ரவரி இந்தியா ருடே சஞ்சிகையாவது வாசிக்கவேண்டும். அல்லது அந்த நேரத்தில் டில்லியில் இருந்த சேகர் குப்தாவை அல்லது வேறுபவரைக் கேட்டுப்பார்க்க வேண்டும்.

சோனியா காந்தியின் காலஞ் சென்ற கணவர் ராஜீவ் காந்தியை, அவர் அதிகாரத்தில் இல்லாத காலகட்டத்தில் (அப்போது விஸ்வநாத் பிரதாப்சிங் பிரதமர்) பல தடவைகள் சந்திக்கும் வரப்பிரசாதத்தைப் பெற்றவன் என்ற முறையில் கூறுகிறேன். அவர் ஒருபோதுமே இத்தகைய கருத்தைத் தெரிவித்திருக்க மாட்டார். டில்லியில் ராஜீவ் காந்தியைச் சந்தித்த விடுதலைப் புலிகளின் செயற்பாட்டாளர்கள், தமிழ் நாட்டுக்கு பிரசாரம் செய்யவரும் போது எந்த ஆபத்தும் ஏற்படாது என்று அவரைச் சூழ்ச்சித்தனமாக நம்பவைத்தமை பெரும் வருத்தத்துக்குரியது. விடுதலைப் புலிகள் அவருக்கு என்ன செய்தார்கள் என்பது எம்மெல்லோருக்கும் தெரியும். இந்தியாவினதும் ஏன் உபகண்டத்தினதும் வரலாற்றையே மாற்றியமைத்த அந்தக் கொடுஞ்செயலுக்காக விடுதலைப் புலிகளை கருணாநிதியோ அல்லது ஜெயலலிதாவோ பகிரங்கமாகக் கண்டிக்கவில்லை.

தங்கள் நீடித்த போரின் இறுதியில் (நான்கு வருடங்களுக்கு முன்னர்) விடுதலைப் புலிகள் ஒட்டு மொத்தமாக ஒழித்துக் கட்டப்பட்ட போது இந்த நம்பிக்கைக்கு மேலும் உத்வேகம் ஏற்பட்டது. ஆனால் ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ இரு மாதங்களுக்கு முன்னர் சுதந்திர தினத்தன்று நாட்டு மக்களுக்கு ஆற்றிய உரையில் சகல நம்பிக்கைகளையும் சிதறடித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. வடக்கு, கிழக்கில் வாழும் தமிழர்களுக்கு எந்த வகையான அரசியல் சுயாட்சியையும் கொடுக்க முடியாது என்று அவர் அப்போது திட்டவட்டமாக அறிவித்தார்.

ஜனாதிபதி ராஜபக்ஷவின் இந்த அறிவிப்பு புதுடில்லிக்கு பெரும் அதிர்ச்சியைக் கொடுத்தது. ஆனால்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இன்னமும் கூட அது அவர் இறுதியில் தனது வாக்குறுதியை நிறைவேற்றுவதற்கு நடவடிக்கை எடுப்பார் என்று நம்புகிறது. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தின் கீழான ஏற்பாடுகளை அடிப்படையாகக் கொண்ட தீர்வொன்றைக் காண்பதே ராஜபக்ஷ அளித்த வாக்குறுதியாகும். 1987 ஜூலை இந்திய- இலங்கை சமாதான உடன்படிக்கையையடுத்து இலங்கையின் அரசியலமைப்புக்குக் கொண்டு வரப்பட்ட இத்திருத்தத்தில் நாட்டின் இறுக்கமான ஒற்றையாட்சிக்குள் பிராந்திய சுயாட்சியை வழங்குவதற்கான ஏற்பாடுகள் இருக்கின்றன. தமிழ் மக்களின் அரசியல் அபிலாசைகளுக்கான ஒரு அங்கீகாரமாக இந்த ஏற்பாடு கருதப்படுகிறது.

சுயாட்சி அந்தஸ்து நிராகரிப்பு ஜனாதிபதியின் சகோதரரான சகல வல்லமையையும் கொண்ட பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவினால் ஆமோதிக்கப்பட்டிருக்கிறது. அவர் மேலும் ஒரு படி சென்று, 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்தி வருகிறார். இது தமிழ் மக்களின் அபிலாசைகளைப் பொறுத்தவரை அரசாங்கத்தின் உண்மையான நோக்கம் எத்தகையதாக இருக்கிறது என்பதை தெளிவுபடுத்துவதாக அமைகிறது. இணைக்கப்பட்டிருந்த வடக்கு - கிழக்கு மாகாணத்தை ஏற்கனவே அரசாங்கம் துண்டித்துவிட்டது. கிழக்கு மாகாணத்தில் இரு தடவைகள் தேர்தல்களை நடத்தி அரசாங்கம் அதன் தெரிவிலான ஒரு நிருவாகத்தை பதவியிலமர்த்தியிருக்கிறது. இனத்துவத்தை அடிப்படையாகக் கொண்டு வேறுபட்ட நிருவாகங்களைக் கொண்டிருப்பது இலங்கையில் நடைமுறைச் சாத்தியமானதல்ல என்று ஜனாதிபதி ராஜபக்ஷ கூறியிருக்கிறார். அவரைப் பொறுத்தவரை, சகல சமூகங்களும் சமத்துவமான உரிமைகளுடன் நாட்டில் வாழுவதே தீர்வாகும். தமிழர்களுக்கென்று பிரத்தியேகமாக எதுவும் கிடையாது அவரின் கணிப்பில். ஆனால், தனது கொள்கையைப் பொறுத்தவரை இறுதியில் அவர் மிகவும் நேர்மையாகப் பேசியதையும் காணக்கூடியதாக உள்ளது. அதாவது, 13 ஆவது திருத்தத்தின் மீதான பெரும்பான்மைச் சிங்கள சமூகத்தின் வெறுப்பை ஜனாதிபதி உறுதிப்படுத்தியிருக்கிறார். இந்தியாவின் திணிப்பே அந்த 13 ஆவது திருத்தம் என்பதே சிங்களவர்களின் நிலைப்பாடு என்பதை அவர் வெளிப்படையாகவே கூறிவிட்டார்.

இந்திய-இலங்கை சமாதான உடன்படிக்கையைத் தொடர்ந்து தமிழர்களின் கட்டுப்பாட்டிலான ஒரு மாகாண அரசாங்கம் ஏற்படுத்தப்பட்டது. ஆனால், அது ஒரு போதுமே முறையாகச் செயற்படுவதற்கு அனுமதிக்கப்படவில்லை. விடுதலைப் புலிகளும் பல்வேறு தமிழ் தீவிரவாதக் குழுக்களும் கூட இதற்குப் பொறுப்பு. பருவமுறுவதற்கு முன்னராகவே அந்த மாகாண அரசாங்கம் சாகடிக்கப்பட்டதற்கு இந்திய அமைதி காக்கும் படைக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே மூண்ட சண்டையே காரணமாகும். அந்தச் சண்டை 1990 நடுப்பகுதியில் இலங்கையில் இருந்து இந்தியப் படைகளின் வாபஸுடன் முடிவுக்கு வர, இலங்கைப் படைகளுக்கும் விடுதலைப் புலிகளுக்கும் இடையே போர் மீண்டும் மூண்டது.

அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தை ரத்துச் செய்வதன் மூலமாக தமிழர்களுக்கான சுயாட்சி என்ற பிரச்சினையை ஒரேயடியாக முடிவுக்குக் கொண்டுவந்து விடலாம் என்று நினைத்து ராஜபக்ஷ அரசாங்கம் தன்னைத் தானே ஏமாற்றிக் கொள்ளக்கூடும். இது உண்மையில் தவறான அனுமானமேயாகும். இலங்கை அளித்த வாக்குறுதி நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமென்பதற்காக தமிழர்களும் அறிவு ஜீவிகளும் காத்துக்கொண்டிருக்கிறார்கள். சிங்கள மக்களுக்கு வேறு மாற்றுவழியில்லை. இப்போதோ எப்போதோ தமிழர்களின் அபிலாஷைகளை சிங்கள மக்கள் திருப்திப்படுத்தியேயாக வேண்டும்.

**அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தை ரத்துச் செய்வதன் மூலமாக தமிழர்களுக்கான சுயாட்சி என்ற பிரச்சினையை ஒரேயடியாக முடிவுக்கு கொண்டு வந்து விடலாம் என்று நினைத்து ராஜபக்ஷ அரசாங்கம் தன்னைத்தானே ஏமாற்றிக்கொள்ளக்கூடும்**

குடிமக்களுக்கு ஏற்பட்ட பயங்கரமான அவலங்களை இலங்கை இராணுவமோ விடுதலைப்புலிகளோ கணக்கில் எடுக்கவில்லை என்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. போரின் இறுதிக் கட்டத்தில் தாக்குதல் நடத்தப்படக்கூடாத வலயங்கள் என்று பிரகடனப்படுத்தப்பட்ட பகுதிக்குள் அகப்பட்டுக் கொண்ட குடிமக்கள் மீது இராணுவம் நடத்திய ஷெல் தாக்குதல்களில் குறைந்தபட்சம் 40 ஆயிரம் மக்கள் வேண்டுமென்றே கொல்லப்பட்டதாக தகவல்கள் வெளியாகியிருக்கின்றன.

சர்வதேச சமூகத்திற்கு அதிர்ச்சி தரத்தக்க வகையில், இராணுவ விசாரணை மன்றம் மேற்கொண்டது முற்றிலும் மனிதாபிமான நடவடிக்கையே என்றும் ஒரு குடிமகன் கூட கொல்லப்படாதிருப்பதை, காயப்படுத்தப்படாதிருப்பதை உறுதி செய்வதே நோக்கமாக இருந்தது என்றும் தீர்ப்புக் கூறியிருக்கிறது. அறிக்கை கையளித்திருக்கிறது தாக்குதல் சூனியப் பிரதேசம் தொடர்பில் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டுமென்பதைப் பொறுத்தவரை தளபதிகள் எல்லா வேளைகளிலும் உயர் தலைமையகத்திலிருந்து விடுக்கப்பட்ட உத்தரவுகளுக்கு இணங்கவே பணிந்து செயற்பட்டார்கள் என்றும் அந்த இராணுவ விசாரணை மன்றம் கூறியிருக்கிறது. தாக்குதல் சூனியப் பிரதே

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சத்திற்குள் தாக்குதல் நடத்துவதை தளபதிகள் தவிர்த்த போதிலும், அதற் குள் இருந்து விடுதலைப் புலிகள் தாக்குதல்கள் நடத்தினார்கள் என்றும் இந்த மன்றம் கூறுகிறது.

இது தான் உண்மையாக இருந் தால், சர்வதேச விசாரணையை ஜனா திபதி ராஜபக்ஷ ஏன் எதிர்க்கிறார்? ஐக்கிய நாடுகளினால் நியமிக்கப் பட்ட கமிட்டிக்குக் கூட கொழும்பு வருவதற்கு விசா வழங்கப்பட வில்லை, கொழும்பு உண்மையைக் கூறுவதையும் அதற்கு முகங்கொடுப் பதையும் காண புதுடில்லி இன்னமும் காத்துக்கொண்டிருக்கிறது. ■

அந்த நேரத்தில் ராஜீவ் காந்தியுடன் நெருக்கமாகப் பணியாற்றிய மணி சங்கர் ஐயர் எனது இந்தக் கருத்தை உறுதி செய்வார்.

நாம் பலவந்தப்படுத்தப்பட்டு இந் திய - இலங்கை உடன்படிக்கையில் கைச்சாத்திடவைக்கப்பட்டு 25 வரு டங்களுக்கும் கூடுதலான காலம் கடந்துவிட்டது. அது நடந்தது 1987 இல். இலங்கைக்குள் விமானங்களை அனுப்பி எமது ஆட்புல ஒருமைப் பாட்டை மீறி உணவுப் பொட்டலங் களை இந்தியா போட்டது. விடு தலைப் புலிகளை ஒழித்துக் கட்டும் தறுவாயை நாம் நெருங்கிய வேளை யில் வடமராட்சி இராணுவ நடவடிக் கையை நிறுத்தாவிட்டால், ஆக்கிர மிக்கப் போவதாகவும் இந்தியா அச்சுறுத்தியதையடுத்து ஜனாதிபதி ஜே.ஆர்.ஜெயவர்தனாவுக்கு வேறு வழியிருக்கவில்லை. இலங்கையில் தலையீடு செய்ததற்கான விலையை இந்தியா செலுத்த வேண்டியேற்பட் டது. ஆயிரத்து இரு நூறுக்கும் அதிக மான ஜவான்கள் விடுதலைப் புலிக ளினால் கொல்லப்பட்டனர். மேலும் சில ஆயிரம் ஜவான்கள் படுகாய மடைந்து ஊனமாகினர்.

சமத்துவமற்ற இரு தரப்புகளிடை யேயான அந்த உடன்படிக்கை முற்றி லும் அரசியல் ரீதியானது. இந்தியா வின் பாதுகாப்பு எல்லைக்குள் இல ங்கையைக் கொண்டுவந்து எம்மை யும் ஒரு பூட்டானாக மாற்றும் நோக் குடனானது. நான் முன்னதாகக் கூறி யதுபோன்று உடன்படிக்கை இல ங்கை மீது இந்தியாவினால் திணிக் கப்பட்டது. இதை பின்னர் அப்போ தைய உயர்ஸ்தானிகர் ஜே.என்.தீக் ஷித் ஊர்ஜிதம் செய்தார். இலங்கை யில் தன்னை ஒரு இந்திய வைஸ்ரா யாக நினைத்துக் கொண்டு செயற்பட் டவர்தான் அவர். எமது நாட்டில் சமா தானத்தையும் சகஜ நிலையையும் நிலை நிறுத்துவதற்கானதே உடன் படிக்கை என்று இந்தியா உரிமை கோரிக்கொண்டது. இனப் பிரச்சி னைக்குத் தீர்வு காண்பதற்கும் கிளர்ச் சியை முடிவுக்குக் கொண்டு வருவ தற்கும் இந்த உடன்படிக்கையின் மூலமாக தன்னை அர்ப்பணித்ததாக இந்தியா கூறிக் கொண்டது. ஆனால், பின்னோக்கிப் பார்ப்போமேயா னால், உடன்படிக்கை இனநெருக்க டிக்கும் மோதலுக்கும் புதிய பரிமா ணத்தைச் சேர்த்ததைப் புரிந்து கொள் ளக்கூடியதாக இருக்கும். உபகண்டத் தில் ஒரு பிராந்திய வல்லரசாக அங்கீ கரிக்கப்படவேண்டுமென்று நாட்டம் கொண்ட இந்தியாவுடனான எமது உறவுகளின் தன்மையையும் உடன்ப டிக்கை மாற்றிவிட்டது. வடக்கு, கிழ க்கு மாகாணங்கள் தமிழ் மக்களின் 'பாரம்பரியத் தாயகம்' என்று குறிப்பி டப்படுவதற்கும் உடன்படிக்கை வகை செய்தது. ஆனால், நாட்டின் வரலாற்றையும் குடிப்பரம்பலையும் அடிப்படையாகக் கொண்டு நோக் கும் போது நிலைமை அவ்வாறி ல்லை. அதிர்ஷ்டவசமாக உயர்நீதி மன்றம் இருமாகாணங்களினதும் இணைப்பைத் துண்டித்துவிட்டது.

தமிழ், இலங்கையின் ஒரு அர சகருமமொழியாகவும் பிரகடனம் செய்யப்பட்டது. இது உண்மையில் எப்போதோ செய்யப்பட்டிருக்க வேண்டும். தவறான வழிகாட்டலுட னான கீழ்த்தரமான தேசியவாதம் அதைத் தடுத்துவிட்டது. இந்திய - இலங்கை உடன்படிக்கையில் ஒரு சில நல்ல அம்சங்களும் இருந்தன. ஆனால் 'பரிமாறப்பட்ட கடிதங்கள்' எமது சுயாதிபத்தியத்தை சுற்றி



**இந்திய – இலங்கை சமாதான உடன்படிக்கை முற்றிலும் அரசியல் ரீதியானது. சமத்துவமற்ற இரு தரப்புகளுக்கு இடையேயான அந்த உடன்படிக்கை இந்தியாவின் பாதுகாப்பு எல்லைக்குள் இலங்கையை கொண்டு வந்து எம்மையும் ஒரு பூட்டானாக மாற்றும் நோக்குடனானது. இது இந்தியாவுடனான எமது உற வுகளின் தன்மையை மாற்றி விட்டது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளைத்துவிட்டது. ஜனாதிபதி ஜெயவர்தனாவும் பிரதமர் ராஜீவ் காந்தியும் பரிமாறிக்கொண்ட அந்தக் கடிதங்களினால் எம்மீது நிபந்தனைகள் திணிக்கப்பட்டன. இப்போது கூட எமது மக்களுக்கு அவை ஏற்புடையவையாக இல்லை. அவை எம்மீதான திணிப்பு. எமது நாட்டின் கௌரவத்தை நாம் மீட்டெடுக்க வேண்டியிருக்கிறது. இந்தியாவுக்கு நியாயப்பாடுடைய பாதுகாப்பு அக்கறைகள் இருந்தன. இப்போதும் இருக்கின்றன. ஆனால், அவை கையாளப்பட்டிருக்க வேண்டிய முறை இதுவல்ல. எமது நாடு தொடர்பில் இந்தியாவின் நோக்கங்கள் பற்றி கண்காணிப்புடன் அக்கறை கொண்டிருக்க வேண்டும். அதைப்போன்றே இந்தியாவின் பாதுகாப்பு மற்றும் கேந்திர முக்கியத்துவ நலன்கள் குறித்தும் நாம் மனதிற் கொண்டிருக்க வேண்டும். அக்கறை கொண்டிருக்க வேண்டும். இந்தியா ஒரு மானசீகமான பிரகடனத்தைச் செய்து, எமது உள்நாட்டு விவகாரங்களில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ (எந்த வகையிலும் எந்த வடிவிலும்) தலையிடுவதில்லை என்று உருக்குப்போன்ற உத்தரவாதத்தை எங்களுக்குத் தரவேண்டும். இது மீற முடியாத, புனிதத்தன்மை வாய்ந்த ஒன்றாக இருக்க வேண்டும்.

தமிழ் நாட்டில் உள்ள இந்தியப் பிரஜைகள் எமது பாதுகாப்பையும் ஸ்திரத்தன்மையையும் மலினப்படுத்தக்கூடிய வகையில் மேற்கொண்டு வருகிற நடவடிக்கைகளுக்காக இந்தியா முழுப் பொறுப்பையும் ஏற்க வேண்டும். விடுதலைப் புலிகளை ஒரு பயங்கரவாத இயக்கம் என்று இந்தியா 1992 ஆம் ஆண்டில் பிரகடனம் செய்த போதிலும், பல்வேறு மாறுவேடங்களில் அரசியல் மட்டத்தில் விடுதலைப் புலிகள் இந்தியாவில் தொடர்ந்து செயற்பட்டுக்கொண்டேயிருக்கிறார்கள். தமிழ் நாட்டில் உள்ளவர்களது உள்ளக அரசியல் விளையாட்டுகளில் எம்மைப் பகடைக்காயாக்கக்கூடாது. எமது நாட்டின் பாதுகாப்புக்காக வேறு எங்காவது நோக்குவதற்கு எம்மை நிர்ப்பந்திக்கக்கூடாது. எமது உறவுகள் சமநிலையானவையாக இருக்க வேண்டும். உறவுகள் இருதரப்புகளிலும் ஆக்கபூர்வமானவையாக இருக்க வேண்டும். உறவுகளை மேம்படுத்துவதற்கு நமது இரு நாடுகளும் கடுமையாகப் பாடுபட வேண்டும். எமக்கிடையிலான நெருங்கிய உறவுகளை யதார்த்த பூர்வமானவையாக்க இந்தியா குஜ்ரால் கோட்பாட்டை நடைமுறைப்படுத்த வேண்டும். 'இந்திரா கோட்பாட்டினால்' செய்யப்பட்டிருக்கக்கூடிய சேதத்தைச் சீர்செய்வதற்கு ஒரே வழி குஜ்ரால் கோட்பாட்டை நடைமுறைப்படுத்துவதேயாகும்.

தமிழ் நாடு அரசின் அண்மைக்கால நடவடிக்கைகளும் அவற்றுக்கு வளைந்து கொடுக்கின்ற போக்கும் இந்தியாவுக்கும் இலங்கைக்கும் இடையே சிறப்பான உறவுகள் நிலவுவதற்கு உதவியாக அமையப்போவதில்லை. எங்களை அற்பத்தனமாக நோக்கி டில்லி மலிவான அரசியல் விளையாட்டில் ஈடுபடுகிறது என்பதிற் சந்தேகமில்லை. இத்தகைய அணுகுமுறை இந்தியாவின் நலன்களுக்கோ அல்லது நாம் இரத்த உறவுகளைக் கொண்டிருக்கிற ஒரு நாட்டுடனான எமது உறவுகளின் நலன்களுக்கோ உகந்ததல்ல.ஆம். டில்லியின் மனப்போக்கு தவறானதும் ஆக்கபூர்வமற்றதுமாகும். போர் முடிவுக்கு வந்த பிறகு நாம் என்னென்னவெல்லாம் செய்திருக்கிறோம் என்பதை நேரில் பார்வையிட்டுத் தெரிந்து புரிந்துகொள்வதற்கு மேலும் சில தூதுக் குழுக்களை இந்தியா அனுப்பி வைக்க வேண்டும். எஞ்சியிருக்கக்கூடிய பணிகளையும் பூர்த்தி செய்து வடக்கில் தமிழ் மக்களுக்கு அர்த்த புஷ்டியான முறையில் அதிகாரத்தையும் உரிமைகளையும் வழங்குவதற்கு இலங்கை அரசாங்கத்துக்கு இந்தியா தெம்பைத்தர வேண்டும். மத்திய அரசில் எமது சிறுபான்மையினத்தவர்களுக்கும் ஒரு பங்கை உறுதிப்படுத்துவதற்கு எமக்கு உற்சாகத்தைத் தருவதாகவே இந்தியாவின் அணுகுமுறையிருக்க வேண்டும். நாம் இனப்படுகொலை செய்வதாக அறிவுமடைமையுடைய அண்ணா திராவிட முன்னேற்றக்கழக உறுப்பினர் ஒருவர் என்.டி.ரி.வி.யில் குற்றஞ்சாட்டினார். எமது தமிழ்ச் சகோதரர்களுக்கு உதவுவதல்ல, இந்தியாவுடனான எமது உறவுகளுக்கு பாதகத்தை ஏற்படுத்தி மலிவான அரசியல் ஆதாயத்தை அடைவதே அவர்களின் முழு நோக்கமுமாகும். ஜெனீவாவில் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் எம்மைக் கண்டனம் செய்வதற்கு நாட்டம் கொண்டதன் மூலமாக இந்தியா எந்தப் பயனையும் அடையவில்லை. இந்த நிலவரங்கள் சகலதையும் நிதானமாகக் கவனத்திலெடுத்து கூடுதலான அளவுக்கு நேர்மறையான பாத்திரமொன்றை வகித்து எமது நாட்டில் தனது பெறுமதியை மேம்படுத்த இந்தியா கடமைப்பட்டுள்ளது. ■

---

*(9ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

வடகொரியாவின் இளந்தலைவர் கிம்யொங் உன் அமெரிக்காவுக்கு எதிராக விடுத்திருக்கும் அச்சுறுத்தல்கள் எல்லாமே வீறாப்புப் பேச்சுகள் தான். அமெரிக்காவைச் சென்றடையக்கூடிய ஆற்றல் உள்ள அணுவாயுத ஏவுகணை வட கொரியர்களிடம் இருக்கக்கூடிய சாத்தியம் மிகமிக அரிது என்று அமெரிக்க ஜனாதிபதி பராக் ஒபாமாவின் தேசிய பாதுகாப்பு அதிகாரிகள் குழுவில் அண்மைக்காலம் வரை பணியாற்றிய அணுவாயுதப் பரவல் தடுப்பு விவகார நிபுணரான காரி சமோர் தெரிவித்திருக்கிறார். ''வடகொரியர்கள் தற்கொலை செய்வதைப் போன்ற காரியங்களில் ஈடுபடமாட்டார்கள் என்று நம்புகிறேன். அமெரிக்கா மீது மேற்கொள்ளப்படக்கூடிய எந்தவொரு தாக்குதலும் தங்களது நாட்டின் முடிவாக அமையும் என்பதை அவர்கள் நன்கறிவார்கள்'' என்று ஹாவார்ட் பல்கலைக் கழகத்தின் கென்னடி பாடசாலையில் தற்போது பணியாற்றும் சமோர் குறிப்பிட்டிருக்கிறார். *(ராய்ட்டர்ஸ்)* ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# வடமாகாண சபைத் தேர்தலைப்பற்றி ஆபத்தான சிந்தனைகள்

பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

**தமிழ்த் தேசியக்கூட்டமைப்பின் கட்டுப்பாட்டின் கீழ் வரக்கூடிய ஒரு மாகாணசபை ஒரு மத்திய அரசாங்கத்திற்கு அசௌகரியத்தை தரக்கூடிய நடவடிக்கைகளில் இறங்கக்கூடும் என்ற கவலை அரசாங்கத்திற்கு இருக்கிறது**



கலாநிதி ஜெஹான் பெரேரா

வடமாகாண சபைத் தேர்தலை இவ்வருடம் செப்டெம்பர் மாதத்தில் நடத்தப் போவதாக அரசாங்கம் பல்வேறு அரங்குகளில் உறுதியளித்து வந்திருக்கிறது. அண்மையில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் கூட்டத் தொடருக்கு சில நாட்கள் முன்னதாக ஜப்பானுக்கு மேற்கொண்ட விஜயத்தின் போது ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷ செப்டெம்பரில் இத்தேர்தலை நடத்துவதற்குத் திட்டமிட்டிருப்பதாக உறுதிமொழியை அளித்திருந்தார். அந்த விஜயத்தின் இறுதியில் ஜனாதிபதி ராஜபக்ஷவும் ஜப்பானியப் பிரதமர் ஷின்சோ அபேயும் கைச்சாத்திட்டு வெளியிடப்பட்ட கூட்டறிக்கையில் 'ஜனாதிபதியினால் ஏற்கனவே குறிப்பிடப்பட்ட அட்டவணைக்கு இணங்க வடமாகாண சபைக்கான தேர்தலை நடத்துவது உட்பட பல்வேறு செயற்பாடுகளின் ஊடாக (கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளைநடைமுறைப்படுத்துவதற்கான) தேசிய செயற்திட்டத்தை தொடர்ச்சியாகவும் முறையாகவும் நடைமுறைப்படுத்துவதில் தனக்குள்ள வலுவான பற்றுறுதியை ஜனாதிபதி வெளிக்காட்டினார் என்று கூறப்பட்டிருந்தது. ஜெனீவாவில் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத் திலும் வடமாகாண சபைத் தேர்தலை நடத்த வேண்டுமென்ற கோரிக்கை மீண்டும் வலியுறுத்தப்பட்டிருப்பதையும் காணக்கூடியதாக இருக்கிறது. இந்த உறுதிமொழி காப்பாற்றப்படவும் கூடும். மீறப்படவும் கூடும். இது ஒரு கறுப்பு, வெள்ளை விவகாரம். அரசாங்கம் கொடுக்கக்கூடிய அரைகுறையான அல்லது இடைநடுவான மறுமொழி எதுவும் கிடையாது.

ஆனால், இந்த உறுதிமொழியைக் காப்பாற்றுவதில் அரசாங்கம் எதிர்நோக்குகிற ஒருபெரிய பிரச்சினை உண்டு. வடமாகாண சபைக்கு நடத்தப்படக்கூடிய இத்தேர்தல் அரசாங்கமும் அதன் நேசசக்திகளும் வெற்றி பெறக்கூடிய ஒரு தேர்தல் அல்ல என்பதை அரசாங்கம் நன்கு அறியும். அண்மைக்காலத்தில் தமிழர்கள் பெரும்பான்மையாக வாழும் பகுதிகளில் நடத்தப்பட்டிருக்கக்கூடிய தேர்தல்களின் முடிவுகள் ஒரேமாதிரியாக பிரதான தமிழ்க் கட்சியான தமிழ்த் தேசியக் கூட்டமைப்புக்கு சார்பாகவே அமைந்திருக்கின்றன. தன்னிடமே முழு அதிகாரங்களையும் குவித்துக்கொள்ள விரும்புகிற ஒரு அரசாங்கத்தைப் பொறுத்தவரை, ஒரு மாகாண சபையில் அதிகாரத்தை இழப்பதென்பதோ அதிகாரத்தைப் பெற முடியாமற் போவதென்பதோ ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கலாம். ஒரு மாகாண சபை நிருவாகத்தை தமிழ்த்தேசியக் கூட்டமைப்பினரால் கைப்பற்றமுடியுமாக இருந்தால், நாட்டுடனும் உலகுடனும் பேசும்போது அது அவர்களுக்குக் கூடுதல் அளவிலான நியாயப்பாட்டைக் கொடுக்கும். தற்போது கூட்டமைப்பினரால் எம்.பி.க்கள் என்ற வகையில் பாராளுமன்றத்தில் மாத்திரமே பேசக்கூடியதாக இருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஆனால், அரசாங்கத்துக்கு மூன்றில் இரண்டு பெரும்பான்மைப் பலம் இருக்கிற பாராளுமன்றத்தில் கூட்டமைப்பு எம்.பி.க்களின் எண்ணிக்கை மிகவும் சிறியதேயாகும். ஆனால், மாகாண சபைத் தேர்தலில் அவர்கள் வெற்றி பெறுவார்களேயானால், மக்களால் தெரிவுசெய்யப்பட்ட ஒரு நிருவாகத்தினராக கூடுதல் அதிகாரத்துடன் அவர்களினால் பேசக்கூடியதாக இருக்கும்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைமையிலான ஒரு மாகாண சபை மத்திய அரசாங்கத்துக்கு அசௌகரியத்தைத் தரக்கூடிய நடவடிக்கைகளை எடுக்கக்கூடும் என்ற கவலை அரசாங்கத்துக்கு இருக்கிறது. உதாரணமாக, போரில் காணாமல் போனவர்களுக்கு நேர்ந்தது என்ன என்பதைக் கண்டறிய அரசாங்கம் நடவடிக்கைகளை எடுக்கவில்லை. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் கட்டுப்பாட்டில் இருக்கக்கூடிய மாகாண சபையொன்று காணாமல் போனவர்களுக்கு நடந்ததைக் கண்டறிவதற்கான ஒரு விசாரணையை முன்னெடுப்பதற்கான பொறிமுறையொன்றை ஏற்படுத்தக்கூடிய சாத்தியப்பாடுகள் உண்டு. போரின் போது இடம்பெற்ற மனித உரிமை மீறல்களை விசாரிக்க அந்த மாகாண சபை அதன் சொந்தத்தில் ஒரு ஆணைக்குழுவை நியமிக்கக்கூடும். சர்வதேச சமூகத்தினதும் புலம்பெயர் தமிழர்களினதும் ஆதரவை அந்த மாகாண சபை நிருவாகம் நாடக்கூடும். இந்த வகையான ஒரு கவலைதான் வடக்கில் அல்லது கிழக்கில் (மத்திய அரசாங்கத்துக்கு) விரோதமான மாகாண நிருவாகம் தேசிய நல்லிணக்கச் செயன்முறைகளுக்கு குந்தகமாக அமையலாம் என்ற வாதத்தை முன்வைப்பதற்கு பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ராஜபக்ஷவை நிர்ப்பந்தித்தது என்பதிற் சந்தேகமில்லை. அத்தகைய தொரு மாகாண நிருவாகம் விடுதலைப்புலிகளினால் தோற்றுவிக்கப்பட்ட மரபுரீதியான இராணுவச் சவாலைப் போன்ற அச்சுறுத்தலைத் தோற்றுவிக்கக்கூடும் என்று கூட பாதுகாப்புச் செயலாளர் 'த ஐலண்ட்' பத்திரிகைக்கு வழங்கிய செவ்வியொன்றில் குறிப்பிட்டிருந்தார் என்பது கவனிக்கத்தக்கது.

அதிகாரப் பரவலாக்கல் எவ்வாறு துஷ்பிரயோகம் செய்யப்படமுடியும் என்பதற்கு இலங்கையுடன் தொடர்புபட்ட விவகாரங்களில் தற்போது தமிழ் நாட்டில் மூண்டிருக்கிற நெருக்கடி ஒரு உதாரணம் என்றும் அரசியலமைப்புக்கான 13ஆவது திருத்தத்தின் கீழ் அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்ய வேண்டுமென்று வலியுறுத்துபவர்கள் தமிழ்நாட்டு நிலைவரங்களைப் பார்த்து தங்கள் நிலைப்பாடு பற்றி மறுபரிசீலனை செய்ய வேண்டும் என்றும் கோதாபய ராஜபக்ஷ கூறியிருக்கிறார். சில மேற்கு நாடுகளிலும் சார்பிலும் இங்கிலாந்தை மையமாகக் கொண்டியங்குகிற உலகத் தமிழர் பேரவையினால் பிரதிநிதித்துவப்படுத்தப்படுகிற விடுதலைப் புலிகளின் எச்சமிச்சங்கள் சார்பிலும் தமிழ் நாடு அரசு இந்திய மத்திய அரசாங்கத்துக்கு ஆணைகளைப் பிறப்பிக்கிறது. எந்த மாதிரியாக நடந்துகொள்ள வேண்டுமென்று அறிவுறுத்தல் விடுக்கிறது என்றும் பாதுகாப்புச் செயலாளர் கூட்டிக் காட்டுகிறார். சூழ்ச்சித்தனமாக செயற்படக்கூடிய ஒரு மாகாண நிருவாகத்தின் தயவில் இருக்க நாம் விரும்பவில்லை. சுயாதிபத்தியம் கொண்ட அரசால் அரசாங்கங்களுக்கு நெருக்குதல்களைக் கொடுக்க அல்லது செல்வாக்கின் கீழ் கொண்டுவருவதற்கு உள்நாட்டு சக்திகளை வெளிநாடுகள் பயன்படுத்துவதற்கான களங்களாக இத்தகைய மாகாண நிருவாகங்கள் அமையலாம் என்றும் பாதுகாப்புச் செயலாளர் குறிப்பிட்டிருக்கிறார்.

அரசாங்கத்தின் போர் வெற்றிக்கு அவர் வகித்த பாத்திரம் காரணமாக பெரிதும் மதிக்கப்படுகிற, பெருஞ் செல்வாக்குடைய ஒரு முக்கியஸ்தரான கோதாபய ராஜபக்ஷ ஜனாதிபதியின் இளைய சகோதரர். அவர் என்ன சொல்கிறாரோ அதை அரசாங்கம் அக்கறையுடன் கருத்திலெடுக்கும் என்பதில் சந்தேகமில்லை.

மறுபுறத்தில், உலகில் முகங்கொடுக்கவேண்டிய யதார்த்தங்கள் பல இருக்கின்றன என்பதை அரசாங்கம் விளங்கிக்கொள்ள வேண்டிய தேவையிருக்கிறது. தமிழ்நாடு இலங்கைக்கு நெருக்கமாக இருக்கிறது. அத்துடன் இலங்கையில் உள்ள தமிழர்களைப் பாதுகாக்க வேண்டுமென்கிற உணர்வைக் கொண்ட தேசியவாதம் ஒன்றும் தமிழ்நாட்டில் இருக்கிறது. அது தானாகவே இல்லாமற் போய்விடப் போவதில்லை. இலங்கை அரசாங்கம் தமிழர்களை சமத்துவமான பிரஜைகளாக, நேர்மையாக நடத்துகிறது என்று தமிழ்நாடு உணர்ந்தால் மாத்திரமே அது இல்லாமற்போகும். குறைந்தபட்சம் அரசாங்கம் நாட்டின் ஏனைய பகுதிகளில் செய்வதைப் போன்று, மாகாண சபை நிருவாகத்தையாவது வடமாகாணத்தில் ஏற்படுத்தி 13 ஆவது திருத்தத்தை நடைமுறைப்படுத்த வேண்டும். இதற்கு மேலதிகமாக, தேசிய நல்லிணக்கத்திற்கு உதவக்கூடியதாக கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் ஆக்கபூர்வமான விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதற்கு நடவடிக்கைகளை துரிதமாக எடுக்கவேண்டும்.

இந்திய அரசாங்கத்திற்கு வழங்கிய உறுதிமொழிகளை இலங்கை அரசாங்கம் காப்பாற்றத் தவறியதனா

**தன்னிடமே முழு அதிகாரங்களையும் குவித்துக் கொள்ள விரும்புகின்ற ஒரு அரசாங்கத்தைப் பொறுத்தவரை ஒரு மாகாணசபையில் அதிகாரத்தைப் பெற முடியாமல் போவதென்பதோ அல்லது அதிகாரத்தை இழப்பது என்பதோ ஏற்றுக்கொள்ள முடியாத ஒன்றாக இருக்கக்கூடும்**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லேயே தமிழ்நாட்டில் போராட்டங்கள் கிளம்பியிருக்கின்றன. அரசியலமைப்புக்கான 13 ஆவது திருத்தத்தில் உள்ளடங்கியிருக்கும் அதிகாரப்பரவலாக்கத்தை மேலும் மேம்படுத்தக் கூடியதாக நடவடிக்கைகளை (13+) எடுப்பதாக இந்தியாவுக்கு இல ங்கை அளித்த வாக்குறுதி அப்பட்டமாக மீறப்பட்டிருக்கிறது. 13+ அடிப்படையில் தமிழ் மக்களுக்கு ஏற்புடைய அரசியல் தீர்வொன்றை அரசாங்கம் காணும் என்ற அடிப்படையில் தான் விடுதலைப்புலிகளுக்கு எதிரான போரின்போது இலங்கைக்கு இந்திய அரசாங்கம் அதன் ஆதரவையும் ஒத்துழைப்பையும் வழங்கியது. சர்வதேச சமூகத்தினால் அரசாங்கத்திற்கு வழங்கப்பட்ட இராணுவ ரீதியான ஆதரவின் காரணமாக, இலங்கையுடன் சர்வதேச சமூகம் பகிர்ந்துகொண்ட புலனாய்வுத் தகவல்களின் காரணமாக, நோர்வேயின் அனுசரணையுடன் முன்னெடுக்கப்பட்ட சமாதான முயற்சிகளில் இருந்து விடுதலைப் புலிகள் வெளியேறிய பிறகு சர்வதேச சமூகம் அந்த இயக்கத்துக்கு விதிக்கப்பட்ட தடைகள் காரணமாகவே போரில் வெற்றி பெறுவது சாத்தியமாயிற்று. இலங்கையை தற்போது எதிர்க்கிற நாடுகள் உட்பட சர்வதேச சமூகத்தின் முழுப் பிரிவுகளுமே அரசாங்கத்தின் போர் நடவடிக்கைகளை ஆதரித்ததற்கு அடிப்படை போரின் முடிவுக்குப் பிறகு சீர்திருத்தங்களையும் அரசியல் தீர்வையும் காண்பதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படுமென்று அரசாங்கத்தினால் அளிக்கப்பட்ட வாக்குறுதிகளேயாகும்.

போரின் போது அரசாங்கம் சர்வதேச சமூகத்திற்கும் சொந்தமக்களுக்கும் அளித்த வாக்குறுதிகள் ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில் உள்ளடங்கியிருக்கின்றன. மாகாணங்களுக்கு அதிகாரங்களைப் பரவலாக்குதல், சட்டத்தின் ஆட்சியை உறுதிப்படுத்துதல், நீதிவிசாரணைகளுக்குப் புறம்பான கொலைகளுக்கு ஒரு முடிவைக் கட்டுதல், ஆட்கள் காணாமல் போகும் சம்பவங்களுக்கு முடிவைக் கட்டுதல், இடம்பெயர்ந்தவர்கள் சகலரையும் மீளக்குடியமர்த்தி புனர்வாழ்வு அளித்தல், மற்றும் சிவில் நிருவாகத்தில் இராணுவத் தலையீடுகளுக்கு முற்றுப்புள்ளி வைத்தல் ஆகியவையும் இதில் உள்ளடங்கும். இந்த உறுதிமொழிகள் காப்பாற்றப்படவில்லை என்பது துரதிர்ஷ்டவசமானதாகும். இவற்றை அரசாங்கம் நடைமுறைப்படுத்த வேண்டியது அவசியமாகும்.இவற்றில் பெரும்பாலானவை கற்றுக் கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிக்கையில் உள்ளடங்கியிருக்கின்றன என்பதுடன், செயற்திட்டம் ஒன்றின் மூலமாக நடைமுறைப்படுத்துவதாக அரசாங்கத்தினால் உறுதியளிக்கப்பட்டவையுமாகும். ஆணைக்குழுவின் விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதுடன் தொடர்புடைய அதன் செயற்திட்டத்தை அரசாங்கம் மீளாய்வு செய்து மேம்படுத்தவேண்டிய தேவையிருக்கிறது. அரசாங்கத்தின் செயற்திட்டம் பல அம்சங்களில் குறைபாடுகளைக் கொண்டதாக இருக்கிறது. விதப்புரைகளை நடைமுறைப்படுத்துவதைப் பொறுத்த அம்சங்களில் சிவில் சமூகத்திற்கு மிகக்குறைந்த பங்கு மாத்திரமே வழங்கப்பட்டிருக்கிறது.



ஆணைக்குழுவின் அறிக்கையின் உள்ளடக்கத்தை பொதுமக்கள் அறிந்துகொள்ள வேண்டியதும் அவசியமாகும். உத்தியோகபூர்வ மொழிபெயர்ப்பு தயாராகியிருப்பதாக அறிவிக்கப்பட்டிருந்த போதிலும் கூட, அரசகருமமொழிகளான சிங்களத்திலும் தமிழிலும் அந்த அறிக்கையை அரசாங்கம் இன்னமும் வெளியிடவில்லை. நாட்டின் பலபகுதிகளுக்கும் நான் சென்றபோது ஆணைக்குழுவின் அறிக்கையில் மக்கள் குற்றம் காண்பதை அவதானிக்கக்கூடியதாக இருந்தது. சர்வதேச சமூகமே அந்த அறிக்கையை தயாரித்திருப்பதாக மக்கள் தவறாக நினைக்கிறார்கள் அல்லது, அரசாங்கங்களினால் நடைமுறைப்படுத்தப்படாத ஏனைய ஆணைக்குழுக்களின் அறிக்கைகளைப் போன்ற இன்னொரு அறிக்கையாகவே மக்கள் இதைப் பார்க்கிறார்கள். ஆணைக்குழுவின் அறிக்கையில் என்ன இருக்கிறது என்பதைக் கூட மக்கள் அறியாத நிலையில், ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தின் மூலம் வேண்டப்பட்டவாறு அதை நடைமுறைப்படுத்துவதாக எவ்வாறு அரசாங்கம் கூறிக்கொள்ள முடியும்?அறிக்கையின் உள்ளடக்கங்கள் மக்களுக்குத் தெரியப்படுத்தப்பட்டால், அவர்கள் அதில் அக்கறை காட்டி, அது நடைமுறைப்படுத்தப்படவேண்டுமென்று விரும்புவார்கள். நடைமுறைப்படுத்த வேண்டிய விடயங்களில் இவ்வருடம் செப்டெம்பரில் வடமாகாண சபைத் தேர்தலும் உள்ளடங்குகிறது என்பது முக்கியமானதாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குமார் டேவிட்



# ஜெனீவாவுக்குப் பிறகு சகலரும் தெரிவுகளை இழந்துவிட்டார்களா?

வடமாகாணசபை தேர்தலை நடத்துவதை தவிர அரசாங்கத்திற்கு வேறு தெரிவுகள் இருப்பதாக தெரியவில்லை. ஆனால் அற்ப சாக்கு போக்குகளுக்காகவேனும் அந்த மாகாணசபை தேர்தலை ரத்துச் செய்வதற்கு ராஜபக்ஷாக்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை

ஜெனீவாவில் ஐக்கியநாடுகள் மனித உரிமைகள் பேரவையின் 22 ஆவது கூட்டத்தொடரின் முற்றிலும் எதிர்பார்க்கப்பட்ட விளைவுகளுக்குப் பிறகு சகலதரப்பினரும் சோர்வடைந்து விட்டார்களா? சகல தரப்பி னருமே மாற்றுத் தெரிவுகள் இல்லாமல் தடுமாறுகிறார்களா? அடுத்து எந்த அணுகுமுறையைக் கடைப்பிடிப்பது என்பதில் எவருமே நிச்சயமற்ற தன்மையுடன் இருக்கிறார்களா? மார்ச் 21ஆம் திகதிக்குப் பின்னரான குறுகிய காலகட்டத்தில் நிலைவரம் அத்தகையதாக இருக்கிறதென்றே தோன்றுகிறது. அரசாங்கம் காதைப்பொத்தி அறைவாங்கியிருக்கிறது. அடுத்தது என்ன செய்வதென்று தெரியாத நிலையில் இருக்கிறது. ஆனால், ஒன்று மாத்திரம் நிச்சயம். கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் விதப்புரைகளை அது நடைமுறைப்படுத்தப் போவதில்லை. அரசியல் தீர்வொன்றைக் காண்பதற்கான முயற்சிகளை முன்னெடுக்கப்போவது மில்லை, வடமாகாண சபைத் தேர்தலை நடத்துவதைத் தவிர அரசாங்கத்திற்கு வேறு மாற்றுத் தெரிவு இருப்பதாகத் தெரியவில்லை. ஆனால், அற்ப சாக்குப் போக்குகளை காட்டியேனும் அந்த மாகாண சபைத்தேர்தலை இரத்துச் செய்வதற்கு ராஜபக்ஷாக்கள் ஆர்வம் காட்டுவார்கள் என்பதிலும் சந்தேகமில்லை. என்றாலும் கூட, அது ஆபத்தானதாகவே அமையும். சர்வதேச சமூகத்தையும் தமிழ் நாட்டையும் மேலும் ஆத்திரமடையச் செய்து மேலும் கூடுதலான அளவுக்கு ஆக்ரோஷமான நிலைப்பாடுகளை அவை எடுக்கக்கூடிய சூழ்நிலை தோன்றும். சிங்களத் தேசியவாதம் ஜனதாவிமுக்தி பெரமுனை (ஜே.வி.பி.)யிடம் வழமையாக உள்ள ஒன்று. ஐக்கியதேசியக் கட்சியும் தனிச் சிங்கள உணர்வுகளுக்கு இடந்தேடிக்கொடுத்து தேர்தல்களில் தனக்கு அனுகூலங்களைப் பெற்றுக் கொள்வதுபற்றியே எப்போதும் சிந்தித்துக் கொண்டிருக்கிறது. அதனால், ஐ.தே.க.வும் ஜே.வி.பி.யும் சிங்கள ஊடகங்களும் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையின் தீர்மானத்தை அலட்சியம் செய்யுமாறே அரசாங்கத்தைத் தூண்டிக்கொண்டிருக்கின்றன. அதில் ஆச்சரியப்பட ஒன்றுமில்லை.

ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் தீர்மானத்தைக் கொண்டுவந்த அமெரிக்கா தற்போதைக்கு இலங்கையின் பிரச்சினை தொடர்பில் மேலும் நடவடிக்கைகளில் இறங்குவதில் முனைப்புக்காட்டுவதற்கான சாத்தியமில்லை. ஏனென்றால் பொருளாதாரப் பிரச்சினை, மத்திய கிழக்கு நெருக்கடி, சீனாவின் புதிய தலைமைத்துவம் மற்றும் பாகிஸ்தான் விவகாரம் ஆகியவை அமெரிக்காவின் முன்னுரிமைக்குரியவையாக இருக்கின்றன. எல்லாமே முடிந்துவிட்டது என்று டில்லி நிம்மதிப் பெருமூச்சுவிடுவதற்கு விரும்பும். ஆனால், அடுத்தவருடம் பொதுத்தேர்தல் நடைபெறவிருப்பதால் ஜெயலலிதாவும் கருணாநிதியும் நிலைமைகளைச் சூடாகவே வைத்திருப்பர் என்பதிற் சந்தேகமில்லை. ஒரு தூதுக்குழுவின் விஜயத்துக்கான ஏற்பாடுகளைச் செய்யுமாறு ஐ.நா. மனித உரிமைகள் உயர்ஸ்தானிகர் இலங்கை அரசாங்கத்தைக் கேட்டிருக்கிறார். ஆனால், அந்த வேண்டுகோளை அரசாங்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிராகரித்திருக்கிறது. சகல குறுகிய நோக்குடனான தேசியவாத உணர்வுகளைப் போன்றே 'நாம் சிங்களவர்' என்ற உணர்வும் ஆழமாக வேரூன்றிக் கொண்டிருக்கிறது. தடைகள் விதிக்கப்பட்டாலும் கூட, தீவிரவாதிகள் தற்கொலைக்கொப்பான இந்தப் போக்கிலிருந்து விலகப் போவதில்லை.

ஜெனீவா விளைவுகள் குறித்து தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மகிழ்ச்சி கொண்டிருக்கிறது என்பதில் சந்தேகமில்லை. பெப்ரவரி 27ஆம் திகதி லண்டனில் ஹவுஸ் ஒஃப் கொமன்ஸில் கூட்டப்பட்ட உலகத் தமிழர் பேரவையின் (Global Tamil Forum) மகாநாடு வெற்றிகரமாக நடந்தேறியதால் தமிழர் தரப்பு மகிழ்ச்சியுடன் இருக்கிறது எனலாம். ஆனால், தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு அடுத்து என்ன செய்யப்போகிறது? அது காற்றுள்ள போதே தூற்றிக் கொள்ள வேண்டும். அமைப்பு ரீதியான பணிகளை சுறுசுறுப்பாகச் செய்வதற்கான சாதகமான சந்தர்ப்பம் இப்போது கூட்டமைப்புக்கு இருக்கிறது. சர்வதேச சமூகத்தினதும் தமிழ் நாட்டினதும் கவனம் இலங்கை மீது குவிந்திருக்கும்போது கூட்டமைப்புக்கு தொல்லை கொடுப்பதற்கு ராஜபக்ஷவும் டக்ளஸும் விரும்பாமல் இருக்கக்கூடும் என்றே எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், நடைபெறுகின்ற சம்பவங்கள் மறுதலையாக இருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

துரதிர்ஷ்டவசமாக, தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு மக்கள் மத்தியில் அடிமட்ட அமைப்புகளைக் கட்டியெழுப்புவதற்கான அவசியத்தை விளங்கிக் கொள்கிற கட்சியாக தமிழ்த்தேசியக் கூட்டமைப்பு இல்லை. ஆனால், வடமாகாண சபைக்கான தேர்தலுக்காக கூட்டமைப்பு குந்தியிருந்து காத்துக் கொண்டிருக்கிறது. வேட்பாளர் பட்டியல், முதலமைச்சர் பதவி, மற்றும் தனிப்பட்ட அற்பவிடயங்கள் தொடர்பாக பிச்சுப்பிடுங்கல்கள் இடம்பெறுவதற்கான வாய்ப்புகள் இருக்கின்றன.

### பொது- கோதா- ஹெல பாசிசம்

எவ்வாறெனினும், அரசியல் அரங்கில் இரு வேறு பாத்திரங்கள் இப்போது கவனத்தை ஈர்த்திருக்கின்றன. அவை தற்போதைய சூழ்நிலையை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக்கொள்வதில் குறியாக இருக்கின்றன. அண்மையில் உத்வேகப்படுத்தப்பட்டுள்ள சிங்கள பௌத்த தீவிரவாதிகளும் தமிழ் நாட்டில் உள்ள இரு பிரதான அரசியல் கட்சிகளுமே அந்தப் பாத்திரங்கள். இந்தக் கட்டுரையில் நான் உள்நாட்டுப் பாத்திரம் பற்றியே கவனத்தைச் செலுத்த விரும்புகிறேன். 'பொது கோதா ஹெல' இயக்கத்தின் எழுச்சி ஒன்றும் தற்செயலானதல்ல. கோதாபய இந்த இயக்கத்துக்கு உற்சாகத்தை அளித்திருக்கிறார். ராஜபக்ஷ அரசாங்கம் விடுதலைப் புலிகளைத் தோற்கடித்த பிறகு மூன்று வருடங்களாக அதன் 'சாதனை' குறித்துத் திருப்திப்பட்டுக் கொண்டு காலத்தைப் போக்கியது. ஆனால், மூன்று விடயங்கள் நிலைவரங்களில் மாற்றத்தைக் கொண்டு வந்திருக்கிறது. முதலாவது, 2012 ஆகஸ்ட் அளவில் பொருளாதாரம் வீழ்ச்சியடையத் தொடங்கியது. அண்மைய எதிர்காலத்தில் மீட்சிக்கான சாத்தியங்கள் ஏற்படுவதற்கில்லை. இரண்டாவது, அரசியலமைப்புக்கான 18ஆவது திருத்தம், பிரதம நீதியரசர் பதவி நீக்கம் போன்ற அபத்தமான தவறுகளின் விளைவாக பொது மக்களின் அபிப்பிராயத்திலிருந்த அரசாங்கம் தனிமைப்பட்டுப் போயிருக்கிறது. மூன்றாவதாக சர்வதேச சமூகத்தையும் (மேற்குலகம்) இந்தியாவையும் அரசாங்கம் பேதமைத்தனமாக பகைத்துக்கொண்டிருக்கிறது. சீனாவுடன் நெருங்கிச் செல்லும் போக்கின் விளைவான பயன்கள் என்று பெரிதாக எதுவுமில்லை.



பொதுபல சேனாவின் மேடையில் பாதுகாப்புச் செயலாளர் ஏறிய போது சகலதும் அம்பலத்திற்கு வந்து விட்டது. அவர் சேனாவை ஆசிர்வதித்திருக்கிறார். முஸ்லிம்கள் தங்களுக்கு செய்யப்படுகின்ற அவமதிப்புக்கு உடனடியாக பிரதிபலிப்பை காட்டாமல் நிதானமாக நடந்து கொண்டார்கள். அவர்கள் ஆத்திரமடைந்து பிரதிபலிப்பை காட்ட வேண்டும் என்றே இந்த சேனா எதிர்பார்க்கிறது

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதனால், தமிழர்களை வதைத்த தன் விளைவாகப் பெற்ற பெரும் மக்கள் செல்வாக்கு இப்போது குறைந்து கொண்டு போகிறது. சிங்கள-பௌத்த மனத்தில் மீண்டும் மதிப்பைப் பெற்றுக்கொள்வதற்காக 'புதியதொரு பூதத்தை' உருவாக்கி அதை கட்டுப்படுத்திவிட்டதாக காட்டிக் கொள்ள வேண்டிய தேவை அரசாங்கத்திற்கு இருக்கிறது. இதனால், ஹலால் உணவை உட்கொள்கிற முஸ்லிம்கள் இலக்கு வைக்கப்படுகிறார்கள். முஸ்லிம் பெண்கள் காலாதி காலமாக அணிந்துவரும் முழு உடலையும் மூடும் கறுப்பு உடையில் கண்வைக்கப்படுகிறது. நாம் இப்போது புத்த பிக்குகள் தலைமையில் முஸ்லிம்கள் மீது தாக்குதல் நடத்தும் சம்பவங்கள் தீவிரமடைகிற ஒரு (ஜெனீவாவுக்குப் பின்னரான, புதிய கால கட்டத்திற்குள் பிரவேசித்திருக்கிறோம். இத்தகைய தாக்குதல்கள் இடம்பெறும்போது பொலிஸார் கை கட்டிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். அரசாங்கத்தின் உயர்மட்டத் தலைவர்கள் தாக்குதல்களை தூண்டிக் கொண்டிருக்கிறார்கள். உற்சாகம் அளித்துக் கொண்டிருக்கிறார்கள்.

புதியதொரு தலையாட்டி கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. நாட்டின் பல பகுதிகளில் பள்ளிவாசல்கள் தாக்குதலுக்கு இலக்காகின்றன, முஸ்லிம்கள் அவமதிக்கப்படுகிறார்கள். இது ஒரு விசித்திரமான, அப்பட்டமான சூழ்ச்சி. பொது பல சேனாவின் மேடையில் பாதுகாப்புச் செயலாளர் கோதாபய ஏறியபோது சகலதும் அம்பலத்துக்குவந்துவிட்டது. அவர் சேனாவை ஆசீர்வதித்திருக்கிறார். முஸ்லிம்கள் தங்களுக்குச் செய்யப்பட்ட அவமதிப்புக்கு உடனடியாக பிரதிபலிப்பைக் காட்டாமல், நிதானமாக, நல்லறிவுடன் நடந்துகொண்டார்கள். முஸ்லிம்கள் ஆத்திரமடைந்து பிரதிபலிப்பைக் காட்டவேண்டுமென்றே இந்த பொது கோதா ஹெல எதிர்பார்க்கிறது. பொதுபலசேனாவின் மேடையில் சகோதரர் கோதாபய ஏறியதை ஜனாதிபதி மகிந்த ஏற்றுக்கொள்கிறாரா? அல்லது இருவருக்கும் இடையே கீறல் இருக்கிறதா? அல்லது அவர்கள் இருவரும் ஒரே இசைக்குழுவின் உறுப்பினர்களாக சேர்ந்து வயலின் வாசித்துக் கொண்டிருக்கிறார்களா? எனக்கு உள் தகவல் எதுவும் தெரியாது. எது உண்மை என்றும் எனக்குத் தெரியவில்லை. ஆனால், எந்தவிதமாக அமைந்தாலும், விளைவுகள் பரந்தளவிலானவையாகவே இருக்கும். அவர்கள் பங்காளிகளாக இதுவிடயத்தில் இணைந்து செயற்படுகிறார்களாக இருந்தால், அது ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சியினதும் ஐக்கிய மக்கள் சுதந்திர முன்னணியினதும் முடிவாகவே அமையும். ராஜபக்ஷாக்களினால் செய்யப்படக்கூடிய பாசிசத்திருப்பம், சுதந்திரக் கட்சியை பிளவுபடுத்தும் (பிரதான போக்கு அரசியலுக்கு சந்திரிகா மீண்டும் வருவதற்கு இது கட்டியம் கூறவும் கூடும்) அத்துடன், பட்டுப்போன இடதுசாரிக்கட்சிகள் (லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி, மற்றும் ஜனநாயக இடதுசாரி முன்னணி) குப்பை மேட்டில் வீசப்படும். ஹக்கீமும் ஏனைய முஸ்லிம் அமைச்சர்களும் இன்னமும் கூட தங்களுக்குக் கிடைக்கிற வரப்பிரசாதங்களை நேசிக்கிறார்கள். இயன்ற மட்டும் சுருட்டிக் கொள்வதில் அக்கறை காட்டுகிறார்கள்.

மறுபுறத்தில், சகோதரர்கள் ஒன்றிணைந்து செயற்படாவிட்டால், அது அவர்கள் மத்தியில் மிகவும் பாரதூரமான பிளவுக்கான சமிக்ஞையைக் காட்டிவிடும். அத்துடன் புதிய அரசியல் அணிகள் வெளிக்கிளம்பும். பிளவு ஒன்று ஏற்படும் பட்சத்தில், இராணுவத்தின் நம்பிக்கையை கோதாபய தொடர்ந்தும் கொண்டிருக்க இயலாமற்போகும், ஆனால் அவர்கள் ஒன்றிணைந்து செயற்படுவார்களேயானால், ஜனாதிபதியுடனும் முப்படைகளின் பிரதம தளபதியுடனுமான இந்த சிங்கள பௌத்த தீவிரவாதிகள் கூட்டணி மிகவும் ஆபத்தான ஒரு நிலைமையாகும். இறுதியில், இந்திய மற்றும் சர்வதேச தலையீட்டை வரவழைப்பதாகவே முடியும்.

விடுதலைப் புலிகளின் மதிகெட்ட இராணுவவாதத்தை ஆர்ப்பரித்து ஆதரவளிப்பதன் மூலம் தமிழர்களுக்கு கெடுதி விளையும் என்று நான் எப்போதோ எச்சரித்திருந்தேன். எவருமே அதைக் கேட்கவில்லை. இனவாதப் போரை புகழ்ந்துரைத்து, தமிழ்க் குடிமக்கள் மீது இராணுவம் குண்டுவீசுவதை ஊக்குவிக்க வேண்டாம் என்று சிங்களவர்களையும் நான் எச்சரித்தேன். என்றாவது ஒரு நாள் அதே துப்பாக்கிகளும் குண்டுகளும் அவர்களுக்கு எதிராகத் திரும்பும் என்றும் எச்சரித்தேன். எவருமே கேட்கவில்லை. ஆனால், அதுதான் இன்று நடைபெற்றுக்கொண்டிருக்கிறது. முஸ்லிம் விரோதச் செயற்பாடுகளை முன்னெடுத்து நெருப்புடன் விளையாடினால் அது இலங்கையைச் சுட்டெரிக்கும், எஞ்சியிருக்கக் கூடிய சர்வதேச நேசசக்திகளான இஸ்லாமிய நாடுகளிடமிருந்து தனிமைப்படவேண்டிவரும் என்று அரசாங்கத்தையும் ராஜபக்ஷ சகோதரங்களையும் சிங்கள- பௌத்த தீவிரவாதிகளையும் இப்போது எச்சரிப்போம். ஆயிரக்கணக்கில் வீட்டுப் பணிப்பெண்களாக வேலைசெய்து எமது பெண்கள் இந்த இஸ்லாமிய நாடுகளில் இருந்தே பெறுமதியான அந்நியச் செலாவணி சம்பாத்தியத்துக்கு உதவுகிறார்கள். முஸ்லிம்களுக்கு எதிரான வன்முறைகள் இலங்கைக்கு ஜிகாதிகளையும் கொண்டு வரும். தமிழர்கள் மீது இராணுவ பயங்கரவாதத்தைக் கட்டவிழ்த்து விட்டு தூவிய விதைகளில் விளைந்த தமிழ்ப்புலிகளின் பயங்கரவாதத்தை அரசாங்கமும் சிங்கள- பௌத்த தீவிரவாதிகளும் மறந்துவிடக்கூடாது. ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



என்.சத்தியமூர்த்தி

# தமிழர் அரசியலை மிதவாதக்கூட்டுக்குள் மீண்டும் நிலைநிறுத்த வழி...?

## வட மாகாணசபைத் தேர்தலை குறித்த சமயத்தில் நடத்தினால் மட்டுமே இலங்கை அரசின் நம்பகத் தன்மை ஒரு முறையாவது நிலைநிறுத்தப்படும்

ஒரு வருட காலத்திற்குள் ஐ.நா. மனித உரிமைகள் கவுன்சிலின் இரண்டு கண்டனத் தீர்மானங்கள். இடைப்பட்ட காலத்தில், கவுன்சிலின் நான்காண்டுகளுக்கு ஒரு முறையிலான மனித உரிமை குறித்த விசாரணை அறிக்கை. இலங்கை அரசும் மக்களும் கடந்த ஓராண்டுக்கும் மேலாக மனித உரிமைக் கவுன்சில் குறித்த கவலைகள் தவிர வேறு எந்த ஒரு பிரச்சினை குறித்தும் தங்களது மனதைச் செலுத்த உலகம் அவர்களை அனுமதிக்கவில்லை. இதற்கிடையே அரங்கேறிய தலைமை நீதிபதி ஷிராணி பண்டாரநாயக்காவின் பதவி நீக்கம் குறித்த பிரச்சினையும் மனித உரிமை மீறலாகக் கருதப்பட்டு, ஐ.நா. கவுன்சிலின் கவனத்தை ஈர்த்தது என்னவோ உண்மை.

ஜெனீவா தீர்மானங்கள் குறித்து குறைகூறும் இலங்கை அரசு தரப்பு, அவை என்னவோ 2012-ஆம் ஆண்டில் தான் முதன் முதலாக முன்வைக்கப்பட்டதான ஓர் எண்ணத்தை உருவாக்கி வருகிறது. அது தவறான செய்தி. உண்மையை சொல்லப்போனால், கடந்த 2009-ஆம் ஆண்டு, இனப்போர் முடிந்த மே மாதத்தின் பிற்பகுதியில், ஒன்றல்ல, இலங்கை குறித்த இரண்டு தீர்மானங்கள் மனித உரிமை கவுன்சிலின் முன் வந்தது. அவை இரண்டுமே இனப்போர் மற்றும் இனப்பிரச்சினை குறித்தவையே.

இதில் முதலாவதான தீர்மானம். ஐரோப்பிய ஒன்றியத்தால் முன்வைக்கப்பட்டது. அது இனப்போர் காலகட்டத்தில் இலங்கை இராணுவமும் அரசும் பலவாறான மனித உரிமை மீறல்களில் ஈடுபட்டன என்று குற்றஞ்சாட்டியது. அதனை அமெரிக்கா போன்ற பிற மேலை நாடுகள் ஒப்புக் கொண்டாலும் கவுன்சிலின் பெருவாரியான உறுப்பு நாடுகள் ஒத்துக் கொள்ளவில்லை என்பதே உண்மை. எனவே அந்த தீர்மானம் தோல்வியைத் தழுவியது. இந்த தோல்வியின் பின்னர், இந்தியா, சீனா, பாகிஸ்தான், ரஷ்யா ஆகிய நாடுகள் இலங்கைக்கு ஆதரவாக முனைப்புடன் ஒற்றுமையாக செயல்பட்டன.

விடயம் அத்துடன் நின்றுவிடவில்லை, ஐரோப்பிய ஒன்றியத்தின் தீர்மானத்திற்கு பதில் அளிக்கும் வகையில், இந்த நாடுகள் அனைத்தும் கை கோர்த்து, இலங்கைக்கு ஆதரவான ஒரு தீர்மானத்தை முன்வைத்து, 47-உறுப்பு நாடுகள் கொண்ட கவுன்சிலின் வாக்கெடுப்பு முறையில் வெற்றியும் கண்டன. தீவிரவாதத்தை வேரறுத்தமைக்கு இலங்கை அரசிற்கு பாராட்டுத் தெரிவித்த இந்தத் தீர்மானம், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வை இலங்கை அரசே பார்த்துக் கொள்ளும் என்ற விதத்தில் அமைந்திருந்தது. அடுத்த ஆண்டு, இது போன்ற ஒரு தீர்மானம் மனித உரிமை கவுன்சிலில் முன்வைக்கப்பட்ட போது, இலங்கை அரசு இந்தியாவின் உதவியை நாடவில்லை. மாறாக, இந்தியாவின் வாக்கை மட்டுமே கோரியது. இதுவே பிற முக்கிய ஆதரவு நாடுகளுக்கும் பொருந்தும் எனலாம்.

இதன் காரணமாகவே, கடந்த இரண்டு ஆண்டுகளாக மனித உரிமை கவுன்சிலில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்தை ஆதரிக்க வேண்டிய நிலைமைக்கு இந்தியா

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தள்ளப்பட்டது. அதாவது, தீவிரவாதத்தை ஒடுக்கியதில் இலங்கையைப் பாராட்டிய அதேநேரம், தான் உறுதி அளித்ததைப் போல், இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வு காண்பதில் அரசு சுணக்கம் காட்டியமைக்காகவே இந்தியா இந்த முடிவை எடுக்க நேர்ந்தது. அரசு தனது வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால், இரு நாட்டு உறவுகளில் இத்தகைய சூழ்நிலை ஏற்பட்டிருக்காது எனக் கருதலாம்.

கடந்த ஆண்டு, அமெரிக்காவின் தீர்மானத்தில், அரசின் கற்றுக்கொண்ட பாடங்கள் குழுவின் அறிவுரைகளை அரசு நிறைவேற்ற வேண்டும் என்ற அளவிற்கு இலங்கைக்கு ஆதரவான திருத்தங்களை இந்தியா கொண்டுவந்தது என்று பத்திரிகைச் செய்தி வாயிலாக அறிய முடிந்தது. இந்த வருடமும் இந்த நிலையே தொடர்ந்தது. ஆனால், அமெரிக்கா முன்வைத்த தீர்மான வரைவு நீர்த்து போனதற்கு இந்தியாவே காரணம் என்று தமிழ் நாட்டின் அரசியல் கட்சிகள் கருதுவதற்கு எந்தவித முகாந்திரமும் இல்லை.

### மீள்குடியமர்த்தல்


இலங்கை அரசு கூறுவது போல் மீள்குடியமர்த்தல் போன்ற விடயங்களில், குறிப்பிடத்தக்க முன்னேற்றம் காணமுடிகிறது. இதனை பலவாறு போர் நடந்த பகுதிகளில் உள்ள தமிழ் மக்களே ஏற்றுக் கொண்டது போல் கருதுவதற்கு இடமுள்ளது. போரால் பாதிக்கப்பட்ட வடக்குப் பிராந்தியத்திற்கு விஜயம் செய்த வெளிநாட்டு இராஜதந்திரிகளும் இதனை ஒத்துக் கொண்டுள்ளனர். ஆனால் அதற்கு வேண்டிய அளவிற்கு உலக நாடுகள் பாராட்டுத் தெரிவிக்கவில்லை என்ற இலங்கை அரசின் ஆதங்கத்திலும் அர்த்தம் இருக்கிறது.

என்றாலும், மனித உரிமை மீறல் குறித்த உலகநாடுகளின் குற்றச்சாட்டுகளில் இருந்து இலங்கை இன்னமும் தப்பவில்லை. குறிப்பாக, இனப்போர் நடைபெற்ற காலகட்டத்தில் அப்பாவித் தமிழ் மக்கள் மீது குறிவைத்து இலங்கை இராணுவம் தாக்குதல் நடத்தியதாகக் கூறப்படும் குற்றச்சாட்டை நவநீதம்பிள்ளை தலைமையிலான ஐ.நா. மனித உரிமை ஆணையம் விசாரித்து அறிக்கை அளிக்க வேண்டும் என்றும் அதற்கு இலங்கை அரசு உதவ வேண்டும் என்றும் அமெரிக்க தீர்மானம் உறுதிபட மீண்டும் கூறியுள்ளது. ஆனால், இது இலங்கை அரசின் விருப்பத்திற்கேற்ப, அதன் உதவியுடன் மட்டுமே நடக்க வேண்டும், அல்லது நடக்க முடியும் என்பதையும் அமெரிக்காவின் தீர்மானம் மீண்டும் கோடிட்டுக் காட்டியுள்ளது.

இது பன்னாட்டு அமைப்புகளில் பொதுவாக ஏற்றுக்கொள்ளப்பட்டுள்ள நடைமுறை மற்றும் சட்டமும் ஆகும். ஏதோ ஒரு நாள், ஏடாகூடமாக தங்களது நாட்டிலும் ஐ.நா.வின் போர்வையில் சர்வதேசம் மூக்கை நுழைக்க முடியும் என்ற பயத்தில் அனைத்து நாடுகளுமே ஏற்றுக் கொண்ட வரன்முறை. அந்த விதத்தில் இன்றளவும் அரசின் விருப்பத்துடனும் உதவியுடனும் மட்டுமே மனித உரிமை கமிஷனின் அலுவலர் இலங்கையில் களநிலையை அறிய முயலமுடியும். அத்தகைய விசாரணைக்குப் பின்னரே மனித உரிமை ஆணையம் தனது அறிக்கையை ஐ.நா. கவுன்சிலுக்கு அளிப்பது முறையானதாக இருக்கும்.

அந்த விதத்தில், இலங்கை அரசு வருந்தி அழைத்தும் நவநீதம்பிள்ளை நாட்டிற்கு விஜயம் செய்து களநிலையை அறிந்து கொள்ள முயலவில்லை என்ற குற்றச்சாட்டில் உண்மை இருக்கிறது. இன்னும் சொல்லப்போனால், அவர் இலங்கைக்கு விஜயம் மேற்கொண்டிருந்





**இனப்பிரச்சினைக்கான அரசியல் தீர்வைக் காண்பதில் இலங்கை அரசு சுணக்கம் காட்டுகின்றதனாலேயே இரண்டாவது தடவையும் ஜெனீவாவில் அமெரிக்கா முன்வைத்த தீர்மானத்தை இந்தியா ஆதரிக்க வேண்டி ஏற்பட்டது. அரசு வாக்குறுதிகளை நிறைவேற்றியிருந்தால் இலங்கை, இந்திய உறவுகளில் இன்று ஏற்பட்டிருப்பதைப் போன்ற நெருக்கடி தோன்றியிருக்காது**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தால் மட்டும் அவரது கருத்துகளோ அவரது அறிக்கையோ வேறுவிதமாக இருந்திருக்கும் என்று கருதிவிட முடியாது. அரசின் எண்ணப்படி, நவநீதம்பிள்ளையும் அவரைச் சார்ந்த அலுவலர்களும் முன்கூட்டியே முடிவு செய்த விடயங்களையே தங்களது கருத்துகளாகவும் அறிக்கைகளாகவும் சமர்ப்பித்து வருகின்றனர்.

### நடுநிலைமை, நம்பகத்தன்மை

இது போன்ற குற்றச்சாட்டையே அரசு ஐ.நா. தலைமைச் செயலர் பான் கீ மூன் அமைத்த மூன்று நபர் குழுவின் அறிக்கை குறித்தும் கூறிவந்துள்ளது. களநிலைமை எதுவாக இருந்தாலும், அரசு குறித்து சர்வதேச சமூகம் கூறும் குற்றச்சாட்டைப் போலவே, சர்வதேச சமூகம் குறித்த அரசின் குற்றச்சாட்டிலும் உண்மை இல்லாமல் இல்லை. அரசு, நல்லிணக்க ஆணைக்குழுவின் அறிவுரைகளை செயல்படுத்தும் என்று கூறினாலும் அதில் அளவிடும் வகையிலான முன்னேற்றம் ஏற்படவில்லை. அரசு குறித்து சர்வதேச சமூகம் கடும் குற்றச்சாட்டுகளை முன்வைத்தாலும் அது குறித்த முறைகள் முறைகேடாகவே உள்ளது.

அரசு கூறுவது போல், மூன்று நபர் தருஸ்மன் கமிட்டியின் அறிக்கை பான் கீ மூனின் தனிப் பயன்பாட்டிற்கு என்று கூறப்பட்டாலும், அதே அறிக்கையை அவர் ஜெனீவாவில் உள்ள மனித உரிமைக் கமிஷனுக்கு அனுப்பி அதன் அடிப்படையில் அடுத்தகட்ட நடவடிக்கைகள் எடுக்கப்பட்டது போன்ற எண்ணத்தை உருவாக்கியது கண்டனத்திற்குரியது. மேலும், ஒவ்வொரு கட்டத்திலும் அந்த அறிக்கை குறித்த இரகசியம் காப்பாற்றப் படாததும் வருத்தத்திற்குரியது.

அந்த அறிக்கையும் சரி, அதில் இரகசியமான பகுதிகளும் சரி, பத்திரிகைச் செய்தியாக அடுத்தடுத்து வந்த பின்னரும் அது குறித்து எந்தவொரு விசாரணையும் மேற்கொள்ளப்பட்டது போன்ற செய்தி எதுவும் வெளியாகவில்லை. சரியான சமயத்தில் அந்த இரகசிய அறிக்கை பத்திரிகைச் செய்தியான அவலம் குறித்து நடவடிக்கை உண்மையிலேயே எடுக்கப்பட்டிருந்தால், அடுத்தடுத்து இது போன்ற பத்திரிகைச் செய்திகளாவது தோன்றாது இருந்திருக்கும். அவ்வாறான நடவடிக்கை எடுக்கப்பட்டதா



கத் தெரியவில்லை.

இலங்கை அரசு தவிர வேறு எந்த ஒரு உலக நாடும் தற்போது இது குறித்து கருத்தோ, கவலையோ தெரிவிக்கவில்லை. என்றாலும், மனித உரிமைக் கவுன்சிலில் இருந்து ஐ.நா. சபையின் பாதுகாப்புச் சபை முன் இலங்கைப் பிரச்சினை எடுத்துச் செல்லப்படுமேயானால், இது போன்ற குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படலாம். இதனால், இலங்கைக்கு பயன் ஏற்படப்போகிறதோ, இல்லையோ, இது போன்ற குற்றச்சாட்டுகளால் ஐ.நா. சபையின் நடுநிலைமை மற்றும் நம்பகத்தன்மை ஆகியவை கேள்விக்குறியாகிவிடும். கேலிக் கூத்தாகவும் மாறிவிடும்.

### ஆட்டை கடித்து, அமெரிக்காவைக் கடித்து

இது தான் தமிழ் மக்களின் நலனுக்காக சர்வதேச சமூகம் எடுக்கும் முயற்சியா? என்ற கேள்வியும் உடன் எழுகிறது. கடந்த வருடம் மார்ச் மாதம் நிறைவேற்றப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தை முன்வைத்து புலம்பெயர்ந்த இலங்கைத் தமிழர்களின் அமைப்புகள் இந்தியாவைத் தாக்கி தமிழ் நாட்டிலும் பிற நாடுகளிலும் அரசியல் செய்தது. இந்த முறை அவர்கள், ஆட்டைக் கடித்து, மாட்டைக் கடித்து மனிதனையும் கடித்த கதையாக, அமெரிக்காவையே தாக்கி அரசியல் செய்யத் தொடங்கியுள்ளனர்.

உலகளவில், ஐரோப்பிய நாடுகள், கனடா, அவுஸ்திரேலியா போன்ற நாடுகளில் புலம்பெயர்ந்த தமிழர்கள் வாக்குரிமை பெற்று அங்குள்ள பல்வேறு கட்டங்களிலான தேர்தல்களில் பலவாறாக முக்கிய பங்கு வகிக்கும் ஓர் அங்கமாக மாறிவிட்டனர். அந்த நாடுகளும் சரி, அமெரிக்காவும் சரி, மனித உரிமை மீறல் குறித்து ஆழ்ந்த கருத்துக் கொண்டுள்ளன. என்றாலும், மனித உரிமை மீறல் குறித்து உதட்டளவில் மட்டுமல்லாமல் உணர்வுபூர்வமாகவும் மனப்பூர்வமாகவும் பேசும் தகுதி அமெரிக்காவிற்கு இல்லை. பிற மேலை நாடுகளைப் போல் இலங்கைத் தமிழ் புலம்பெயர்ந்தோர் அமெரிக்க அரசியல் மற்றும் தேர்தல்களில் முக்கியத்துவம்

> தமிழ்த் தேசியக்கூட்டமைப்பு தமிழ் மக்கள் மீது தனக்குள்ள அரசியல் சுயாதீனத்தையும் ஆளுமையையும் மீட்டெடுக்க வடமாகாணசபைத் தேர்தல் நல்லதொரு வாய்ப்பாக அமையும். அதுவே தமிழ் அரசியலை மிதவாதக்கூட்டுக்குள் நிலை நிறுத்தும். ஆனால் அதற்கான துருப்புச்சீட்டு அரசின் கையில் மட்டுமே உள்ளது

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பெற்றுவிடவில்லை.

அப்படியென்றால், இலங்கை இனப்பிரச்சினையில் அமெரிக்கா வின் தற்போதைய ஆர்வமே சந்தேக த்திற்கிடமாகிவிடுகிறது. அதாவது, தமிழ் மக்களையும் தமிழர்களின் அவலத்தையும் பகடைக்காயாகப் பயன்படுத்தி, அமெரிக்கா அரசியல் செய்கிறதோ என்ற எண்ணமும் கவ லையும் எழுகிறது. அவ்வாறானால், அதற்கான விலை என்ன? அந்த விலையை இலங்கை அரசு கொடுத்து விட்டால், அமெரிக்கா அரசுடன் சமாதானமாகப் போய், தமிழ் மக் களை நட்டாற்றில் அல்லது, நடுக்கட லில் தத்தளிக்கவிட்டு விடுமா? என்ற கேள்வியும் உடன் எழுகிறது.

### யானை இருந்தாலும், இறந்தாலும்...

விடுதலைப் புலிகள் இயக்கத்தோடு இன்னமும் தங்களை மையப்படுத் திக் கொள்ளும் புலம்பெயர் தமிழர் குழுக்களுக்கு அமெரிக்கா எந்தவித மான முடிவு எடுத்தாலும் அது அவர் களுக்கு ஏற்புடையதாகவே இருக் கும். அமெரிக்கா தமிழர் பக்கத்தில் நின்று, இலங்கை அரசிற்கு தகுந்த பாடம் புகட்டினால், அவர்கள் அனை வருக்கும் அது ஏற்புடையதே. அதுவே, அவர்களில் சிலரின் இன்ன மும் அணைந்து விடாத தனி நாடு கனவுகளுக்கு உரமாகவும் அமை யும்.

மாறாக, அமெரிக்கா, இலங்கை அரசிற்கு இப்போதோ அல்லது எப் போதோ, விலை போய் விட்டால், அதுவே தனி நாடு குழுக்களுக்கு மாய மருந்தாக அமைந்துவிடும். இனப்போர் முடிந்துள்ள தற்போ தைய காலகட்டத்தில், இலங்கையில் தங்கிவிட்ட தமிழர்கள் இன்னமும் தங்களை விடுதலைப் புலிகள் இயக் கத்தின் வழிமுறைகளோடு ஒன்றுப டுத்திக் கொள்ளத் தயாராயில்லை. அதுவே கூட, இலங்கையில் மிதவாத அரசியல் செய்யும் தமிழ்த் தேசிய கூட்டமைப்பு சர்வதேச சமூகத்தின் உதவியை நாடுவதற்கான நியாய மான ஒரு காரணம்.

இந்தப் பின்னணியில் தனி நாடு குழுக்களும் அமைப்புகளும் இல ங்கை வாழ் தமிழர்களிடம் இனியும் சர்வதேச சமூகத்தை நம்பி அரசியல் செய்வது பயன் தராது என்பது போன்ற கருத்தை ஊன்றி விதைக்க முனைவர். அதுவே, அவர்களை மீண்டும் போராளிகளாக மாற்றி விடாதா? என்ற எண்ணத்தையும் புலம்பெயர் தமிழ்க் குழுக்களிடம் விதைத்து விடும். இன்னும் சொல்லப் போனால், இது போன்ற எண்ண வோட்டத்துடனும் திட்டத்துடனும் மட்டுமே அவர்கள் சர்வதேச சமூ கத்தை அணுகியிருப்பார்களோ? என்றும் கருதத் தோன்றுகிறது.

இந்தப் பின்னணியில், தனிநாடு கோரும், புலம்பெயர் தமிழர்களுக்கு, அமெரிக்கா என்ற யானை அவர்கள் பக்கத்தில் இருந்தாலும் ஆயிரம் பொன், இல்லாமல் விட்டுவிட்டுப் போனாலும் ஆயிரம் பொன்.

### மாட்டிக்கொண்ட கூட்டமைப்பு?

இதனிடையில் மாட்டிக்கொண்டது என்னவோ தமிழ்த் தேசியக் கூட்ட மைப்போ, என்று எண்ணத் தோன்று கிறது. தான் நியாயமாகக் கருதும் மித வாத அரசியல் முடிவிற்கு இலங்கை அரசு எந்தவிதத்திலும் தீர்மானமான முயற்சி எடுக்காத நிலையில், தங் களது பிரச்சினைக்கு சர்வதேச சமூகத் தின் மூலம் நல்ல முடிவு காணலாம் என்று கூட்டமைப்பு கருதியதில் தவ றில்லை. ஆனால், அதுவே தங்களது கட்டுப்பாட்டில் இருந்து இனப்பிரச்சி னை குறித்த தமிழ்ச் சமுதாயத்தின் அரசியல் முன்னெடுப்புகள் கூட்ட மைப்பின் கையைவிட்டு நழுவி விட் டதோ என்ற சந்தேகத்தையும் கவலை யையும் தோற்றுவித்துள்ளது.

ஐ.நா.மனித உரிமை கவுன்சில் மற் றும் மனித உரிமை ஆணையம் ஆகி யவற்றின் செயற்பாடுகளையும் பயன்பாட்டையும் பார்க்கும் போது, அவர்கள் இலங்கை அரசையும் இரா ணுவத்தையும் எவ்வாறாகத் தண்டிப் பது? என்று மட்டுமே கருத்தில் கொள்வதாகத் தோன்றுகிறது.

அதுவே, அடுத்தடுத்த கட்டங்களில் இலங்கை அரசுடன் விலை பேசுவ தற்கு அடிப்படையாகக் கூட அமைய லாம். இனப்பிரச்சினைக்கான அரசி யல் முடிவு குறித்து இன்னமும் இந்தியா மட்டுமே கவலைப்படுவதா கவும் கருத இடமிருக்கிறது.

தற்போதைய சூழலில், இன்னமும் விடயம் கூட்டமைப்பின் கையை விட்டு முழுவதுமாக நழுவி விட வில்லை. அரசு கூறியது போல், எதிர் வரும் செப்டம்பர் மாதம் வட மாகாண சபைக்கான தேர்தல் நடத் தப்படுமேயானால், அதில் தற்போது இழந்துவிட்ட முக்கியத்துவத்தை கூட்டமைப்பு மீட்டெடுக்கும் வாய் ப்பு உள்ளது. உட்கட்சி சண்டைகளுக் கும், அதன் பின்னர் நிழலாடும் புலம் பெயர் குழுக்களுக்கும் அப்பால் சென்று, தமிழ்த் தேசியக் கூட்ட மைப்பு இலங்கையில் (பின்)-தங்கி விட்ட தமிழ் மக்களின் மீது தனக் குள்ள அரசியல் சுயாதீனத்தையும், ஆளுமையையும் மீட்டெடுக்க வட மாகாண தேர்தல் நல்லதொரு வாய்ப் பாக அமையும். அதுவே, தமிழ் அர சியலை மிதவாத கூட்டிற்குள் மீண் டும் நிலை நிறுத்தும்.

ஆனால், அதற்கான துருப்புச் சீட்டு அரசின் கையில் மட்டுமே உள்ளது. குறித்தபடி, குறித்த சமயத்தில் வட மாகாணத் தேர்தலை நடத்தினால் மட் டுமே, அரசின் நம்பகத்தன்மை ஒரு முறையாவது நிலைநிறுத்தப்படும். இதுவே, எதிர்வரும் நவம்பர் மாதத் தைய பொதுநலவாய உச்சி மாநாடு மற்றும் அதற்கு முன்னர் செப்டம்பர் மாதம் நிகழவுள்ள ஐ.நா. மனித உரிமை கவுன்சிலின் வருடத்தின் இரண்டாவது கூட்டம் ஆகியவற்றில் எதிரொலிக்கும். அதுவே நாட்டில் கூட்டமைப்பின் மிதவாத தமிழ் அர சியலுக்கும் வலு கொடுக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# ஐ.பி.எல். விவகாரத்தில் அடக்கி வாசித்த இலங்கை

ரி.எஸ்.கணேசன்










ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்கள் பங்கேற்கச் சென்றது இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ளது. இலங்கை வீரர்கள் சிலரை தமிழகத்தில் விளையாட அந்த மாநில அரசு தடைவிதித்துள்ள நிலையில், அதனையும் பொருட்படுத்தாது ஏனைய வீரர்கள் ஐ.பி.எல்.லில் பங்கேற்பது குறித்து இலங்கையில் பெரும் சர்ச்சையை ஏற்படுத்தியுள்ள போதிலும், இலங்கை வீரர்கள் தமிழகத்தில் விளையாடுவதற்கு கிளம்பிய பெரும் எதிர்ப்பை போல், இலங்கை வீரர்கள் இந்தியா சென்று விளையாடுவதற்கு இலங்கைக்குள் பாரிய எதிர்ப்புக் கிளம்பவில்லை.

தமிழகத்தில் இலங்கை வீரர்கள் எவருமே எந்தவொரு போட்டிகளிலும் பங்கேற்கக்கூடாதென மாநில முதல்வர் ஜெயலலிதா தடைவிதித்த போதும், இலங்கை வீரர்கள் எவருமே ஐ.பி.எல். போட்டியைப் புறக்கணிக்க முன்வரவில்லை. தமிழகத் தலைநகர் சென்னையை மையமாகக் கொண்ட சென்னை சுப்ப கிங்ஸ் அணியானது, தமிழக முதல்வரின் இந்த அறிவிப்புக்கு அடிபணிந்தது. அதனை எதிர்க்க முன்வரவில்லை. இதனால் சென்னை சுப்பகிங்ஸ் அணியிலுள்ள இலங்கை வீரர்கள் இருவரையும் சென்னையில் நடைபெறும் போட்டிகளில் பங்கேற்பதற்கு ஐ.பி.எல். நிர்வாகம் தடைவிதித்தது. தமிழக முதல்வரின் கண்டிப்பான உத்தரவுக்கமைய இலங்கை வீரர்கள் சென்னையில் விளையாட ஐ.பி.எல்.லால் தடை விதிக்கப்பட்ட போது ஐ.பி.எல்.லின் தலைமைச் சபையான இந்திய கிரிக்கெட்கட்டுப்பாட்டுச் சபை அதனை ஆமோதித்தது. அதேநேரம் உலக கிரிக்கெட்டை கட்டுப்படுத்தும் சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சி வாய்மூடி மௌனித்துவிட்டது.

ஐ.பி.எல்.லானது சர்வதேச கிரிக்கெட் சபையான ஐ.சி.சி.யின் அட்டவணைக்குட்படாத போதிலும், தனது கட்டுப்பாட்டிலுள்ள கிரிக்கெட் சபையொன்றின் உபகுழுவில் (ஐ.பி.எல்) மற்றொரு நாட்டு வீரருக்கு தன்னிச்சையாக தடை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

விதிக்கப்படுவதை தட்டிக்கேட்கும் உரிமையுள்ளது. ஆனால் ஐ.சி.சி.யோ அல்லது அதன் கட்டுப்பாட்டிலுள்ள இந்திய கிரிக்கெட் கட்டுப்பாட்டுச் சபையோ (பி.சி.சி.ஐ) அல்லது கட்டுப்படுத்தும் ஐ.பி.எல்.லோ தமிழக முதல்வரின் இந்த முடிவுக்கு ஆட்சேபம் தெரிவிக்க முன்வரவில்லை. அதேநேரம், தமிழகத்தின் சென்னையிலுள்ள அணியில் அங்கம் வகிக்கும் தங்கள் நாட்டு சக வீரர்கள் இருவருக்கும் தமிழக மண்ணில் தடைவிதிக்கப்பட்டது குறித்து ஆட்சேபிக்க இலங்கை வீரர்கள் எவருமே முன்வராததுடன், தங்களுக்கு சென்னையில் விளையாடத் தடைவிதிக்கப்பட்டதால் அதற்கு எதிர்ப்புத்தெரிவித்து சென்னை சுப்ப கிங்ஸ் அணியிலிருந்து வெளியேற, அந்த அணியைச் சேர்ந்த இலங்கை வீரர்களான நுவான் குலசேகரவும் அகில தனஞ்செயவும் முன்வரவில்லை. மாறாக சென்னை சுப்ப கிங்ஸ் தமிழகத்தில் விளையாடும் போட்டிகளில் பங்கேற்காது அந்த அணி தமிழகத்திற்கு வெளியே விளையாடும் போட்டிகளில் பங்கேற்பதற்காக தமிழகத்திற்கு வெளியே காத்திருக்கின்றனர்.

இலங்கை அணி வீரர்களதும், இலங்கை கிரிக்கெட் சபையினதும் (எஸ்.எல்.சி), இலங்கை அரசினதும் நடவடிக்கைகளை இலங்கை அணியின் முன்னாள் கப்டனும் எதிர்க்கட்சி பாராளுமன்ற உறுப்பினருமான அர்ஜுனா ரணதுங்க மிகக் கடுமையாகச் சாடியுள்ளார். 'மிஸ்ரர்கூல்' என அழைக்கப்படும் அர்ஜுனா ரணதுங்க இலங்கை வீரர்களதும் அணி நிர்வாகத்தினதும் செயலை மிக வன்மையாகச் சாடியுள்ளார். தமிழக முதல்வர் இலங்கை வீரர்களுக்கு தடைவிதித்தது இலங்கை வீரர்களுக்கு ஏற்பட்ட பெரும் அவமானமென்றும் இந்த அறிவிப்புக்கு பின்னாவது இலங்கை வீரர்கள் தமிழக அணியிலிருந்து வெளியேறியிருக்க வேண்டுமென்றும், தங்கள் சக வீரர்கள் இருவருக்கும் தமிழக அரசு தடைவிதித்ததை ஆட்சேபித்து ஏனைய இலங்கை வீரர்கள் ஐ.பி.எல்.லை முற்றாகப் புறக்கணித்திருக்க வேண்டுமென்று, இதற்கப்பால் இலங்கை வீரர்கள் ஐ.பி.எல்.லில் பங்கேற்பதை இலங்கை அரசு அனுமதித்திருக்கக் கூடாதென்றும் குமுறியுள்ளார். ஆனால் இதில் எதுவுமே நடக்கவில்லை.

இலங்கையில் இறுதிப் போரில் தமிழ் மக்கள் வகை தொகையின்றி கொல்லப்பட்டதற்கு எதிர்ப்புத் தெரிவித்தும் இதற்கு காரணமான இலங்கை அரசுத் தலைவர்களை சர்வதேச குற்றவாளிக் கூண்டில் நிறுத்த வேண்டுமென்றும் கோரி தமிழகமெங்கும் தொடர்ந்தும் பெரும் போராட்டங்கள் நடைபெற்று வருகின்றன. இதன் தொடர்ச்சியாகவே ஐ.பி.எல்.லில் சென்னை போட்டிகளில் பங்கேற்பதற்கு இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டது. ஆனாலும், இலங்கை வீரர்கள் இந்தப் போட்டிகளில் பங்கேற்பதில் இலங்கையர்கள் தங்கள் கௌரவத்தையும் நாட்டுப் பற்றையும் புறக்கணித்துச் சென்றுள்ளதாக அர்ஜுனா ரணதுங்க மீண்டும் மீண்டும் குற்றஞ்சாட்டி வருகின்றார்.

இந்த அறிவிப்புக்கு பின்னரும் கிரிக்கெட் வீரர்களும் கிரிக்கெட் நிர்வாகமும் இலங்கை அரசும் உரிய நேரத்தில் தீர்மானத்தை எடுக்கவில்லை என்பது அவரது மிகப் பெரும் குற்றச்சாட்டு. தங்கள் கௌரவத்திற்கு பெரும் இழுக்கேற்பட்டதையும் நாட்டுக்கு பெரும் அபகீர்த்தி ஏற்பட்டதையும் பொருட்படுத்தாது இது பெரும் சர்ச்சையாக இருக்கையில் எவருக்கும் தெரியாது இலங்கை வீரர்கள் ஐ.பி.எல்.லுக்கு சென்று விட்டதாக அர்ஜுனா குற்றஞ்சாட்டுகிறார். இலங்கை வீரர்கள் இவற்றையெல்லாம் மீறி இந்தியாவுக்குச் சென்றது கிரிக்கெட்டை வளர்ப்பதற்காக அல்ல, மாறாக அங்கிருந்து கிடைக்கவுள்ள பல டொலர்களுக்காகவே என்றும் அவர் சீறியுள்ளார்.

இலங்கைப் பிரச்சினையில் இந்தியாவிற்கு மிக நீண்ட காலமாக, வருடக் கணக்காக தண்ணிகாட்டிவரும் இலங்கை அரசு இம்முறை ஐ.பி.எல். விடயத்தில் மிகவும் அடக்கியே வாசித்துள்ளது. தமிழகத்தில் இலங்கை அரசுக்கெதிரான போர்க் குற்றச்சாட்டுகள் தமிழகத்திற்குள்ளேயே அடங்கிவிடுமென்பது இலங்கை அரசுக்கு நன்கு தெரியும். இலங்கை வீரர்களுக்கு தமிழக அரசு தடைவிதித்ததையும் தமிழகத்தின் பிரச்சினையாகவே பார்க்கும் இலங்கை அரசு, இதனால் சீற்றமடைந்து இலங்கை வீரர்கள் ஐ.பி.எல்.லில் பங்கேற்பதை தடைசெய்யவில்லை. அவ்வாறு தடைசெய்து இலங்கை வீரர்கள் இந்த ஐ.பி.எல்.லில் விளையாடாது போய் விட்டால் அது முழு அளவில் இந்தியாவில் பாதிப்பை ஏற்படுத்தி அது இலங்கைக்கு எதிரான உணர்வை அங்கு கொண்டு வந்து விடுமென்பதுடன், இலங்கைப் பிரச்சினை குறித்த நூறுகோடி இந்தியர்களும் அறிய இது இலவச பிரசாரமாகி விடுமென்பது இலங்கை அரசுக்கு நன்கு தெரியும். இதனால் தான் ஐ.பி.எல் விவகாரம் பூதாகரமாகிய போதும், அது குறித்து பெரிதுபடுத்தாது இலங்கை அரசு அடக்கி வாசித்ததுடன், இலங்கை வீரர்களை இந்தியாவுக்கு அனுப்பி வைத்தது.

இந்திய வீரர்கள் இந்த ஐ.பி.எல்.லில் எப்படி விளையாட வேண்டுமென தமிழக அரசியல்வாதிகள் சிலர் தீர்மானிக்கையில் இது குறித்து ஏன் இலங்கை அரசியல்வாதிகள் சிந்திக்கவில்லை என்பது அர்ஜுனாவின் கேள்வியாகும். இவ்வாறானதொரு போட்டிக்கு இலங்கை வீரர்கள் தகுதியற்றவர்களென அவர்கள் எண்ணும் போது எமது வீரர்கள் ஏன் பாய்ந்தடித்துச் சென்றார்களென்பதும் அர்ஜுனாவின் கேள்வியாகும். ஆனாலும் இதில் சிக்கிக்கொள்ள இலங்கை அரசு விரும்பவில்லை. தமிழக முதல்வர் இலங்கை வீரர்களுக்கு தமிழகத்தில் தடை விதித்தது போல் இலங்கை வீரர்கள் இந்தியா சென்று விளையாடத்தடை விதித்து இந்தியாவுடன் மோதிக்கொள்ள இலங்கை விரும்பவில்லை. தமிழகத்தில் இலங்கை வீரர்களுக்கு தடைவிதித்ததற்காக அர்ஜுனா ரணதுங்க கோபப்பட்டாலும் இலங்கை வீரர்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இந்தியா சென்று விளையாடுவதற்காக இலங்கை அரசு கிஞ்சித்தும் கவலை கொள்ளவில்லை. இலங்கை அரசின் கவலையெல்லாம், தமிழகத்தில் இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்கப்பட்டதற்காக ஏனைய இலங்கை வீரர்கள் இந்த முறை ஐ.பி.எல்லில் விளையாடாது மறுத்து விடுவார்களோ என்பதுதான்.

அதேநேரம், தொட்டதற்கெல்லாம் சர்வதேச சமூகத்தையும் சில நாடுகளையும் குற்றஞ்சாட்டும் வாய் வீச்சு அரசியல்வாதிகள் கூட ஐ.பி.எல். விடயத்தில் மிகவும் அடக்கியே வாசித்துள்ளனர். அர்ஜுனாவின் ஆதங்கத்தை அவர்கள் அலட்சியப்படுத்தி விட்டனர். ஜனாதிபதி மகிந்த ராஜபக்ஷவின் மகனுக்கு உரித்தான 'சி.எஸ்.என்' என்ற தொலைக்காட்சியே ஐ.பி.எல். போட்டியை இலங்கையில் ஒளிபரப்புச் செய்கிறது. அதை விட இந்த ஐ.பி.எல்லில் பங்கேற்கும் 9 அணிகளில் மூன்று அணிகளுக்கு இலங்கை வீரர்களே தலைவர்கள். அதை விட 8 வீரர்கள் இந்தத் தொடரில் பங்கேற்பதனால் இலங்கை மக்களில் பெரும்பாலானோரின் கவனம் ஐ.பி.எல்.லிலேயே உள் ளது. இது இலங்கை அரசுக்கு மிகவும் வாய்ப்பாகவேயுள்ளது.

அதேநேரம், தமிழகத்தில் பௌத்த பிக்குமார் தாக்கப்பட்டதற்காக வரிந்து கட்டிக்கொண்டு எழும்பியோரெல்லாம் ஐ.பி.எல். தொடங்கியதும் வாயடைத்து போய்விட்டனர். இலங்கை வீரர்கள் இந்தத் தொடரில் ஜொலிக்காது போனாலேயே அவர்கள் ஆத்திரமடைவர். இனமானம், நாட்டு கௌரவம் என்றெல்லாம் அர்ஜுனா ரணதுங்க கூறுவது பற்றி அவர்கள் கவலைப்படப் போவதில்லை. தமிழக முதல்வரின் தடையால் இலங்கை வீரர்கள் எவருமே தமிழகத்தில் விளையாடமுடியாது போனது குறித்தோ அல்லது தமிழக முதல்வரை மிரட்டிப் பணியவைத்து இலங்கை வீரர்களை தமிழகத்தில் விளையாட வைக்க இந்திய மத்திய அரசால் முடியாது போய்விட்டதே என்று கூடக் கவலைப்படப் போவதில்லை. தமிழக முதல்வரின் தடையால் தமிழகத்தில் விளையாடாவிட்டாலும் இலங்கை வீரர்கள் இந்தியாவின் ஏனைய மாநிலங்களில் ஐ.பி.எல்.லில் விளையாடினார்களே எனப் பெருமைப்படும் சிங்களவர்களே இலங்கையில் அதிகம்.

இதற்கிடையில் தமிழகத்தில் இலங்கை வீரர்கள் விளையாடத் தமிழக முதல்வர் ஜெயலலிதா தடைவிதித்ததற்கு வேறொரு பின்னணியுள்ளதாக சில தரப்புகள் கூறுகின்றன. ஹைதராபாத் சன் ரைசஸ் அணியின் உரிமையாளர்கள் சன் தொலைக்காட்சியினர். அத்துடன் சன் உரிமையாளர் கலைஞர் கருணாநிதியின் பேரன். இவரது சன் ரைசஸ் அணிக் கப்டன் இலங்கை வீரர் குமார் சங்ககாரா. தமிழகத்தில் இலங்கை வீரர்கள் விளையாடத் தடை விதிக்கப்பட்டதன் மூலம் சன் ரைசர்ஸ் அணிக்கும் நெருக்கடி ஏற்பட்டுள்ளது. இது மறைமுகமாக கருணாநிதியையும் பாதிக்கும். இதனால் அவருக்கு நெருக்கடி கொடுக்கும் வகையிலும் ஜெயலலிதா இந்த அறிவிப்பை வெளியிட்டதாக சிலர் கூறுகின்றனர். இதற்கேற்ப ஐ.பி.எல். போட்டிகளில் இலங்கை வீரர்களுக்கு தடை விதிக்க வேண்டுமென பல கட்சிகள் குரல் கொடுத்த போதும், இவ் விடயத்தில் கருணாநிதி மூச்சும் காட்டவில்லை. இதனால், தனது பேரனின் அணி என்பதற்காக கருணாநிதி மௌனம் சாதித்தது அம்பலத்திற்கு வந்துவிட்டது. இப்படி ஐ.பி.எல். மீதான தமிழகத்தடையும் அதனால் இலங்கையில் ஏற்பட்ட பிரதிபலிப்புகளும் தன்னகத்தே பல்வேறு காரணங்களைக் கொண்டிருப்பதும் குறிப்பிடத்தக்கது. ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

---

*(63ஆம் பக்கத்தொடர்ச்சி...)*


ஏனெனில் அங்கு கடமையாற்றிய ஆசிரியர்கள் யாவரும் அதிபரின் உறவினர்கள் என்பது குறிப்பிடத்தக்கது. மாணவர்கள் ஒழுங்காக படிக்கவும் பாடங்களில் திறமைச் சித்தி பெறும் மாணவர்களுக்கு பரிசில்கள் கிடைக்கவும் ஒழுங்குகளை மேற்கொண்டார். பாடசாலையுடன் சமூகத்தை இணைத்துக் கொண்டார். பெற்றோர்கள் மத்தியில் கல்வி விழிப்புணர்வு ஏற்படவும் பாடுபட்டு வந்தார்.

வேலணை மத்திய மகாவித்தியாலயத்தில் அதிபராக வே.தம்பு 1951 ஆம் ஆண்டு நியமனம் பெற்றார். இவர் வந்த பின்னர் பாடசாலையில் பல்வேறு மாற்றங்கள் ஏற்பட்டன. பாடசாலையின் மாணவர் தொகை படிப்படியாக அதிகரித்து 1500 ஆகவும் ஆசிரியர் தொகை 50 ஆகவும் உயர்ந்தது. மாணவர்களின் கல்வி மேம்பாட்டிற்காக பல்வேறு பணிகளை மேற்கொண்டார். இரவு, பகலென பாராமல் பாடசாலையே கதியென வாழ்ந்து வந்தார். இரவு வேளையில் மாணவர்கள் படிப்பதற்கு வசதிகள் செய்துகொடுத்தார்.

இப்படி அதிபர்களின் பல்வேறு ஆளுமைகளையும் பண்புகளையும் நாம் அடையாளம் காண முடியும். இந்த நூலை முழுமையாகப் படிக்கும் போது தான் 23 ஆளுமைகளின் பன்முகப்பரிமாணங்களையும் தனிச் சிறப்புகளையும் கல்வி வளர்ச்சிக்கான படிமுறைகளையும் நாம் புரிந்து கொள்ள முடியும். சமகாலத்தில் வாழ்ந்துகொண்டிருக்கும் கல்விச் சமூகம் நிச்சயமாக வாசித்து பயன் பெற வேண்டும். இந்நூலை அழகுற பதிப்பித்து வெளியிட்ட சேமமடு பதிப்பகம் பாராட்டுக்குரியது. அனைத்துக்கும் மேலாக இவ்வாறான வரலாற்றுச் சிறப்புமிக்க நூலை ஆக்கித் தந்த கனகசபாபதி அவர்களுக்கு தமிழ்ச் சமூகம் நன்றிக்கடன்பட்டுள்ளது என்றே கூறலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உள்நாட்டு அரசியல்



# இராணுவமயம பரிமாணங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**எந்தவொரு ஜனநாயக அல்லது சர்வாதிகார ஆட்சியிலும் காண இயலாத அளவிற்கு இலங்கை இராணுவமயமாக்கப் பட்டுள்ளது. ஒரு சின்னஞ்சிறிய நாட்டினால் சுமக்க இயலாத அளவு இராணுவ சுமையை அது இன்று தாங்கியுள்ளது**

இந்தமுறை நான் இலங்கை சென்றிருந்தபோது கல்வி சார்ந்த தொண்டு நிறுவனம் ஒன்றில் பணி செய்து கொண்டுள்ள நண்பர் ஒருவர் இலங்கையின் கல்வித்துறையில் ஏற்பட்டு வரும் ஒரு மாற்றத்தைக் கவனிக்குமாறு அறிவுறுத்தினார். கல்வித்துறையில் இராணுவத் தலையீடு குறித்துத்தான் அவரது கவன ஈர்ப்பு அமை ந்தது. தலையீடு என்கிற சொல் அதன் முழுமையான பரிமா ண த்தை உணர்த்தப் போதுமானதல்ல. இல ங்கை அரசமைவும் சமூகமும் பல்வேறு அம்சங்களில் இராணுவமயப்பட்டு வரும் நிலை கல்வித்துறையில் வெளிப்படும் தன்மை என்றுதான் அதைச் சொல்ல வேண்டும். இது குறித்து நான் ஏற்கனவே சற்று வாசித்திருந்தபோதிலும் முழுமையாக அறிந்திராததால் அவரிடமும் கல்வித்துறை சார்ந்த பிற நண்பர்களிடமும் கேட்டறிந்த போது சற்று வியப்பாகவும் கவலையாகவும் இருந்தது.

பல்வேறு வகையான அரசுகள் (states) மற்றும் ஆட்சிகள் (regimes) குறித்து விரிவாக ஆய்வு செய்யும் மார்க்சியர்களுக்கே இன்றைய இலங்கை அரசை ஏற்கனவே இவ்வாறு வரையறுக்கப்பட்ட வகையினம் ஒன்றுக்குள் பொருத்துவது சிக்கல்தான். நடப்பது ஒரு ஜனநாயக ஆட்சி அல்ல என்று மட்டுந்தான் சொல்ல இயலுமே ஒழிய இன்றைய இனவாத அரசைச் சென்ற நூற்றாண்டின் பாசிசம் என்றோ, இல்லை நேரடியான இராணுவ ஆட்சி என்றோ சொல்லிவிட இய



# ாதலின்



அ.மார்க்ஸ்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

லாது. ஆனால் அதே நேரத்தில் எந்த ஒரு ஜனநாயக அல்லது சர்வாதிகார ஆட்சியிலும் காண இயலாத அளவிற்கு இன்று இலங்கை இராணுவ மயமாக்கப்பட்டுள்ளது.

ஒரு சின்னஞ் சிறிய நாட்டால் சுமக்க இயலாத அளவு இராணுவச் சுமையை அது இன்று தாங்கியுள்ளது. உள்நாட்டுப் போர் துவங்கிய காலத்தில் (1980கள்) முப்படைகளும் சேர்த்து வெறும் 30,000 ஆக இருந்த இராணுவத்தின் எண்ணிக்கை இன்று 15 மடங்கு உயர்ந்துள்ளது என்கிறார் பாதுகாப்புத் துறைச் செயலாளரும் ஜனாதிபதி ராஜபக்ஷவின் தம்பியுமான கோதாபய (Indian Defence Review, April-June, 2010). மகிந்த ஆட்சிக்கு வந்தபோது (2005) முப்படைகளின் எண்ணிக்கை 1,50,000. 2005-2009 காலகட்டத்தில் அது 4,50,000 ஆக அதிகரிக்கப்பட்டது. இதில் தரைப்படை மட்டும் 3,00,000 என்று மேற்குறித்த நேர்காணலில் அவர் கூறியுள்ளார். பிறிதொரு சந்தர்ப்பத்தில் அவர், 2009 இறுதி வாக்கில்ஆதற்கு முன் 9ஆக இருந்த படைப் பிரிவுகள் 20 ஆகவும், 44 பிரிகேட்கள் 71 ஆகவும், 149 படாலியன்கள் 284 ஆகவும் அதிகரித்தன என அவர் பெருமிதப்பட்டுக் கொண்டார் (The Sunday Times, June 5, 2011). இது தவிர சிவில் பாதுகாப்புப் படையில் (CDF) 45,000 பேர் உள்ளனர். இவர்களில் பெரும்பாலோர் போர்க்காலத்தில் போரில் பங்கு பெற்றவர்கள்தான். இன்றும் வடக்கிலும் கிழக்கிலும் இப்படைப் பிரிவு நிறுத்தப்பட்டுள்ளது. இவர்களில் 5000 பேர் 2009இல் இராணுவத்தில் உள்வாங்கப்பட்டனர். இது தவிர காவல்துறையின் எண்ணிக்கை 85,128. அதிரடிப்படையின் (STF) எண்ணிக்கை 8000. இது காவல் துறையின் கணக்கில் சேருமா என்பது விளங்கவில்லை. காவல்துறையும் பாதுகாப்புத் துறையின் அதாவது கோதாபயவின் கட்டுப்பாட்டில்தான் உள்ளது என்பது குறிப்பிடத்தக்கது. பாதுகாப்புத் துறைக்கான அமைச்சர் வேறு யாருமல்ல மகிந்ததான்.

இந்தப் பெரும்படையைப் பெருந் தீனி போட்டுத்தானே காப்பாற்றியாக வேண்டும். இந்த ஆண்டுக்கான (2013) நிதி ஒதுக்கீட்டில் ஒரு பெருந் தொகை, 290 பில்லியன் ரூபாய்கள் கோதாபயவின் பாதுகாப்பு மற்றும் நகர வளர்ச்சித் துறைக்கு ஒதுக்கப்பட்டுள்ளது. பாதுகாப்பிற்கும் நகர வளர்ச்சிக்கும் என்ன தொடர்பு? ராஜ பக்ஷக்களின் குடும்ப ஆட்சியில் அது அப்படித்தான். இராணுவத்தின் பணி புற மற்றும் அக எதிரிகளிடமிருந்து நாட்டைப் பாதுகாப்பது என்கிற பழைய வரையறைக்கு இன்றைய இலங்கையில் இடமில்லை. நாட்டு வளர்ச்சி (development) என்பதும் இன்று இலங்கை இராணுவத்தின் பொறுப்பாகக் கொஞ்சம் கொஞ்சமாக மாற்றப்பட்டு வருகிறது. போருக்குப் பிந்திய இன்றைய இலங்கை அரசு என்பது வளர்ச்சியை மையமாகக் கொண்டதாக உள்ளது. போர்க்காலத்திய அழிவுகளைச் சீரமைத்தல், போரால் பாதிக்கப்பட்டவர்களின் மறு வாழ்வு, போரின் ஆறாத புண்களையும் வடுக்களையும் மண்ணிலிருந்து மட்டுமன்றி மக்களின் மனங்களிலிருந்தும் நீக்குவது, போர்ப் பகுதிகளில் இராணுவச் செறிவைக் குறைப்பது என்பவற்றிற்குப் பதிலாக இலங்கை அரசு துறைமுகங்கள், விமான நிலையங்கள், அதிவேகப் போக்குவரத்துகள், மின் திட்டங்கள் ஆகியவற்றிற்கு முதன்மை அளிக்கிறது. போர்க்காலத்திய கெடுபிடிகள், அச்சம், உயிராபத்துகள், நாட்டுக்குள் ஓரிடத்திலிருந்து இன்னொரு இடத்திற்குச் செல்வதற்கான தடைகள் முதலானவை பெரிய அளவு குறைந்துள்ளதையும் இந்த வளர்ச்சித் திட்டங்களையுமே போர் முடிவின் பயன்களாக (dividends) இன்று இலங்கை அரசு மக்கள் முன் நிறுத்துகிறது.

> இராணுவத்தின் பணி புற மற்றும் அக எதிரிகளிடமிருந்து நாட்டை பாதுகாப்பது என்கிற பழைய வரையறைக்கு இன்று இலங்கையில் இடமில்லை. நாட்டு வளர்ச்சி என்பதும் இலங்கை இராணுவத்தின் பொறுப்பாக மாற்றப்பட்டு வருகிறது

இந்தப் பலன்களுக்குப் பிரதியாக மக்கள் அரசுக்கு விசுவாசமாகவும், கட்டுப்பாடாகவும், தமது உரிமைகள் குறித்தோ, பொருளாதாரப் பிரச்சினைகள் குறித்தோ மக்கள் கவலைப் படாமலும் எதிர்ப்புக் காட்டாமலும் இருக்க வேண்டுமென அது எதிர்பார்க்கிறது. இலங்கையின் இந்த ஊதிப் பெருத்த இராணுவம் குறித்து எல்லோருக்கும் தெரிந்த ஒரு உண்மையை நாம் எந்தக் காலத்திலும் மறந்து விடக்கூடாது. இலங்கை இராணுவம் என நாம் அழைத்தபோதும் அது முழுக்க முழுக்க சிங்கள இராணுவம் என்பதுதான் அது. போர்க்காலத்தியப் பொருளாதாரச் சீரழிவு, வேலை இல்லாத் திண்டாட்டம் ஆகிய பின்னணியில் தென்னிலங்கைக் கிராமப்புற சிங்கள இளைஞர்களுக்குப் பெரிய அளவில் வேலை வாய்ப்பு அளிக்கும் நிறுவனமாக இலங்கை இராணுவம்தான் இருந்தது. தவிரவும் அது வெற்றி பெற்ற இராணுவம், உள்நாட்டுப் போரை முடிவுக்குக் கொண்டுவந்து குடிமக்களின், அதாவது சிங்கள மக்களின் நம்பிக்கையையும் நன்மதிப்பையும் பெற்ற இராணுவம். ஆமாம், இன்றைய இலங்கை அரசைப் பொறுத்த மட்டில் குடிமக்கள் என்றால் அது சிங்கள மக்கள்தான். இந்த இராணுவம் குறித்த கொடிய அச்சம் இதர தமிழ், முஸ்லிம் சிறுபான்மையின

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ருக்கு உள்ளது குறித்த கவலை அரசுக்குக் கிடையாது. தமிழ், முஸ்லிம் மற்றும் மலையகச் சிறுபான்மை மக்களின் ஆதரவையோ, நம்பிக்கையையோ பெற வேண்டிய அவசியமும் இன்று அதற்கில்லை.

தென்னிலங்கைப் பெரும்பான்மைச் சிங்கள மக்களின் நன்மதிப்பையும் நம்பிக்கையையும் பெற்ற இராணுவத்தின் உதவி இன்றைய வளர்ச்சித்திட்டங்களை, குறிப்பாக நகர்ப்புற வளர்ச்சித் திட்டங்களைச் செயற்படுத்துவதற்கு அரசுக்குத் தேவைப்படுகிறது. எடுத்துக்காட்டாக சாலை விரிவாக்கத்திற்காக நடைபாதைக் கடைகளையோ இல்லை கட்டிடங்களையோ அகற்ற வேண்டுமானால் இராணுவத்தின் மூலம் அதைச் செய்வது அரசுக்கு எளிதாகிவிடுகிறது.

இராணுவத்திற்கு ஒதுக்கப்படும் இந்தப் பெரு நிதி குறித்து நாம் ஒன்றைக் கவனத்தில் கொள்ள வேண்டும். இதில் பெரும்பகுதி படைவீரர்களின் ஊதியம் மற்றும் இதர சலுகைகளுக்காகவே செலவிடப்படுகிறது. ஆக இது திரும்பத் திரும்ப மேற்கொள்ளப்படும் செலவு (recurring expenditure). ஆண்டுக்காண்டு இது அதிகரிக்கத்தான் போகிறதே ஒழிய குறையப் போவதில்லை. மேலே குறிப்பிட்டுள்ள தொகை சென்ற ஆண்டைக் காட்டிலும் 29.5 சதம் அதிகம். பாதுகாப்புக்காக இவ்வளவு செலவா என யாரும் கேட்கவும் இயலாது. பயங்கரவாதத்தை ஆதரிப்பவர்கள்தான் இராணுவச் செலவைக் குறைக்க வேண்டும் என்பார்கள் என்று மகிந்தவின் இன்னொரு சகோதரரும் நிதி அமைச்சருமான பசில் ராஜபக்ஷ ஒரு முறை கூறியது குறிப்பிடத்தக்கது. இவ்வளவு பெரிய செலவை இன்று அரசு விரும்பினாலும் குறைக்க இயலாது. கிராமப்புறச் சிங்கள இளைஞர்கள் மத்தியில் வேலையின்மையைக் குறைத்துள்ள இந்நிறுவனம் அப்படியொன்றும் திடீரென ஆட்குறைப்புச் செய்துவிட இயலாது.

அதேநேரத்தில் இத்தனை பெரிய இராணுவத்தைப் போரில்லாச் சூழலில் சும்மா வைத்திருக்கவும் இயலாது. இந்தப் பின்னணியில்தான் இன்று இலங்கை இராணுவம், சாலை அமைப்பதிலிருந்து, சுற்றுலாத் தலங்களையும் பூங்காக்களையும் காப்பதிலிருந்து (Maintenance), ரிசார்ட்ஸ் மற்றும் ட்ராவெல்ஸ் சேவை ஆற்றுவதிலிருந்து, ஆக்கிரமிக்கப்பட்ட தமிழர் நிலங்களில் விவசாயம் செய்வதிலிருந்து, சாலை ஓரக் கடைகள் நடத்துவதிலிருந்து, மாணவர்களுக்கும் தலைமை ஆசிரியர்களுக்கும் தலைமைப் பயிற்சி அளிப்பதிலிருந்து எல்லா வளர்ச்சிப் பணிகளும் ஈடுபடுத்தப்படுகிறது. வன்னியில் இராணுவம் சாலை அமைக்கிறது, பள்ளிகள் கட்டுகிறது, வைத்திய முகாம்கள் நடத்துகிறது. தொண்டு நிறுவனங்களைப் (NGOs) பதிவு செய்து, கண்காணித்து, வழி நடத்துகிறது

நேரடியான ஆளுகையிலும் இராணுவம் ஈடுபடுத்தப்படுகிறது. ஓய்வு பெறும் இராணுவ உயர் அதிகாரிகள் மாநில ஆளுநர்களாக நியமிக்கப்படுகின்றனர். இலங்கை அரசியல் சட்டத்தின்படி இந்திய ஆளுநர்களைக் காட்டிலும் இலங்கை ஆளுநர்களுக்குக் கூடுதல் அதிகாரம் உண்டு என்பது மனங்கொள்ளத்தக்கது. மாநிலத் தேர்தல்கள் நடத்தப்படாமல் தட்டிக் கழிக்கப்படும் வடக்குப் பகுதியில் இப்படி ஒரு இராணுவ அதிகாரியின் ஆட்சிதான் நடக்கிறது. ஏற்கனவே அவர் இதே பகுதியில் இராணுவக் கட்டளை அதிகாரியாக இருந்தவர். சிவில் அதிகாரிகள், அதிலும் குறிப்பாகத் தமிழ்ச் சிவில் அதிகாரிகள் இத்தகைய இராணுவ அதிகாரத்தால் எத்தகைய நெருக்கடிகளுக்கு உள்ளாக்கப்படுகின்றனர் என்பதை மார்ச் 2012இல் வெளியிடப்பட்ட பன்னாட்டு நெருக்கடிக் குழு (International Crisis Group) வெளியிட்டுள்ள அறிக்கை சுட்டிக்காட்டியுள்ளது. இராணுவத் தலையீட்டிற்கு இவர்கள் ஏதும் எதிர்ப்புக் காட்டினால் அவர்களை விடுதலைப் புலிகள் என முத்திரை குத்துவது, இடமாற்றம் செய்வது அல்லது கட்டாயப்படுத்திப் பணிய வைப்பது என்கிற நடைமுறைகள் மேற்கொள்ளப்படுவதையும் அவ்வறிக்கை பதிவு செய்துள்ளது.



தவிரவும் காவல்துறையும் இராணுவ அமைச்சகத்தின் கட்டுப்பாட்டிலேயே உள்ளதால் பெரும்பாலும் வடக்கு, கிழக்கில் சட்டம் ஒழுங்கு இராணுவத்தின் மூலமே மேற்கொள்ளப்படுகிறது. காவல்துறையினர் கண்ணில் படுவதே அபூர்வம். எங்கு நோக்கினும் இராணுவத்தின் இருப்பு, சிவில் வெளி எங்கும் இராணுவம் என்பதாகத்தான் தமிழர்களின் பாரம்பரிய வடக்கு மாகாணம் இன்று காட்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

சியளிக்கிறது.

ராஜபக்ஷக்களின் இராணுவ மயமாக்கல் நடவடிக்கைகளின் பின்னணியாக இன்னொரு காரணத்தைச் சுட்டுகிறார் புகழ்பெற்ற கட்டுரையாளரும் ஆய்வாளருமான திஸராணி குணசேகர (EPW, Feb 16, 2013). ராஜபக்ஷக்களின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி அது தோன்றி வளர்ந்த இந்த 63 ஆண்டுகளில், 57 ஆண்டுகள் வேறொரு குடும்பத்தின் கையில் இருந்தது. எஸ்.டபிள்யூ.ஆர்.டி. பண்டாரநாயக்கவால் உருவாக்கப்பட்ட அக்கட்சி, பின்னர் அவரது மனைவி, அதற்குப்பின் அவர்களின் மகள் ஆகியோரின் செல்வாக்கில் இருந்தது. அதற்குப் பின் தகுதியான வாரிசு இல்லாத காரணத்தால் அது ராஜபக்ஷக்களின் கைகளுக்கு நழுவியது. எனினும் இன்னும்கூட கட்சி மீது சந்திரிகா குடும்பத்திற்கு ஒரு பிடி இருக்கிறது என்கிற அச்சம் ராஜபக்ஷக்களுக்கு உள்ளது என்கிறார் திஸராணி.

எனவே ஏதும் எசகு பிசகாக நடந்து விட்டால் தங்களது ஆட்சியைத் தக்க வைப்பதில் தங்களின் கட்சியைக் காட்டிலும் இராணுவத்தை நம்ப வேண்டிய கட்டாயம் ராஜபக்ஷக்களுக்கு உள்ளது. எனவேதான் போர் முடிந்த கையோடு இராணுவத்தைத் தம் கைகளுக்குள் கொண்டு வரும் முயற்சியில் அவர்கள் இறங்கினர். பொன்சேகா போன்ற ஆளுமை மிக்க ஜெனரல்களைத் தூக்கி எறிந்ததோடு குற்றஞ்சாட்டிச் சிறையில் அடைத்தனர். பொன்சேகாவிற்கு வேண்டிய அதிகாரிகள் சகல மட்டங்களிலும் களை எடுக்கப்பட்டனர். அந்த இடங்கள் ராஜபக்ஷக்களுக்கு விசுவாசமான அதிகாரிகளால் நிரப்பப்பட்டன. போர் முடிந்த கையோடு பொன்சேகா மேலும் ஒரு இலட்சம் பேரை படையில் சேர்த்து இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டுமென்றார். ஆட்சியைக் கவிழ்த்து இராணுவ ஆட்சியை நிறுவுதல் என்கிற நிலையை அவர் எடுக்காத போதும் சம அளவு அதிகாரமிக்க ஒரு வலுவான சக்தியாக இராணுவம் இருக்க



**இத்தனை பெரிய இராணுவத்தை போரில்லாச் சூழலில் சும்மா வைத்திருக்கவும் இயலாது என்ற பின்னணியில் இன்று இலங்கை இராணுவம் சாலை அமைப்பதில் இருந்து சுற்றுலாத் தலங்கள், பூங்காக்களை பாதுகாப்பது, தமிழர் நிலங்களில் விவசாயம் செய்வது, பாடசாலைகள் கட்டுவது வரை பெருவாரியான பணிகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது**

வேண்டுமென்பது அவரது திட்டமாக இருந்தது. ஆனால் ராஜபக்ஷக்களின் திட்டம் வேறுவிதமாக இருந்தது. இராணுவத்தைப் பலப்படுத்த வேண்டும். ஆனால், அது தங்களின் குடும்பத்தின் கட்டுப்பாட்டிலும், அதற்கு விசுவாசமாகவும் இருக்க வேண்டும் என அவர்கள் நினைத்தனர். பொன்சேகாவைப் பந்தாடி மற்றவர்களுக்கு எச்சரிக்கையும் விடுத்தனர்.

ராஜபக்ஷ குடும்பம் இன்று அதிகாரமில்லாமல் வாழ இயலாத நிலை ஏற்பட்டுள்ளது என்கிறார் மூத்த அரசியல் விமர்சகர் குமார் டேவிட் (EPW, Feb 16, 2013). இதற்கு மூன்று காரணங்களை அவர் குறிப்பிடுகிறார். முதலாவதாகப் பெரிய அளவில் ஆள் கடத்தல், வரலாறு காணாத ஊழல் ஆகியவற்றை அவர்கள் செய்துள்ளனர். அரசதிகாரத்தை இழந்தால் இது குறித்த உள்நாட்டு விசாரணைகளுக்கு அவர்கள் பதிலளித்தாக வேண்டும். இரண்டாவதாக தலைக்கு மேல் கத்தியாகத் தொங்கும் பன்னாட்டுப் போர்க்குற்ற விசாரணையிலிருந்து பாதுகாத்துக் கொள்வதற்கு தேர்ந்தெடுக்கப்பட்ட குடியரசுத் தலைவர் என்கிற நிலை அவர்களுக்கு உதவும். மூன்றாவதாக வெளிநாட்டிலிருக்கும் விடுதலைப் புலி ஆதரவாளர்களின் பழிவாங்கல் நடவடிக்கைகளிலிருந்து தற்காத்துக் கொள்ளவும் அரச பதவி உதவும். அரசதிகாரத்தை விடுவதற்கு அவர்கள் விரும்பவில்லை என்பதைக் காட்டிலும் அவர்களால் அதை விட இயலாது என்பதுதான் உண்மை என்கிறார் குமார். எனவே என்ன விலை கொடுத்தும் இந்த இராணுவத்தையும் அதன் மூலம் தம் பதவியையும் தக்க வைக்க வேண்டிய தேவை அவர்களுக்கு உள்ளது.

அரசதிகாரத்தைத் தக்க வைப்பதில் இராணுவத்திற்கு அடுத்தபடியாக அவர்கள் நம்புவது அவர்கள் உருவாக்கியிருக்கும் புரவலர்- பயன்பெறுவோர் உறவு (patron client relationship). பல மட்டங்களில் இது அமைந்துள்ளது என்கிறார் குமார். காவல் நிலையத்திற்கு ஒரு போன் பண்ணுவது, ஒரு அறிமுகக் கடிதம் கொடுப்பது, ஒரு அரசுப் பணியில்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முறை மீறி ஒருவரைப் பணியமர்த்துவது, ஒரு டென்டர் அல்லது கான்ட்ராக்ட் பெறுவது அல்லது ஒரு நில மோசடியைச் சட்டபூர்வமாக்குவது என்றெல்லாம் இது அமைகிறது. நினைவிருக்கட்டும் இப்படிப் பயனடைவோர்கள் எல்லோரும் சிங்களவர்கள்தான் என்பதும் குறிப்பிடத்தக்கது.

இது எல்லா நாடுகளிலும் வழக்கம்தான் என்ற போதிலும் அளவிலும் தன்மையிலும் இது இலங்கையில் அதிகமாக உள்ளது. திட்டமிட்டு எல்லோரும் ஊழலில் பங்கு பெறுபவர்களாக ஆக்கப்பட்டு யாரும் யாருடைய குற்றங்களையும் கேட்பதற்குத் தகுதியற்றவர்களாக்கப்படுகின்றனர். சுமார் ஒரு மில்லியன் பேர் கொண்ட ஒரு பாதுகாப்பு வலயம் இவ்வாறு ராஜபக்ஷக்களைச் சுற்றி உருவாக்கப்பட்டுள்ளது என்கிறார் குமார் டேவிட்.

### வடக்கில் இராணுவமயமாக்கலின் அளவும் விளைவும்

யாழ்ப்பாணம், முல்லைத்தீவு, கிளிநொச்சி, வவுனியா என நான்கு முக்கிய இராணுவத் தலைமையகங்கள் வடக்கில் உள்ளன. 21, 53, 54, 56, 57, 58, 59, 61, 64, 65, 66, 68 ஆகிய 12 படைப் பிரிவுகள் வன்னியிலும் 51, 52, 55 என்கிற 3 படைப் பிரிவுகள் யாழ். மற்றும் தீவுப் பகுதிகளில் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளன. இது தவிர மொத்தமுள்ள 8 அதிரடிப் படைப்பிரிவுகளில் குறைந்தபட்சம் மூன்று (2,3,7) வடக்கில் உள்ளன. இதில் அடங்காத வேறு சில ரெஜிமென்ட் பிரிவுகளும் இரண்டு மிகப் பெரிய கடற்படைத் தளங்களும், இரண்டு முக்கிய விமானப் படைத் தளங்களும் இன்று வடக்கிலுள்ளன.

வடக்கு மாகாணம் இலங்கையின் மொத்தப் பரப்பில் 14 சதத்தில் (8894 ச.கிமீ) அமைந்துள்ளது. இதில் இந்தப் 15 படைப் பிரிவுகளும் நிரந்தரமாகக் குடிகொண்டுள்ளன. 2011 ஆம் ஆண்டுக்கணக்குப்படி வட மாகாணத்தின் மொத்த மக்கள் தொகை 9,97,754. பொதுவாக ஒரு படைப் பிரிவில் 10,000 இலிருந்து 20,000 வீரர்கள் வரை இருப்பர். இந்த அடிப்படையில் மேற்கொள்ளப்படும் ஒரு கணக்கீட்டின்படி மொத்தத் தரைப்படையில் 60 சதம், அதாவது 1,80,000 பேர் வடமாகாணத்தில் உள்ளனர். இவர்களோடு கடல், விமானப் படை வீரர்களையும், அதிரடிப் படையினரையும், சிவில் பாதுகாப்புப் படையினரையும், உளவுத் துறையினரையும் சேர்த்துக்கொள்ள வேண்டும். இவர்கள் தரைப்படையின் எண்ணிக்கையில் சுமார் 10 சத அளவு உள்ளனர் எனக் கொண்டால், மொத்தம் வடக்கில் மட்டும் 1,98,000 இராணுவத்தினர் உள்ளனர் எனலாம். அதாவது வடக்கின் படைச் செறிவு (troupe density) 1000 குடிமக்களுக்கு 198.4 என்றாகிறது. அல்லது ஒவ்வொரு 5 சிவிலியன்களுக்கு ஒரு இராணுவ வீரன் என்கிற வீதத்தில் இன்று அங்கு சிங்களப் படை நிறுத்தப்பட்டுள்ளது. பன்னாட்டு அனுபவங்களுடனும் ஆய்வுகளுடனும் ஒப்பிடும்போது இது மிக மிக அதிகம்.

அமெரிக்க இராணுவத் துறையின் சார்பாக பாதுகாப்பு ஆய்வுகளுக்கான நிறுவனம் எனும் அமைப்பு (IDA) உலக அளவில் நடைபெற்ற 41 உள்நாட்டுப் போர்களை ஆய்வு செய்து அளித்துள்ள அறிக்கை இதை உறுதி செய்கிறது. இத்தகைய போர்களை பெரிய அளவில் வெற்றிகரமாக (அதாவது 80சதத்துக்கு மேலாகச் சாதகமாக)க் கையாள 1000 பேருக்கு 40இலிருந்து 50 என்கிற அளவில் படைச் செறிவு இருந்தால் போதும் என அவ்வறிக்கை சுட்டிக் காட்டுகிறது. இந்த அளவைக் காட்டிலும் 4 அல்லது 5 மடங்கு படைச் செறிவு இன்று வடக்கில் உள்ளது. இதில் கவனிக்க வேண்டிய அம்சம் என்னவெனில், இந்த 40 முதல் 50 வீரர்கள் போதும் என்கிற கணக்கு போர் நடந்து கொண்டுள்ளபோது தேவையான படைச்செறிவின் கணக்கு போர் முடிந்துள்ள சூழலில் இன்று 200 என்கிற படைச் செறிவு தக்கவைக்கப்படுவதை எந்த நியாயத்தின் அடிப்படையிலும் விளக்க இயலாது. ஈராக்கில் உச்சகட்டப் போர் நடந்து கொண்டிருந்த போதும்கூட (2007) அங்கிருந்த படைச் செறிவு 20 தான்; 1970இல் வட அயர்லாந்தில் பயன்படுத்தப்பட்ட படைச் செறிவு 23. பிரான்ஸ் அரசு அல்ஜீரியப் போரில் பயன்படுத்திய படைச் செறிவு 60; செசன்யா போரில் பங்கு பெற்ற ரஷ்யப் படைச்செறிவு 150. இவை எல்லாமும் கூட போர் நடந்து கொண்டிருந்தபோது ஈடுபடுத்தப்பட்ட படைச் செறிவுகள். இவை எல்லாவற்றையும் விட இன்று அதிகமாகவும் நிரந்தரமாகவும் வட மாகாணத்தில் சிங்களப் படைகள் நிறுத்தி வைக்கப்பட்டுள்ளன. மேற்குறித்த அயர்லாந்துப் போரின் படைச் செறிவை ஆய்வு செய்த இங்கிலாந்துப் பாதுகாப்புத் துறையின் கூற்றுப்படி 2008 வரையிலும் கூட வன்னியில் போரில் பங்கு பெற்ற சிங்களப் படைச்செறிவு 60 ஆகத்தான் இருந்தது. அதன் பின்னரே 198 என்கிற அளவிற்கு இது அதிகரிக்கப்பட்டது.

தற்போது வடக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படைகளின் அளவைப் பாதியாகக் குறைத்தால் கூட, பிறகும் அங்கிருக்கக்கூடிய படைச் செறிவு 1000 சிவிலியன்களுக்கு 100 படை வீரர் என்கிற அளவில் இருக்கும். அதுவே சர்வதேசச் சராசரியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக இருக்கும்.

### இராணுவத்தின் நில ஆக்கிரமிப்பு

நிரந்தரமாக வடக்கில் இப்படிக் குடியமர்த்தப்பட்ட இராணுவம் பெரிய அளவில் இன்று வன்னியிலும் யாழ்ப்பாணத்திலும் தமிழ் மக்களின் பாரம்பரிய நிலங்களைக் கையகப்படுத்தி வருகிறது. இது குறித்த குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படும் போது தாங்கள் கைப்பற்றியுள்ள நிலங்கள் யாவும் அரசுக்குச் சொந்தமானவை அல்லது ஏற்கனவே விடுதலைப் புலிகள் வசம் இருந்தவைதான்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

என இராணுவத் தரப்பில் பதிலளிக்கப்படுகிறது. அது உண்மை எனக் கொண்டாலுங்கூட, அவையும் பெரும்பாலும் மக்களிடமிருந்து பறிக்கப்பட்டவைதான்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பாகச் சென்ற அக்டோபர் 21, 2011 அன்று இலங்கை நாடாளுமன்றத்தில் உறுப்பினர் எம்.ஏ. சுமந்திரன் தாக்கல் செய்த ஒரு அறிக்கையின்படி வடக்கிலும் கிழக்கிலும் இலங்கை இராணுவம் 7000 ச.கி.மீ பரப்பை ஆக்கிரமித்துள்ளது. மாற்றுக் கொள்கைகளுக்கான மையம் (CPA) 2011 இல் வெளியிட்டுள்ள ஒரு அறிக்கை மற்றும் முன்குறிப்பிட்ட பன்னாட்டு நெருக்கடிக் குழுவின் (ICG) அறிக்கை ஆகியன இந்நில ஆக்கிரமிப்பு குறித்த பிரச்சினைகளாகக் கீழ்க் கண்டவற்றைப் பட்டியலிடுகின்றன: 1) இராணுவ இருப்புகளுக்காகவும், உயர் பாதுகாப்பு வலயங்களுக்காகவும் நிலங்கள் பறிக்கப்படுதல் 2) இத்தகைய நில அபகரிப்புகளின் போது சட்டபூர்வமாக வழங்கப்பட வேண்டிய இழப்பீடுகள் மற்றும் அகற்றப்பட்ட மக்களை மறு குடியமர்த்துதல் ஆகியன மேற்கொள்ளப்படுவதில்லை. 3) கட்டாய இடப்பெயர்வு 4) தமது நிலங்களை உரிமையாளர்களும், சில நேரங்களில் அரசு அதிகாரிகளும் சென்று பயன்படுத்தவும் பார்வையிடவும் அனுமதி மறுக்கப்படுதல் 5) பாரம்பரியமாக இந்நிலங்களுடன் தொடர்பில்லாத சிங்கள மக்களைக் கொண்டு வந்து குடியமர்த்துதல்.

2011இல் வெளியிடப்பட்ட அரசுச் சுற்றறிக்கை ஒன்று நிலப் பிரச்சினைகளை இராணுவத் தலையீட்டின் மூலம் தீர்ப்பது குறித்துப் பேசுகிறது. அரசு ஆதரவு செய்தித் தாள் ஒன்றில் மே 2012இல் வெளிவந்த ஒரு அறிக்கையின்படி, மன்னார், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா மற்றும் யாழ்ப்பாணப் பகுதிகளில் இராணுவம் சாகுபடி செய்வதை ஏற்றுக் கொள்கிறது. முன் குறிப்பிட்ட ICG அறிக்கை இது தொடர்பான இன்னொரு பிரச்சினையைச் சுட்டிக்காட்டுகிறது. இவ்வாறு இராணுவ உழைப்பில் விளைவிக்கப்படும் விளை பொருட்களுக்கு விவசாயக் கூலி கொடுக்கப்பட வேண்டியதில்லை என்பதால், இவை சந்தையில் குறைந்த விலையில் கொண்டு வந்து குவிக்கப்படுகின்றன. இது அப்பகுதியின் ஏழைச் சிறு விவசாயிகளின் வருமானத்தைப் பெரிய அளவில் பாதிக்கிறது (Crisis Group Asia Report, No 220, March 16, 2012).

இது தவிர வெற்றிகண்ட பெருமிதத்துடன் மக்களின் உணர்வுகளைப் புண்படுத்தும் வகையிலான ஆக்கிரமிப்புகளுக்கு எடுத்துக்காட்டாக புலிகளின் மாவீரர் கல்லறைகளின் அழிப்பையும் ஆக்கிரமிப்பையும் கூறலாம். யாழ்ப்பாணம் கோப்பாயில் அமைந்திருந்த மிகப்பெரிய மாவீரர் கல்லறை இன்று தகர்க்கப்பட்டு அவ்விடத்தில் 51ஆவது படைப்பிரிவின் தலைமையகம் அமைக்கப்பட்டுள்ளது. பிற மாவீரர் கல்லறைகள், திலீபன் நினைவுத்தூண் உட்பட பிற நினைவுச் சின்னங்கள் தகர்க்கப்பட்டு சாலை விரிவாக்கம் முதலான அகக் கட்டுமானப் பணிகளுக்குப் பயன்படுத்தப்படுகின்றன.

எல்லாவற்றிற்கும் மேலாக எங்கு நோக்கினும் இராணுவத்தின் பார்வையில் நனைந்தவாறுதான் தமிழ் மக்கள் நடமாட இயலும். 2012ஆம் ஆண்டு நிதிநிலை அறிக்கையை அளித்து பசில் ராஜபக்ஷ பேசும்போது, (இலங்கைத் தீவை) ஒரே நாடாக உணர வைக்கும் பொருட்டு நாட்டின் எல்லாப் பகுதிகளிலும் இராணுவ முகாம்களை அமைப்பது அவசியமாகிறது எனக் கூறியது குறிப்பிடத்தக்கது. சிங்கள மக்கள் மத்தியில் இராணுவ முகாம்கள் இருப்பது குறித்து அவர்களுக்கு இப்போதைக்குப் பெரிய கவலை இல்லை. அவர்களைப் பொறுத்தமட்டில் இராணுவ வீரர்கள் என்போர் நம்ம பசங்க. ஒரு பன்மைச் சமூக அமைப்பில் ஒற்றை இன இராணுவத்தின் இருப்பு பிற இனங்கள் மத்தியில் ஏற்படுத்தும் உணர்வுகள் பாரதூரமானவை. வடக்கைத் தனது நலனாக நினைத்து இராணுவம் அதிகாரம் செலுத்தும் அதே நேரத்தில், அந்நிலத்தின் மக்களை அது தன் மக்களாக நினைப்பதில்லை.

2012ஆம் ஆண்டுக்கான நிதி நிலை அறிக்கையில் 3000 மில்லியன் ரூபாய்கள் இராணுவத்திற்கான நிரந்தரக் குடியிருப்புகள் அமைப்பதற்காக ஒதுக்கப்பட்டது. தமிழ் மக்களின் பாரம்பரியமான வடக்கில் சிங்கள அரசு முன்னின்று நடத்தும் இந்த இராணுவக் குடியேற்றம் ஒரு சனப்பரவல் மறு பொறியியல் (demographic re-engineering) என்கிறார் திஸராணி குணசேகரா. ஆங்காங்கு உருவாக்கப்படும் இத்தகைய இராணுவக் கன்டோன்மென்ட்களும் குடியிருப்புகளும் தமிழ்ப் பகுதியின் தொடர்ச்சியை (contiguity) அறுக்கின்றன. கட்டுப்பாட்டு மையங்களாகவும் ஆதிக்கக் குறியீடுகளாகவும் அவை ஆங்காங்கு முளைத்து நிற்கின்றன. சுருங்கிவரும் தமிழ்க் கடலுக்குள் விரிந்து வரும் சிங்களத் தீவுக் கூட்டமாய்த் திமிர்த்து நிற்கின்றன. பலஸ்தீனியத் தொடர்ச்சியை எவ்வாறு இஸ்ரேல் அறுத்தெறிந்ததோ அதே தந்திரோபாயம் இங்கும் பயன்படுத்தப்படுகிறது என்கிறார் திஸராணி. ஏதேனும் உரிமைப் போராட்டத்தை இனி தமிழர்கள் தொடங்க நேர்ந்தால் உடனடியான முதற்கட்டப் பாதுகாப்புக் கவசமாக இப்படிக் குடியமர்த்தப்பட்ட சிங்கள இராணுவ வீரர்களும் அவர்களது குடும்பத்தினரும் அமைவர்.

சென்ற ஆண்டு நிதிநிலை அறிக்கையில் இனி மூன்றாவது குழந்தையைப் பெறுகின்ற ஒவ்வொரு இராணுவ வீரனுக்கும் ஒரு இலட்ச ரூபாய் நிதி உதவி அறிவிக்கப்பட்டது. இந்த ஆண்டு இச்சலுகை காவல்துறைக்கும் விரிவாக்கப்பட்டுள்ளது. சிங்கள இராணுவக் குடும்பங்கள் பெரிதாக அமைவது அரசால் இவ்வாறு ஊக்குவிக்கப்படுகிறது.

இவ்வாறு வடபகுதி இராணுவமயப்படுத்தப்படுதலை நியாயப்படுத்த இலங்கை அரசு மூன்று காரணங்களைச் சொல்லுகிறது. 1) விடுதலைப் புலிகளால் வடபகுதி கடு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மையாக இராணுவமயமாக்கப்பட்டிருந்தது. போர் முடிந்த பின்னுங்கூட இதில் பெரும்பகுதி இன்னும் கண்ணி வெடி வயல்களாகவே உள்ளது. இந்த வெடிக்காத ஆயுதங்களைக் (Unexploded Ordinance - UXO) கெல்லு எடுத்து இப்பகுதியை மக்கள் பாதுகாப்பாக வாழும் பகுதியாக மாற்றுவதற்கு இராணுவ இருப்பு அவசியமாகிறது. இது ஏற்றுக் கொள்ளக்கூடிய ஒன்றல்ல. கண்ணி வெடிகள் முதலானவற்றை நீக்குவதற்கு இலங்கை இராணுவத்தின் கண்ணிவெடி நீக்கப் பிரிவைத் தவிர வேறு எட்டு வெளிநாட்டு மனிதாபிமான நிறுவனங்கள் தற்போது வடபகுதியில் செயல்படுகின்றன. தற்போது பெரும்பகுதி கண்ணிவெடி நீக்கம் செய்யப்பட்டுவிட்டது. வெகு விரைவில் முழுமையாகக் கண்ணிவெடி நீக்கம் செய்யப்பட்டு விடும் என்கிறபோது இந்தக் காரணத்தைச் சொல்லி ஒரு பெரும்படையை நிரந்தரமாகக் கொண்டுவந்து குடியமர்த்துவது என்ன நியாயம்?

2) போர் முடிந்துவிட்ட போதும் போரினால் ஏற்பட்ட பாதுகாப்பின்மை இங்கு தொடரவே செய்கிறது. எடுத்துக்காட்டாக, 22 ஆண்டுகளுக்கு முன் விடுதலைப் புலிகளால் 48 மணி நேர அவகாசம் கொடுத்து இங்கிருந்து வெளியேற்றப்பட்ட சுமார் 80,000 முஸ்லிம்கள் இன்னும் திரும்பவில்லை. திரும்பி வருபவர்களது நிலங்கள் பல இடங்களில் பிறர் வசம் உள்ளது. இது போன்ற பிரச்சினைகள், போரின் ஊடான பல்வேறு பகைகள் ஆகியவற்றைச் சமாளிக்க நிரந்தரமாகப் படைகளைத் தங்க வைக்க வேண்டியுள்ளது. இதையும் ஏற்றுக்கொள்ள இயலாது. இப்படியான பிரச்சினைகள் இருக்கத்தான் செய்கின்றன என்ற போதிலும் இவற்றைச் சிவில் நிர்வாகத்தின் கீழ் காவல் துறையைக் கொண்டே எதிர்கொள்ள இயலும். அப்படி எதிர்கொள்வது தான் சரியாகவும் இருக்கும். மாறாகக் காவல்துறையின் இருப்பைக் குறைத்துவிட்டு, இருக்கிற காவல்துறையையும் இராணுவ அமைச்சகத்தின் கீழ்க் கொண்டு வருவது ஜனநாயக



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்

ஆளுகைக்கு ஏற்றதல்ல.

3) போரினால் அழிந்துள்ள வட பகுதியில் இன்னும் ஏராளமான வளர்ச்சிப் பணிகள் மேற்கொள்ளப்பட வேண்டியுள்ளது. இராணுவ இருப்பு இதைச் சாத்தியமாக்கும். இது முற்றாக மறுக்கப்படவேண்டிய ஒரு கருத்து. இராணுவத்தின் பணி இதுவன்று. இராணுவம் இதற்கான நிறுவனமும் அல்ல. இராணுவம் இது போன்ற பணிகளை சிறப்பாகவும் ஊழலில்லாமலும் நிறைவேற்றும் என்கிற கருத்து அபாயகரமானது மட்டு மல்ல, அபத்தமானதும் கூட. கல்வி மற்றும் மருத்துவ நலத் துறைகளில் இலங்கை முன்னதாகச் சாதித்துள்ள சாதனைகளெல்லாம் சிவில் நிர்வாகத்தின் கீழ் இத்துறைகளுக்கு நேரடியாக நிதி ஒதுக்கீடும், உரிய அதிகாரங்களும் கொடுத்து நிறைவேற்றப்பட்டவைதான். இந்தோனேசியா, எகிப்து, பாகிஸ்தான் முதலான நாடுகளில் இவ்வாறு மேற்கொள்ளப்பட்ட முயற்சிகள் அனைத்தும் தோல்வியையே தழுவியுள்ளன.

அன்றாட சிவில் நிர்வாகப் பணிகளில் இராணுவத் தலையீடு என்பது சகித்துக் கொள்ள இயலாத ஒன்று. சாலைகளில் ஏற்படும் சிறு விபத்துகளில் தலையிட்டு அதே இடத்தில் பிரச்சினையைத் தீர்ப்பது, அல்லது நகரத்தில் ஏதேனும் ஒரு பகுதி தூய்

**தற்போது வடக்கில் நிறுத்தி வைக்கப்பட்டுள்ள படைகளின் அளவை பாதியாகக் குறைத்தால் கூட பிறகும் அங்கிருக்கக்கூடிய படைச்செறிவு ஆயிரம் குடிமக்களுக்கு நூறு படை வீரர்கள் என்கிற அளவில் இருக்கும். அதுவும் கூட சர்வதேச சராசரியைக் காட்டிலும் பல மடங்கு அதிகமாக இருக்கும்**

மையற்றுக் கிடந்தால் அப்பகுதியில் கடை வைத்திருப்பவர்களுக்கு ஆணையிட்டு அவற்றைத் தூய்மை செய்யச் சொல்லுவது, அரசுப்பணியில் இருப்பவர்களை, அவர்களது பணியல்ல அது வேறொன்றைக் கூடுதலாகச் செய்யச் சொல்லுவது என அன்றாடம் எரிச்சலூட்டும் சம்பவங்கள் குறித்துப் பலரும் எழுதியுள்ளனர்.

சென்ற ஆண்டு நான் யாழ்ப்பாணம் சென்றிருந்தபோது ஒரு வானில் நண்பர் தேவா குடும்பத்துடன் தீவுப் பகுதிக்குச் சென்றேன். கடற்பாலத்தில் ஏறுமிடத்தில் நின்றிருந்த ஒரு இராணுவ வீரன் வண்டியை நிறுத்தி எங்கே போகிறீர்கள்? என விசாரித்தான். நாங்கள் சொன்னோம். இரண்டு சாப்பாட்டுக் கேரியர்களைக் கொடுத்து அல்லப்பிட்டியிலுள்ள செக்போஸ்டில் கொடுத்துவிடுமாறு சொன்னான். நாங்கள்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அதை வாங்கி வைத்துக் கொண் டோம். அவன் இதை மிக்க மரியாதை யுடன்தான் சொன்னான். அவன் ஒரு இராணுவ வீரனாக இல்லாமல் சாதா ரண ஒருவராக இருந்து இந்த உதவி யைக் கேட்டிருந்தாலும் நாம் செய்தி ருப்போம். மிக அடிப்படையான ஒரு மனிதாபிமான உதவிதான் இது. எனி னும் இந்த மரியாதைகளுக்கு அப் பால் அதில் ஒரு இராணுவ அதிகாரம் இருக்கத்தான் செய்தது. ஒரு வேளை நாங்கள் அதைச் செய்ய இயலாவிட் டாலோ அல்லது விரும்பாவிட் டாலோ எங்களுக்கு அதை மறுக்க உரிமையில்லை. அதை வாங்கிச் செல்வதா, இல்லையா என்கிற தேர் வுச் சுதந்திரம் (choice) அங்கே எங்க ளுக்குக் கிடையாது. நாங்கள் அன்று செய்தது ஒரு மனிதாபிமான உதவி அல்ல. தேர்வுச் சுதந்திரமிருந்து நாங் கள் அதைச் செய்திருந்தால்தான் அது உதவி. அப்படி இல்லாதபோது அது ஒரு கட்டளைக்குக் கீழ்ப்படிதல் மட் டுமே.

### இலங்கையில் இப்போது மேற்கொள்ளப்படும் வளர்ச்சி- சில பிரச்சினைகள்

வடக்கில் மட்டுமல்ல தெற்கிலும் மக்களுக்கு மறுக்கப்படுகிற சுதந்திரத் திற்கு ஈடாக பிரமாண்டமான வளர் ச்சித் திட்டங்கள் முன்வைக்கப்படு தல் (Developmental State - Chalmers Jhonson) குறித்து முன்பே சொன்னேன். இலங்கையில் தற் போது மேற்கொள்ளப்படும் வளர் ச்சித் திட்டங்கள் குறித்து குமார் டேவிட் சில முக்கிய கருத்துகளைச் சொல்கிறார்.

(சோழப்) பேரரசோடு எவ்வாறு ஒரு பெருந்தத்துவமும் (சைவம்), பேரிலக்கியங்களும், பெருங்கோ யில்களும் உருவாயின என மறைந்த பேராசிரியர்கள் கைலாசபதி (பேரர சும் பெருந்தத்துவமும்), சிவத்தம்பி ஆகியோர் குறிப்பிடுவர். வரலாறு காணாத பெருந்தலைவனாகவும், பெரு வெற்றி ஒன்றைக் கொண்டவ னாகவும், இலங்கையின் எதிர்காலம் குறித்த மகிந்த சிந்தனை ஒன்றை வரி த்துக் கொண்டவனாகவும் தன்னை முன்நிறுத்திக் கொள்ளும் மகிந்த ராஜ பக்ஷ, தனது பெருஞ்சாதனைகளாக முன்வைப்பவற்றுள் போருக்குப் பிந் திய வளர்ச்சித் திட்டங்களான அதி வேக நெடுஞ்சாலைகள் மற்றும் ரயில் பாதைகள், நுரைச்சோலையில் நிறு வப்படும் மின்நிலையம், சொந்த ஊரான அம்பாந்தோட்டையில் நிறு வப்பட்டுள்ள துறைமுகம் மற்றும் விமானத்தளம், மெக்கல்லம் சாலை யில் கட்ட இருக்கும் பிரம்மாண்ட மான அடுக்குமாடிக் கோபுரம் மற் றும் தாமரை வடிவ நெலும் இசை யரங்கம் ஆகியவை அடங்கும். மிகப்பெரிய அளவு வெளிநாட்டுக் கடன் மற்றும் உதவிகளுடன் இவை கட்டப்பட உள்ளன. இவற்றில் பல அவற்றின் பிரம்மாண்டங்களின் அளவிற்குத் தகுந்த பயனளிக்கத் தக் கவையல்ல என்கிறார் குமார். நுரைச் சோலையில் கட்டப்படும் மின் நிலையம் (450 மில்லியன் டொலர்), தென்னிலங்கை நெடுஞ்சாலை (600 மில்லியன் டொலர்) முதலியன உட னடியாகப் பயன்தரக்கூடியவை என் பது உண்மையே. எனினும் முன்னது அதற்குரிய முழு ஆற்றலுடன் செயல் படுவதில்லை. பின்னது முழுமை யாகப் பயன்படுத்தப்படவில்லை. பொதுவில் மின் உற்பத்தி மற்றும் நெடுஞ்சாலை முயற்சிகள் மக்களுக் குத் தேவையானவை என்ற போதி லும் அம்பாந்தோட்டையில் உருவாக் கப்பட்டுள்ள துறைமுகமும் விமான நிலையமும் தோல்வியடைந்த திட் டங்கள் என்கிறார் குமார். மலைகளை உடைத்துக் கடலைக் குடைந்து உரு வாக்கப்பட்ட இத்துறைமுகம் இன்று முழுப் பயன்பாடின்றிக் கிடக்கிறது.

தொழிற்துறையினரும் வணிகர்க ளும் அவர்களது விருப்பத்திற்கு மாறாகக் கட்டாயமாக அங்கே செல்ல நிர்ப்பந்திக்கப்படுகின்றனர். உலகத் தரமான துறைமுகந்தான் அது ஆனால் உலகத் தரமான வணிகம் அதையொட்டி இல்லாதபோது அத னால் என்ன பயன்?

அம்பாந்தோட்டையில் நிறுவப்பட் டுள்ள பன்னாட்டு விமான நிலைய மும் பெரும் பயனில்லாத ஒன்று தான், அம்பாந்தோட்டைக்கு ஒரு நடுத்தரமான உள்நாட்டு நிலையமே போதுமானது. ஏராளமான பொருட் செலவில் உலகத் தரமான தொழில் நுட்பத்துடன் திகழ்ந்தபோதும் பன் னாட்டு விமானச் சேவைகள் அம் பாந்தோட்டையைத் தேர்வுசெய்வ தில்லை. அரசு கட்டாயப்படுத்தும் நிலையை எடுத்தால் விமானச் சேவைகள் இலங்கை வழியையே புறக்கணிக்கத் தயாராக உள்ளன. மெக்கல்லும் சாலைக்கோபுரமும் நெலும் இசையரங்கும் கூட அப்படித் தான்.

இவற்றிற்காகப் பெறப்பட்டுள்ள மிகப் பெரிய அளவிலான வெளி நாட்டுக் கடன் சுமை அடுத்த தலை முறையினரின் தலைகளில் ஏற்றப்பட உள்ளது. துறைமுகம் 1.3 பில்லியன் டொலர், விமான நிலையம் 230 மில் லியன் டொலர், இசையரங்கு 26 மில் லியன் டொலர், அடுக்குமாடிக் கோபுரம் 105 மில்லியன் டொலர் செலவில் கட்டப்படுகின்றன. இவை யும் முன் குறிப்பிட்ட மின்நிலையம், நெடுஞ்சாலை ஆகியனவும் சீனக் கடன் மற்றும் தொழில் நுட்ப உதவியு டன் கட்டப்படுகின்றன. இது தவிர 750மில்லியன் டொலர் செலவில் மேற்கொள்ளப்படும் கொழும்புத் துறைமுக நவீனமயமாக்கல் திட்ட மும் சீன உதவியுடன்தான் நடை பெறுகிறது.

இவற்றில் எவ்வளவு கடன், எவ் வளவு கடனில்லா உதவி (grants) எனத் தெரியவில்லை.மொத்தத்தில் 2015 வாக்கில் இத் திட்டங்களுக் கான மொத்த சீனக் கடனின் அளவு சுமார் 4.5 பில்லியன் டொலராக இருக்கும். அதாவது 600 பில்லியன் இலங்கை ரூபாய்கள். வெறும் 5 சத வட்டி என்று கொண்டாலும் கூட இலங்கை அடுத்த 20 ஆண்டுக ளுக்கு ஆண்டுதோறும் சீனாவுக்கு மட்டும் 300 மில்லியன் டொலர் செலுத்த வேண்டி இருக்கும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






எம்.பி.வித்தியாதரன்

# ஜெனீவாவில் அமெரிக்க தீர்மானத்திற்கு இந்தியா எந்த திருத்தத்தையும் முன்மொழியாத காரணம் என்ன?

ஆக, ஜெனீவாவில் ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையில் இலங்கைக்கு எதிராக இந்தியா மீண்டும் ஒரு தடவை வாக்களித்திருக்கிறது. எதிர்பார்க்கப்பட்டதைப்போன்றே இது அமைந்தது. இலங்கைக்கு ஆதரவாக இந்தியா வாக்களிக்குமென்று யாருமே, அதுவும் குறிப்பாக, தமிழ் நாட்டில் போராட்டங்கள் முன்னென்றுமில்லாத அளவுக்கு வெடித்திருக்கும் நிலையில் எதிர்பார்க்கவில்லை. சகல திராவிடக் கட்சிகளுமே, குறிப்பாக திராவிட முன்னேற்றக் கழகத்தலைவர் மு.கருணாநிதியும் அண்ணா திராவிட முன்னேற்றக்கழகத் தலைவியும் தமிழக முதலமைச்சருமான ஜெயலலிதாவும் மறுமலர்ச்சி திராவிட முன்னேற்றக்கழகத் தலைவர் வைகோவும் இலங்கைத் தமிழர்கள் மீது தங்களுக்கே கூடுதல் அக்கறை என்று காட்டிக் கொள்வதற்குப் போட்டி போட்டுக்கொண்டிருக்கும் நிலையில், காங்கிரஸ் கட்சியின் தமிழ்த் தலைவர்களும் கூட, மாநிலக்கட்சிகளின் தலைவர்களின் நிலைப்பாடுகளை எதிர்க்கத் துணிச்சல் கொள்ளவில்லை. ஜெயலலிதாவும் கருணாநிதியும் எடுத்திருக்கும் நிலைப்பாட்டை தமிழக காங்கிரஸ் முக்கிய தலைவர்களில் ஒருவரும் மத்திய கப்பல்துறை அமைச்சருமான ஜி.கே. வாசன் வெளிப்படையாகவே ஆதரித்திருப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

உண்மையில் எதிர்பார்க்கப்படாதது என்ன? ஜெனீவாவில் இந்தியப் பிரதிநிதியினால் எடுக்கப்பட்ட நிலைப்பாடே அதுவாகும். முதலாவது பதவிக்காலத்திலிருந்து மன்மோகன் சிங் அரசாங்கத்தின் தூண்களில் ஒன்றாக விளங்கி வந்திருக்கும் கருணாநிதியினால் கோரப்பட்டவாறு, அமெரிக்கத் தீர்மானத்தை மேலும் வலுவானதாக்கக்கூடிய திருத்தம் எதையும் இந்தியப் பிரதிநிதி முன்மொழியவில்லை. ஆளும் ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்து வெளியேறப் போவதாக கருணாநிதி அச்சுறுத்தியபோது, ஜெனீவாவில் உள்ள தனது பிரதிநிதியை இந்திய அரசாங்கம் ஆலோசனைகளுக்காக டில்லிக்கு வரவழைத்தது. அமெரிக்கத் தீர்மானத்தை கூடுதலான அளவுக்கு கடுமையானதாக்கக் கூடியதாக திருத்தங்களை அவர் முன்மொழிவார் என்றும் கூறப்பட்டது. அதாவது, தமிழர்களை 'இனப்படுகொலை' செய்ததாக இலங்கையைக் குற்றஞ்சாட்டும் வகையிலான திருத்தம் கொண்டுவரப்படுமென்று கூறப்பட்டது.

ஆனால், இது நடைபெறுவதற்கு



ஜெயலலிதா வைத்த பொறியில் கருணாநிதி விழுந்து விட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். மத்தியில் அதிகாரத்தை இழந்தது மாத்திரமல்ல பேரம்பேசக் கூடிய ஆற்றலையும் இழந்து விட்டார். இதை காலம் தாழ்த்தியே விளங்கிக்கொண்டார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

முன்னதாக, கருணாநிதி இறுதி ஆயுதத்தைப் பயன்படுத்தி தனது நாடகத்தை உச்சக் கட்டத்திற்குக் கொண்டு போய்விட்டார். ஜெனீவா வாக்கெடுப்புக்கு இரு இரவுகள் முன்னதாக மார்ச் 19 இரவு, கருணாநிதி மத்திய அரசாங்கத்துக்கான ஆதரவை விலக்கிக்கொள்வதென்ற தனது தீர்மானத்தை அறிவித்தார். பிறகு அத்தீர்மானத்தை நடைமுறைப்படுத்தும் அறிவிப்பும் வெளியானது. டில்லியில் அதேயிரவு, 10.30 மணியளவில் டி.ஆர்.பாலு தலைமையிலான ஐவர் கொண்ட தி.மு.க.தூதுக்குழு மத்திய அரசாங்கத்துக்கான (தங்கள் 18 எம்.பி.க்களினதும்) ஆதரவை விலக்கிக்கொள்வதென்ற கருணாநிதியின் கடிதத்தை ஜனாதிபதி பிரணாப் முகர்ஜியிடம் கையளிப்பதற்காக ராஷ்டிரபதி பவனுக்கு சென்றது. அடுத்தநாள் நண்பகல் அவர்கள் தங்களது பதவிவிலகல் கடிதங்களை பிரதமரிடம் கையளித்தனர்.

அது மாத்திரமல்ல, ஆதரவை விலக்கிக்கொள்ளும் தீர்மானத்தை திரும்பப் பெற்றுக்கொள்ளப் போவதில்லை என்றும் வெளியில் இருந்து கூட அரசாங்கத்தை ஆதரிக்கப் போவதில்லை என்றும் கருணாநிதியும் பாலுவும் தெளிவுபடுத்தினர். பாலு பிரதமரின் அலுவலகத்தை விட்டுச் சென்ற உடனடியாகவே பிரதமர் தனது சிரேஷ்ட சகாக்களுடன் தீவிர ஆலோசனைகளில் ஈடுபட்டார். அதற்கு முதல்நாள் இரவு கூட, பிரதமர் காங்கிரஸ் தலைவி சோனியா காந்தியுடனும் சிரேஷ்ட அமைச்சர்களுடனும் ஆலோசனை நடத்தினார்.

உண்மையிலேயே கருணாநிதி அவரது பரமவைரி ஜெயலலிதா வைத்த பொறியில் வீழ்ந்துவிட்டார் என்றுதான் சொல்ல வேண்டும். கருணாநிதி மத்தியில் அதிகாரத்தை இழந்தது மாத்திரமல்ல, பேரம் பேசக்கூடிய ஆற்றலையும் இழந்துவிட்டார். இதை கருணாநிதி மிகவும் காலந்தாழ்த்தியே விளங்கிக் கொண்டார். 'நாங்கள் மத்திய அரசாங்கத்திலிருந்து வெளியேறிய பிறகு தமிழர்கள் எதைச் சாதித்துவிட்டார்கள்' என்று அவர் கேள்வியெழுப்பினார். சற்று பின்னோக்கிப் பார்ப்போமேயானால், அவர் அரங்கேற்றிய நாடகம் விசை தவறிப் போய்விட்டது.

அரசாங்கத்துக்கு தொடர்ந்தும் ஆதரவளிக்கும் மனோநிலையில் தி.மு.க. இல்லை என்பதைக் கண்டுகொண்டதும், பிரதமரும் அவரது குழுவினரும் நிலைவரங்களை 'யதார்த்தபூர்வமாக' ஆராய்வதற்குத் தீர்மானித்தார்கள். இதன் விளைவு, எதிர்பார்க்கப்பட்டதைப் போன்று ஜெனீவாவில் இந்தியப் பிரதிநிதி அமெரிக்கத் தீர்மானத்துக்கு எந்தத் திருத்தத்தையும் முன்மொழியவில்லை. ஐக்கிய நாடுகள் அனுசரணையுடனான தீர்மானத்தை ஆதரிக்கும் பல நாடுகள் மத்தியில் காணப்பட்ட இணக்கப்பாடுகளைக் குழப்பியடித்துவிடுமென்பதால், இறுதிநேரத்தில் திருத்தங்களைக் கொண்டுவருவது சாத்தியமில்லாமற்போய்விட்டது என்பதே உத்தியோகபூர்வ விளக்கமாகக் கூறப்பட்டது. என்னதான் காரணமாக இருந்தாலும், இறுதி விளைவு (தமிழர்களுக்கு அதிகாரப் பரவலாக்கத்தைச் செய்வதாக முன் கூட்டியே அளித்த வாக்குறுதிகளையெல்லாம் காப்பாற்றத் தவறிய) இலங்கை அரசாங்கம் ஐ.நா.மனித உரிமைகள் பேரவையில் ஒரு மென்மையான தீர்மானத்துடன் தப்பிச் செல்லக் கூடியதாக இருந்தது. எனவே, தமிழ் நாட்டு அரசியலில் முந்திக்கொண்டு முன்னுக்குவர வேண்டுமென்ற இலக்கைக் கொண்டு செயற்பட்ட தி.மு.க.வினால் அதைச் சாதிக்கமுடியாமற் போய்விட்டது. இரண்டாவதாக, மத்தியில் அதிகாரத்தில் பங்கேற்றதன் மூலமாகக் கொண்டிருந்த வலிமையையும் தி.மு.க. இழந்து நிற்கிறது. ஜெயலலிதாவை எதிர்த்து நிற்பதற்கு அந்த வலிமையே தி.மு.க.வுக்கு உதவி வந்தது.

மத்தியில் அதிகாரத்தை இழந்துவிட்ட நிலையில் தி.மு.க.வுக்கும் அதன் தலைவருக்கும் அடுத்து என்ன காத்திருக்கிறது என்பது கடவுளுக்கு மாத்திரமே தெரியும். இருபக்கங்களிலுமிருந்து மத்தியிடமிருந்தும் மாநில அரசிடமிருந்தும் வரக்கூடிய தாக்குதல்களை கருணாநிதியும் கழகத்தினரும் தாக்குப்பிடிப்பார்களா? மிகவும் குறிப்பாகக் கவனிக்கவேண்டிய ஒருவிடயம் என்னவென்றால், அதன் இறுதிக் கட்டத்தில் இருக்கும் மன்மோகன்சிங் அரசாங்கத்தை இலங்கைத் தமிழர் பிரச்சினை நடுங்கச் செய்துவிட்டது. ஐக்கிய முற்போக்குக் கூட்டணி II அடுத்த வருடமே பொதுத் தேர்தலை எதிர்நோக்க வேண்டியிருக்கிறது. ஆனால், கூட்டணிக் கட்சிகள் ஒவ்வொன்றாக வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில்,

> **கூட்டணிக்கட்சிகள் ஒவ்வொன்றாக வெளியேறிக் கொண்டிருக்கும் நிலையில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தின், இருப்பு பற்றிய நிச்சயமற்ற தன்மை அதிகரித்துக்கொண்டு போகிறது.**

அரசாங்கத்தின் ''இருப்பு'' பற்றிய நிச்சயமற்ற தன்மை அதிகரித்துக் கொண்டேபோவதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

பாரதிய ஜனதாவுக்கு எதிரான பிரமாண்டமான கூட்டணியாக ஐக்கிய முற்போக்குக் கூட்டணியே விளங்கியது. அதன் முதலாவது பதவிக்காலத்தில் இடதுசாரிக்கட்சிகளும் கூட ஆதரவு வழங்கின. இப்போது தி.மு.க.வும் விலகிய நிலையில் ஆளும் கூட்டணியின் பாராளுமன்றப் பெரும்பான்மை கடுமையாகக் குறைந்துவிட்டது. சில்லறை வர்த்தகத்தில் நேரடி வெளிநாட்டு முதலீட்டை அனுமதிக்கும் அரசாங்கத்தின் தீர்மானத்தை எதிர்த்து மேற்குவங்காள முதலமைச்சர் மம்தா பானர்ஜி தலைமையிலான திரிணாமுல் காங்கிரஸ் கூட்டணியில் இருந்து வெளியேறிய பிறகு அரசாங்கம் உண்மையில் 'சுவாசக்கருவி' பொருத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. அதற்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

குப் பிறகு 540 உறுப்பினர்களைத் தற்போது கொண்டிருக்கும் லோக்சபாவில் ஐக்கிய முற்போக்குக் கூட்டணிக்கு 231 உறுப்பினர்களே இருக்கிறார்கள். இதனால், உத்தரப் பிரதேசத்தை மையமாகக் கொண்ட சமாஜ்வாதி கட்சியையும் பகுஜன் சமாஜ் கட்சியையும் நம்பியிருக்க வேண்டிய நிலை. பாராளுமன்றத்தில் சமாஜ்வாதி கட்சிக்கு 22 ஆசனங்களும் பகுஜன் சமாஜ் கட்சிக்கு 21 ஆசனங்



களும் இருக்கின்றன. ஆளும் கூட்டணியில் அங்கம் வகிக்காத வேறு 49 எம்.பி.க்களின் ஆதரவும் அரசாங்கத்துக்கு இருக்கிறது. இந்த ஆதரவுகள் எல்லாவற்றுக்குமாக அரசாங்கம் பெரிய விலையைச் செலுத்த வேண்டியிருக்கிறது. பல விட்டுக் கொடுப்புகளைச் செய்ய அரசாங்கம் நிர்ப்பந்திக்கப்படுகிறது. சில சந்தர்ப்பங்களில் இத்தகைய நிர்ப்பந்தங்களைத் தவிர்ப்பதற்காக அரசாங்கம் அதற்கு ஆதரவு தருகின்ற கட்சிகளை மத்திய புலனாய்வுப் பணியகத்தை (சி.பி.ஐ.) பயன்படுத்தி அதட்டவும் செய்கிறது.

தி.மு.க.வெளியேறியதும், காங்கிரஸ் தலைவர்கள் சமாஜ்வாதி கட்சியை நயந்து வேண்டத் தீர்மானித்தார்கள். சமாஜ்வாதி கட்சி அரசாங்கத்துக்கு வெளியில் இருந்து ஆதரவை அளித்துவருகின்றபோதிலும் கூட, காங்கிரஸ் மீது சீறிப் பாய்ந்த வண்ணமேயிருக்கிறது. இதற்குக் காரணம் உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதிக் கட்சியின் தலைவர்களுக்கும் காங்கிரஸ் தலைவர்களுக்கும் இடையிலான உள்ளூர் போட்டாபோட்டியேயாகும். உத்தரப் பிரதேசத்தைச் சேர்ந்த காங்கிரஸ் தலைவரும் மத்திய அமைச்சருமான பெனி பிரசாத் வர்மா சமாஜ்வாதி கட்சியின் தலைவர் முலாயம் சிங் யாதவை மாநிலத்தில் காங்கிரஸின் "கொமிசன் ஏஜண்ட்" என்று வர்ணித்துத் தாக்குதல் தொடுத்தார். முலாயம் சிங் பயங்கரவாதிகளுக்கு ஆதரவளிப்பதாகவும் வர்மா குற்றஞ்சாட்டினார். இதையடுத்து அவரை அமைச்சர் பதவியில் இருந்து நீக்க வேண்டுமென்று சமாஜ்வாதி கட்சி கோரிக்கைவிடுத்தது. இறுதியில் சோனியா காந்தியின் தலையீட்டையடுத்து தகராறு தீர்த்து வைக்கப்பட்டது. அமைச்சர் வர்மா பகிரங்கமாக மன்னிப்பும் கோரினார்.

**அரசாங்கத்தை காப்பாற்ற காங்கிரஸ் தலைவர்கள் முலாயம் சிங்கின் ஆதரவை வேண்டி நிற்கும் வேளையில் உத்தரப் பிரதேச காங்கிரஸ் தலைவர்களில் ஒருவரான அமைச்சர் பெனி பிரசாத் வர்மா அவருக்கு ஆத்திரமூட்டும் கருத்துகளை இடையறாது வெளியிட்டுக் கொண்டிருக்கிறார்**

அதேவேளை, மத்திய நிதியமைச்சர் ப.சிதம்பரம் உத்தரப்பிரதேசத்துக்கு நிதியுதவி தருவதாகக் கூறி மாநிலத்தின் முதலமைச்சரும் முலாயம் சிங்கின் மகனுமான அகிலேஷ் யாதவுக்கு ஆசை காட்டினார். பதிலுக்கு, ஐக்கிய முற்போக்குக் கூட்டணியைத் தொடர்ந்து ஆதரிப்பதாக சமாஜ்வாதி கட்சி அறிவித்ததைக் காணக்கூடியதாக இருந்தது. ஆனால், பெனி பிரசாத் வர்மா விடுவதாக இல்லை. அடுத்த தேர்தல் உத்தரப்பிரதேசத்தில் சமாஜ்வாதி கட்சிக்கு இறுதிச் சடங்காக அமையும் என்று அவர் கூறினார். முலாயம் சிங்கும் மகனும் மீண்டும் காங்கிரஸை தாக்கத் தொடங்கினார்கள். எவ்வாறெனினும், மத்திய அரசாங்கத்திடமிருந்து நிதியுதவி கிடைக்குமென்ற ஆசைவார்த்தை, ஊழல் குற்றச்சாட்டுகளை எதிர்நோக்கும் முலாயம் சிங்கை அதட்டுவதற்கு சி.பி.ஐ.யை பயன்படுத்தும் மத்திய அரசின் தந்திரோபாயம் ஆகியவை காரணமாக சமாஜ்வாதி கட்சி தலைமைத்துவம் வெளியில் இருந்து ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கத்தை தொடர்ந்தும் ஆதரிக்க நிர்ப்பந்திக்கப்படுகிறது. இனவாத சக்திகள் அதிகாரத்துக்கு வந்திடாதிருப்பதை உறுதிசெய்வதற்காகவே இவ்வாறு செய்வதாக ஒரு சாக்குப் போக்கையும் சமாஜ்வாதிக்கட்சி கூறிக் கொள்ளத் தவறுவதில்லை.

மேற்குவங்காளத்தில் பாரதூரமான நிதிப்பிரச்சினையை எதிர்நோக்கும் முதலமைச்சர் மம்தா பானர்ஜியின் திரிணாமுல் காங்கிரஸையும் தன் பக்கம் இழுப்பதற்கு காங்கிரஸ் தலைமைத்துவம் மீண்டும் பிரயத்தனம் செய்கிறது. இதுவரை மத்திய அரசாங்கம் மேற்குவங்காளத்துக்கு விசேட நிதியுதவி எதையும் வழங்குவதற்கு மறுத்து வந்திருக்கிறது. ஆனால்,



பொதுசன நூலகம் யாழ்ப்பாணம்.

இப்போது அந்த மாநிலத்தின் நிதிக் கோரிக்கையை பரிசீலனை செய்வதற்கு மத்திய அரசு ஆர்வம் காட்டுகிறது. பின்தங்கிய நிலைமையை மதிப்பீடு செய்வதற்கு பயன்படுத்தப்படுகிற பிரமாணத்தை அரசாங்கம் மீளாய்வு செய்வதாகக் கூறியதன் மூல

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



சமாஜ்வாதிக் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் உத்தரப் பிரதேசத்தில் போட்டிக்கட்சிகள் என்பதால் அவற்றை சந்தோஷப்படுத்தி வைத்திருப்பது என்பது காங்கிரஸைப் பொறுத்தவரை மிகவும் கஷ்டமானதாகும். இதனால் பீகார் முதலமைச்சர் நிதிஷ் குமாரின் ஆதரவு காங்கிரஸுக்கு முக்கிய உதவியாக அமையப் போகிறது

மாக சிதம்பரம் மேற்குவங்காளம் மத்திய அரசின் நிதியுதவியைப் பெறக் கூடிய சாத்தியப்பாட்டுக்கான சமிக்ஞையைக் காட்டியிருக்கிறார். மேற்கு வங்காளம், ஒடிசா, மற்றும் பீஹார் ஆகியவற்றை பின் தங்கிய மாநிலங்கள் என்று சிதம்பரம் பெயர் குறிப்பிட்டிருப்பதும் கவனிக்கத்தக்கது.

பீஹார் மாநிலம் ஐக்கிய ஜனதா தள் பாரதிய ஜனதாக் கூட்டணியின் ஆட்சியின் கீழ் இருக்கிறது. ஐக்கிய ஜனதா தள் கட்சியைச் சேர்ந்த பீஹார் முதலமைச்சர் நிதிஷ்குமார் விசேட நிதியுதவியை தரவேண்டுமென்ற கோரிக்கையை ஆதரிக்கும் எந்தக் கட்சிக்கும் ஆதரவளிக்கத் தயாராக இருப்பதாக அறிவித்திருக்கிறார். தற்போது காங்கிரஸ் ஐக்கிய ஜனதா தள்ளிற்கு நெருக்கமாகச் சென்று கொண்டிருக்கிறது போலத்தோன்றுகிறது. மத்திய மட்டத்தில் ஐக்கிய ஜனதா தள்ளிற்கும் பாரதீய ஜனதாவுக்கும் இடையே கீறல்கள் விழுந்து கொண்டிருப்பதையும் அவதானிக்கக் கூடியதாக இருக்கிறது. இதற்குப் பிரதான காரணம், பாரதிய ஜனதாவின் உயர் மட்டத்தில் குஜராத் மாநில முதலமைச்சர் நரேந்திர மோடியின் உயர்ச்சியேயாகும். பாரதிய ஜனதாவின் புதிய தலைவரான ராஜ்நாத் சிங்கினால் அண்மையில் மோடி கட்சியின் பாராளுமன்றக் குழுவில் உறுப்பினராக்கப்பட்டிருக்கிறார். மோடியை பிரதமர் வேட்பாளராக்க வேண்டுமென்று முதலில் பாரதிய ஜனதா தொண்டர்கள் அணிகளின் மத்தியில் இருந்தே குரல்கள் எழுந்தன. இப்போது சிரேஷ்ட தலைவர்கள் மட்டத்திலிருந்தும் அக்கோரிக்கை பலமாக ஒலிப்பதைக் காணக்கூடியதாக இருக்கிறது.

மோடிக்கும் நிதிஷ்குமாருக்கும் இடையேயான போட்டி மிகவும் பிரபலமானது. மோடி பீஹாருக்கு வந்து பிரசாரம் செய்ய முடியாமல் இதுவரை நிதிஷ்குமார் தடுத்து வந்திருக்கிறார். மோடியின் "இந்துத்வா" கடும்போக்கு முஸ்லிம் மக்கள் மத்தியில் தனக்கு இருக்கிற ஆதரவைப் பாதித்துவிடுமென்று நிதிஷ்குமார் நினைக்கிறார். ஆனால், இருவருக்கும் இடையேயான பொருதலுக்கு வேறு ஏதாவது காரணங்களும் இருக்கின்றனவா? ஆம். இருவருமே மத்தியில் முக்கியமான பாத்திரத்தை வகிக்க வேண்டுமென்பதில் ஆர்வம் கொண்டவர்களாக இருக்கிறார்கள். மாநிலத்தில் தங்கள் மக்களுக்கு சேவை செய்வதில் மகிழ்ச்சியடைவதாக இருவரும் கூறிக்கொள்கிற போதிலும், மத்தி மீது அவர்கள் கண் வைத்தே தங்கள் நகர்வுகளைச் செய்து கொண்டிருக்கிறார்கள்.

ஆனால், இப்போது ஒரு விடயம் மாத்திரம் தெளிவானது. மன்மோகன் சிங் அரசாங்கம் அதிகாரத்தில் தொடருவதற்கு சமாஜ்வாதி கட்சியையும் பகுஜன் சமாஜ் கட்சியையும் காங்கிரஸ் சந்தோசமாக வைத்திருக்கவேண்டியிருக்கிறது. இவ்விரு கட்சிகளும் உத்தரப்பிரதேசத்தில் போட்டிக்கட்சிகள் என்பதால் அவற்றை சந்தோசப்படுத்தி வைத்திருப்பதென்பது காங்கிரஸைப் பொறுத்தவரை மிகவும் கஷ்டமான ஒரு வேலையாகும். இரு கட்சிகளுமே திருப்பித் தாக்குவதற்கான சந்தர்ப்பத்துக்காக காத்துக்கொண்டிருக்கின்றன என்பது ஒன்றும் இரகசியமானதல்ல.

இத்தகையதொரு பின்புலத்திலேயே நிதிஷ்குமாரின் ஆதரவு காங்கிரஸுக்கு முக்கிய உதவியாக அமையப்போகிறது. திரிணாமுல் காங்கிரஸிடமிருந்து காங்கிரஸ் பெரிதாக எதையும் எதிர்பார்க்க முடியாது. ஏனென்றால், தி.மு.க.ஆதரவை விலக்கிக் கொண்ட உடனடியாகவே ஐக்கிய முற்போக்குக் கூட்டணி அரசாங்கம் பதவி விலக வேண்டுமென்று கோரிக்கை விடுப்பதில் திரிணாமுல் காங்கிரஸே முன்னணியில் நின்றது.

தி.மு.க.வில் விலகல் மன்மோகன் சிங் அரசாங்கத்தின் பொருளாதாரச் சீர்திருத்தங்களையும் ஆபத்துக்குள்ளாக்கிவிட்டது. தற்போது முடிவடைந்திருக்கும் பாராளுமன்றக் கூட்டத்தொடரின்போது சீர்திருத்தங்கள் தொடர்பான சட்ட மூலங்களை நிறைவேற்றிவிட முடியுமென்று அரசாங்கம் நம்பிக்கை கொண்டிருந்தது.

தி.மு.க.வின். விலகல் அரசாங்கத்தின் அத்திபாரத்தை ஆட்டம் காணச் செய்துவிட்டது என்பது மாத்திரம் நிச்சயமானது. அரசாங்கம் இப்போது சுவாசக் கருவி பொருத்தப்பட்ட நிலையிலேயே இருக்கிறது. எவ்வளவு காலத்துக்கு சமாஜ்வாதிக் கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் பிராணவாயுவைக் கொடுத்துக் கொண்டிருக்கும் என்பதை முன் கூட்டியே கூற முடியாமல் இருக்கிறது. இத்தகைய நிலைவரம் காரணமாக தனது இமேஜை பாதுகாத்துக் கொள்வதற்கு முடிவொன்றை காங்கிரஸ் தலைமைத்துவம் எடுத்திருப்பதாகக் கூறப்படுகிறது. அரசாங்கத்தின் கொள்கை குறைபாடுகளுக்குக் காரணமாகச் சுட்டிக்காட்டப்படக்கூடிய எதையும் செய்யாதிருப்பதற்கு காங்கிரஸ் தலைமைத்துவம் தீர்மானித்திருக்கிறது போலத் தெரிகிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஜெனீவாவில் திருத்தங்களை முன் மொழியாமல் தீர்மானத்தை மென் மையானதாகவே விட்டுவிடுவதற்கு இந்திய அரசாங்கம் தீர்மானித்ததை இந்தப் பின்புலத்திலேயே, இத்திசை மார்க்கத்திலேயே நோக்க வேண்டும். கருணாநிதி கேட்டுக்கொண்டதைப் போன்று இந்தியப் பாராளுமன்றத் தில் இலங்கைக்கு எதிராகத் தீர்மான மொன்றைக் கொண்டுவரக்கூடாது என்று சகல பிரதான கட்சிகளும் அர சாங்கத்துக்கு ஆலோசனை கூறியி ருந்தன. இதையும் மேற்கூறப்பட்ட பின்புலத்திலேயே நோக்கவேண்டும். இலங்கைத் தமிழர் பிரச்சினை முக்கி யமானது. அத்துடன் தமிழ்ப் பகுதிக ளில் மாகாண சபைக்கு கூடுதல் அதி காரங்களைக் கொடுக்க வேண்டும் என்றே சகல இந்தியக் கட்சிகளும் வலியுறுத்தி நிற்கின்றன. ஆனால், ஒரு எல்லைக்கு அப்பால் நகருவ தற்கு எவரும் விரும்பவில்லை. ஏனென்றால், எந்தத் தமிழர்களுக்காக எல்லோரும் குரல் கொடுக்கிறோமோ அவர்களுக்கே அது பெரும் பாதிப் பாக வந்துவிடக்கூடும்.

நாட்டின் வெளியுறவுக் கொள்கை யில் பிராந்தியக் கட்சிகளின் செல் வாக்கு அதிகரித்து வருவதாக நிபுண ர்கள் சுட்டிக் காட்டுகிறார்கள். முன்ன தாக, மம்தா பானர்ஜியின் செல்வா க்கு இந்தியாவுக்கும் பங்களாதேஷு க்கும் இடையே ரீஸ்டா ஆற்று நீர் பகிர்வு தொடர்பான உடன்படிக்கை கைச்சாத்திடப்படுவதைச் சீர்குலைத் தது. இதனால், பிரதமர் மன்மோகன் சிங்கிற்கு பெரும் அசௌகரியமாகப் போய்விட்டது. ''கூட்டணி அரசியல் யுகத்தில் நாம் இருக்கிறோம் என்ப தையும் அதனால், மாநிலங்களையும் அவற்றின் கருத்துகளையும் கணக் கில் எடுக்க வேண்டியிருக்கிறது என் பதையும் நாம் ஏற்றுக்கொள்ள வேண் டிய நேரம் வந்துவிட்டது'' என்று முன்னாள் வெளியுறவுச் செயலாளர் களான லலித் மான்சிங்கும் ஷியாம் சரணும் கூறுகிறார்கள்.

''ஆனால், அதேவேளை அரசிய லமைப்பின் பிரகாரம் வெளியுறவுக் கொள்கை என்பது மத்திய அரசாங் கத்தின் பொறுப்புக்குரிய விடயம். வெளியுறவுக் கொள்கை விவகாரங்க ளில் ஒரு எல்லைக்குள் மாத்திரமே விட்டுக் கொடுப்புகளைச் செய்ய முடியும். ஒரு எல்லைக் கோட்டை வரைய வேண்டியிருக்கிறது என்ற செய்தியை மாநிலங்களுக்குத் தெரி யப்படுத்த வேண்டியிருக்கிறது'' என்று ஷியாம் சரண் கூறுகிறார்.

## மூன்றாவது முன்னணி

பாரதிய ஜனதாவுக்கு எதிரான பெரிய கூட்டணியான ஐக்கிய முற்போக்குக் கூட்டணியை விட்டு தொடர்ந்து நேச அணிகள் விலகிச் செல்லும் நிலையில், மூன்றாவது முன்னணியை உருவாக்குவது பற் றிய பேச்சுகள் அதிகரித்து வருவ தைக் காணக்கூடியதாக இருக்கிறது. இரு பிரதான தேசியக் கட்சிகளான காங்கிரஸுக்கும் பாரதிய ஜனதாவுக் கும் எதிரான ஒரு அணியாகவே இந்த மூன்றாவது முன்னணி என்ற யோசனை முன்வைக்கப்படுகிறது. இந்த முன்னணியின் முக்கிய தூணாக இடதுசாரிக் கட்சிகளே, குறிப்பாக மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியே இருக்கப்போகின்றது. மேற்கு வங் காளத்தில் மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் பிரதான அரசியல் எதிரி யான திரிணாமுல் காங்கிரஸும் அத் தகைய முன்னணி ஒன்றை அமைப்ப தில் ஆர்வம் கொண்டதாக இருப்பது ஒரு விசித்திரமான அம்சமாகும். மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின தும் ஏனையவர்களினதும் வேண்டுகே காள்களை அலட்சியம் செய்து காங் கிரஸ் அரசாங்கத்தை மீண்டும் மீண் டும் காப்பாற்றிக் கொண்டுவருகிற சமாஜ்வாதி கட்சியும் இதைப் பற்றிப் பேச ஆரம்பித்திருக்கிறது. மூன்றா வது முன்னணியின் அங்கமாக வரக் கூடிய இன்னொரு கட்சி ஐக்கிய ஜனதா தள் கட்சியாகும். பீஹாரைப் பின்தங்கிய மாநிலமாக அறிவிக்க வேண்டுமென்று விடுக்கப்பட்டி ருக்கும் கோரிக்கையை ஏற்றுக்கொள் வதில் காங்கிரஸ் காட்டக்கூடிய விருப்பத்தைப் பொறுத்தே மூன்றா வது முன்னணியில் பங்கேற்பது பற் றிய ஐக்கிய ஜனதா தள்ளின் நிலைப் பாடு அமையும். ஐக்கிய முற்போக்குக் கூட்டணியில் இருந்து வெளியேறிய நிலையில் தி.மு.க.வும் மூன்றாவது முன்னணியொன்றில் ஆர்வம் காட் டக்கூடும்.

ஆனால், ஒரு விடயம் மாத்திரம் தெளிவு. அங்கு ஒரு பெரிய தலைவர் இருக்கப்போவதில்லை. அது பிராந் தியக்கட்சிகளின் ஒரு கதம்பமாகவே இருக்கப்போகிறது. அதனால், அந்த முன்னணியில் அங்கத்துவம் பெறக் கூடிய கட்சிகள் முடிவற்ற விட்டுக் கொடுப்புகளைச் செய்யவேண்டிய தேவையிருக்கும். அத்தகைய கூட்ட ணிகளினால் ஏற்கனவே பெரும் பிரச் சினைகளை அனுபவித்த மக்கள், இவர்களுக்கு மீண்டும் வாக்களிப் பார்களா?

சமாஜ்வாதி கட்சியும் பகுஜன் சமாஜ் கட்சியும் வேறு விதமாகச் சிந்திக்காத பட்சத்தில், அல்லது அரசி யல் சித்திரவதையை முடிவுக்குக் கொண்டுவருவதற்கு காங்கிரஸ் தலைமைத்துவம் தீர்மானிக்காத பட் சத்தில், அடுத்த பொதுத் தேர்தலுக்கு முன்னதாக, பல மாநிலங்கள் சட்ட சபைத் தேர்தல்களைச் சந்திக்கவிருக் கின்றன. உட்கட்சிப் பூசல்களினால் பாதிக்கப்பட்டிருக்கும் பாரதிய ஜன தாவின் ஆட்சியின் கீழ் இருக்கும் கர் நாடக மாநிலமே முதலில் தேர்தலைச் சந்திக்கவிருக்கிறது. அடுத்து, மத்தி யப் பிரதேசம், இராஜஸ்தான், பிறகு வருட இறுதியில் டில்லி, அடுத்த வரு டம் சதிஸ்கார் என்று சட்டசபைத் தேர்தல்கள் நடைபெறப் போகின் றன. ஆனால், இத்தேர்தல்கள் அண் மையில் வடகிழக்கு மாநிலங்களில் அல்லது இமாச்சலப் பிரதேசத்தில் காணப்படக்கூடியதாக இருந்ததைப் போன்று உள்ளூர் பிரச்சினைகளை யும் விவகாரங்களையும் மையப் படுத்தியவையாகவே களத்தில் போட்டிகள் இடம்பெறும். ஆனால், பொதுத் தேர்தல் வித்தியாசமான முடிவுகளைத் தரக்கூடும். ■

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இலங்கைத் தமிழர்களுக்காக ஒரு நாள் ஸ்தம்பித்த தமிழ்த் திரையுலகம்

திரையுலகம் ஒரு நாள் ஸ்தம்பித்து நின்றது. குளு குளு அறைகளில் அமர்ந்து இருக்கும் சினிமா நட்சத்திரங்கள் ஏப்ரல் 2ஆம் திகதி அனல் பறக்கும் கோடை வெயிலில் உண்ணாவிரதம் இருந்தனர். ''தொப்புள் கொடி உறவான இலங்கைத் தமிழ் மக்களுக்கு மறு வாழ்வு கிடைக்க'' என்ற வாசகங்கள் அடங்கிய பெரிய பெரிய கட்அவுட்கள், பேனர்கள், போஸ்டர்கள் சென்னை தியாகராய நகரில் இருக்கும் தென்னிந்திய நடிகர் சங்க வளாகத்தை அலங்கரித்தன. ''பாலச்சந்திரன்'' படுகொலை செய்யப்பட்ட படம் இடம்பெறாத பேனர்களே இல்லை என்று சொல்லும் அளவிற்கு நடிகர் சங்கம் இருக்கும் ஹபிபுல்லா சாலை திக்குமுக்காடி நின்றது. எங்கு பார்த்தாலும் நடிகர்களின் ரசிகர்கள் கூட்டம். அவர்களும் இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதப் பந்தலில் அமர்ந்தனர். ஒரு நாள் படப்பிடிப்புகள் ரத்துச் செய்யப்பட்டன. சினிமா ஸ்டூடியோக்கள் அதிகம் உள்ள வடபழனி, கோடம்பாக்கம் பகுதிகள் ''பந்த்'' நடத்தப்பட்டது போல் காட்சியளித்தன.

ஹீரோக்கள், ஹீரோயின்கள், சூப்பர் ஹீரோக்கள் எல்லாம் உண்ணாவிரதம் இருந்ததால் அனைத்துச் சாலைகளும் தமிழக பொலிஸின் கட்டுப் பாட்டிற்குள் கொண்டு வரப்பட்டன. நமீதா, ராதிகா சரத்குமார், சினேகா, ஊர்வசி, கோவை சரளா, ரேகா, மோனிகா, அம்பிகா உள்ளிட்ட நடிகைகள் கலந்து கொண்ட

## சென்னை மெயில்





முத்தையா காசிநாதன்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உண்ணாவிரதம் என்பதால் ''பெண் பொலிஸாரின்'' பாதுகாப்பு மிகவும் அதிகமாகவே காணப்பட்டது. நடிகர்கள் சிவகுமார், சூர்யா, கார்த்தி உள்ளிட்ட மூவரும் தந்தை-மகன்கள் என்ற தோரணையில் வரிசையாக அமர்ந்திருந்த காட்சியைப் பார்த்தால் பூசணிக்காயை ''திருஷ்டி'' சுற்றி உடைக்க வேண்டும் போலிருந்தது. தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார் உண்ணாவிரதத்திற்கான அனைத்து ஏற்பாடுகளையும் முன்னின்று நடத்தினார். இவருக்கு உதவியாக இருந்தவர்கள் பொதுச் செயலாளர் ராதாரவி, பொருளாளர் வாகை சந்திரசேகர் இருவரும்தான்! இதில் ஒரு இலங்கைத் தமிழர்களுக்காக இனம்புரியாத ஒற்றுமை தெரிந்தது. ஏனென்றால் சரத்குமாரும், ராதாரவியும் ஆளும் அ.தி.மு.க.வின் ஆதரவாளர்கள். சரத்குமார் அ.தி.மு.க. எம்.எல்.ஏ.வாகவே இருக்கிறார். வாகை சந்திரசேகரோ தி.மு.க. ஆதரவாளர். பாராளுமன்றத் தேர்தலில் எம்.பி. பதவிக்கு நின்று போட்டியிட்டு தோற்றவர். தமிழக அரசியலில் எதிரும் புதிருமாக இருக்கும் இரு வேறு கட்சிகளைச் சேர்ந்த திரையுலகினர் இணைந்து இந்த உண்ணாவிரதத்தை நடத்தியது தனிச் சிறப்பாக இருந்தது.

காலை 9 மணிக்கு உண்ணாவிரதம் என்று அறிவிக்கப்பட்டிருந்தாலும், எட்டு மணியிலிருந்தே நடிகர், நடிகைகள், சினிமாத் தயாரிப்பாளர்கள் என்று அனைவரும் கறுப்புச் சட்டை சகிதமாக ஆஜராகியிருந்தனர். சூப்பர் ஸ்டார் ரஜினி மட்டும் லேட்டாக 11.05 மணிக்கு வந்தாலும், லேட்டஸ்டாக வெள்ளைச்சட்டையில் வந்து அமர்ந்தார். அவர் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்ததுமே குழுமியிருந்தவர்கள் மத்தியில் உற்சாகம் கரை புரண்டோடியது. பொதுவாக உண்ணாவிரதத்தில் கலந்து கொள்பவர்கள் உரையாற்றுவார்கள். இதுதான் கடந்த காலங்களில் காவிரிக்காக உண்ணாவிரதம் இருந்த போது கூட நடைபெற்றது. ஆனால், இந்த முறை இலங்கைத் தமிழர் பிரச்சினையில் தமிழக அரசியல் படு டென்ஷனாக இருக்கிறது. ''தமிழ் ஈழம் காண பொதுவாக்கெடுப்பு வேண்டும்'' ''பொருளாதாரத் தடை விதிக்க வேண்டும்'' ''போர்க்குற்றங்களை விசாரிக்க சர்வதேச விசாரணை வேண்டும்'' என்று மூன்று முக்கிய அம்சங்களைக் கொண்ட தீர்மானத்தை தமிழக சட்டமன்றமே முதல்வர் ஜெயலலிதா தலைமையில் நிறைவேற்றியிருந்த தருணம். அதேபோல் அதற்கு முன்புதான் இலங்கைத் தமிழர் விவகாரத்தில் ஜெனீவாவில் கொண்டு வரப்பட்ட அமெரிக்கத் தீர்மானத்தில் திருத்தங்கள் செய்ய இந்திய அரசு மறுக்கிறது என்று சுட்டிக் காட்டி தி.மு.க. ஐக்கிய முற்போக்கு கூட்டணி அரசிலிருந்தும், கூட்டணியிலிருந்தும் வெளியேறியிருந்த சமயம். இந்த இரு விடயங்களுக்கும் ஆதரவும், எதிர்ப்பும் என்ற நிலை தமிழகத்தில் இருக்கின்ற சூழ்நிலையில்தான் திரையுலகினர் குறிப்பாக நடிகர், நடிகைகள் ஏன் இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருக்கவில்லை? போராடவில்லை? என்ற குற்றச்சாட்டு கிளம்பியது. முக்கியமாக 1965இல் தமிழகத்தில் நடைபெற்ற மொழிப்போராட்டத்திற்குப் பிறகு இப்போது இலங்கைத் தமிழருக்காக வீறு கொண்டு போராடிய மாணவர் சமுதாயமே அந்த குற்றச்சாட்டை முன்வைத்தது. இது போன்ற சூழ்நிலையில், நடிகர், நடிகைகள், டைரக்டர்கள், தயாரிப்பாளர்கள் உள்ளிட்டோரை பேச விட்டு அதனால் கிணறு வெட்டு பூதம் போல் புதிய ''பொலிடிக்ஸ்'' ஏதும் கிளம்பிவிடக்கூடாது என்பதற்காகவே, இந்த முறை நடிகர், நடிகைகள் உண்ணாவிரதம் இலங்கைத் தமிழர்களுக்காக ''மௌன உண்ணாவிரதமாகவே'' முடிந்து விட்டது.

இருந்தாலும் உண்ணாவிரதத்திற்கு வந்த நடிகர்கள், நடிகைகள் கருத்துகளை சொன்னார்கள். அதில் குறையேதுமில்லை. உண்ணாவிரதத்திற்கு தலைமை வகித்த தென்னிந்திய நடிகர் சங்கத் தலைவர் சரத்குமார், ''இலங்கைத் தமிழர்கள் நிம்மதியாக வாழ தமிழக அரசே சட்டமன்றத்தில் தீர்மானங்களை நிறைவேற்றியிருக்கிறது. இந்தத் தீர்மானங்களை ஏற்று மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று கோரிக்கை வைத்தார். அதே சங்கத்தின் பொருளாளர் வாகை சந்திரசேகர், ''யாரும் ஏற்படுத்தாத எழுச்சியை பாலகன் பாலச்சந்திரன் கொல்லப்பட்ட படம் ஏற்படுத்தியிருக்கிறது. உலகத்திலேயே பெரிய சுடுகாடு ஈழம் என்ற நிலை வருவதற்குள் உலக நாடுகளும், இந்திய அரசும் உடனடியாக தலையிட்டு இலங்கைத் தமிழர்களுக்கு நியாயம் வழங்க வேண்டும்'' என்று உருக்கமாகப் பேசினார். நடிகர் பிரகாஷ் ராஜ், எடுத்த எடுப்பில் தனி ஈழம் கோரிக்கையை ஆதரிக்காமல், ''இலங்கையில் மற்றவர்களுக்கு இணையாகத் தமிழர்களும் சம அதிகாரத்துடன் வாழும் உரிமை கொடுக்கப்பட வேண்டும்'' என்று கூறி விட்டு, ''அப்படி அது கிடையாது என்ற நிலை ஏற்படுமேயானால் தனி ஈழம் வழங்க வேண்டும்'' என்று வித்தியாசமாக கருத்துச் சொன்னார். நடிகர் எஸ்.வி.சேகர் ''தமிழக மக்களின் உணர்வுகள் தமிழக சட்டமன்றத்தில் தீர்மானமாக வந்திருக்கிறது. அதன் மீது மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்றார். உண்ணாவிரதத்திற்கு வந்திருந்த தயாரிப்பாளர் சங்கத்தைச் சேர்ந்த ராஜன், ''2009-இல் இலங்கைத் தமிழர்களை அழிக்கும் போர் நடைபெற்ற போது தமிழகத்தில்இந்த ஒற்றுமை வரவில்லையே என்ற வருத்தம் இருக்கிறது. ஆனால் இப்போது ஒன்றுபட்டு குரல் எழுப்புகிறோம். மத்திய அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும்'' என்று ஆக்ரோஷமாகப் பேசினார்.

திரையுலகத்தின் 23 சங்கங்களுக்கு மேல் கலந்து கொண்ட இந்த உண்ணாவிரதத்திற்கு வந்திருந்த நடிகர் சிவ கார்த்திகேயன், ''நாங்கள் பெரிய நம்பிக்கையுடன் இங்கே இலங்கைத் தமிழர்களுக்காக உண்ணாவிரதம் இருக்கிறோம். நம் தொப்புள் கொடி உறவுகளுக்கு பெரிய தீர்வு கிடைக்கும் என்பதுதான் அந்த நம்பிக்கை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நிச்சயம் நியாயம் கிடைக்கும்'' என்றார் உறுதி கலந்த குரலில். நடிகர் ஆனந்தராஜ், ''அம்மா (தமிழக முதல்வர் ஜெயலலிதா) தீர்மானம் போட்டால் சல்மான் குர்ஷித் (இந்திய வெளியுறவுத்துறை அமைச்சர்) முடியாது என்கிறார். இங்கிருந்து சென்று அமைச்சராகியுள்ள ப.சிதம்பரம், ''பாராளுமன்றத்தில் நாங்கள் தீர்மானம் கொண்டு வர நினைத்தோம். மற்றக் கட்சிகள் சம்மதிக்க மறுக்கின்றன'' என்கிறார். தமிழர்களுக்காக ஒரு தீர்மானத்தை பாராளுமன்றத்தில் கொண்டு வரவில்லை என்றால் ''வேட்டிகட்டிய தமிழன்'' என்று பேசிக் கொண்டு ஏன் மத்திய அரசில் சிதம்பரம் அமைச்சராக இருக்க வேண்டும்?'' என்று சூடாகப் பேசினார். நடிகர் ஜெயம் ரவி, ''திரையுலகின் சார்பில் பல போராட்டங்கள் நடந்துள்ளன. இப்போது நாங்கள் உண்ணாவிரதம் இருக்கிறோம். எல்லாம் ஒன்றுதான். இலங்கைத் தமிழர்களுக்கு நிச்சயம் நியாயம் கிடைக்கும்'' என்றார் முத்தாய்ப்பாக. உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்த டைரக்டர் ரமேஷ் கண்ணா, ''எப்போதுமே புலி புலிதான். ஓனாய் ஓனாய்தான். 30 ஓனாய்கள் சேர்ந்து புலியைக் கொன்று விட முடியாது. இலங்கைத் தமிழர்களுக்கு நீதி கிடைத்தே தீரும்'' என்று சற்று காட்டமாக கருத்துக் கூறினார்.

உண்ணாவிரதப் பந்தலுக்கு ரஜினி லேட்டாக வந்ததும், கமல்ஹாசன் மாலையில் உண்ணாவிரதம் முடிக்கப்போகும் போது வந்ததும் சில முணுமுணுப்புகளை பந்தலில் கிளப்பியது. கமல்ஹாசனைப் பொறுத்த மட்டில் அவருக்கு ''விஸ்வரூபம்'' படப் பிரச்சினை ஏற்பட்ட போது, திரையுலகம் அணி திரண்டு அவருக்காக நிற்கவில்லை. அப்படிப்பட்ட இறுக்கமான சூழ்நிலையில்கூட, இலங்கைத் தமிழர்களின் நலனுக்காக, அவர்களின் வாழ்வுரிமைக்காக நடைபெறும் அடையாள உண்ணாவிரதத்திற்கு தவறாமல் ஆஜராகி, பழச்சாறு கொடுத்து முடித்து வைக்கும் போது அருகில் இருந்தார். இது பற்றி நம்மிடம் பேசிய திரையுலகப் பிரமுகர் ஒருவர், ''பொதுவாக சினிமாக் கலைஞர்கள் உணர்ச்சி வசப்படுபவர்கள். ஆகவே அவர்களைப் பேச விட்டால், தி.மு.க. ஆதரவு திரையுலகத்தினர் அந்த கட்சி செய்த போராட்டங்களை பட்டியலிட்டு விடுவார்கள். செய்து, இந்த உண்ணாவிரதத்தை அரசியல்மயமாக்கி விடாதீர்கள்'' என்று தென்னிந்திய நடிகர் சங்கத்தின் சார்பில் கேட்டுக் கொள்ளப்பட்டதாகவும் தகவல்.

இறுதியில் உண்ணாவிரதத்தை முடித்து வைத்ததிலும் ஒரு ''அரசி



உண்ணாவிரதத்தை முடித்து வைத்ததிலும் ஒரு அரசியல் செய்தி இருக்கிறது. இலங்கைத் தமிழர் பிரச்சினைக்காக முதலில் உண்ணாவிரதம் இருந்த லயோலா கல்லூரி மாணவர்கள் திரையுலகத்தின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்தார்கள்

அ.தி.மு.க. ஆதரவு திரையுலகத்தினரும் அதற்கு போட்டியாகத் தங்கள் கட்சி செய்த போராட்டங்களை, போட்ட தீர்மானங்களை ஹைலைட் பண்ணி விடுவார்கள். இப்படியொரு சிக்கலில் இப்போது திரையுலகம் மாட்டிக் கொள்வது நல்லதல்ல என்ற ஒரே காரணத்திற்காகத்தான் காலையிலிருந்தே யாரையும் உண்ணாவிரதப் பந்தலில் பேச விடவில்லை'' என்று கூறினார். இந்த உண்ணாவிரதத்தில் இன்னொரு ஹைலைட். அரசியல் தலைவர்கள் யாரும் உண்ணாவிரதப் பந்தல் பக்கமே தலை வைத்து படுக்கவில்லை. ஆனால் தமிழகத்தில் ஈழத் தமிழர் ஆதரவுப் போராட்டங்களை தொடர்ந்து நடத்தி வரும் பழ.நெடுமாறன் மட்டும் உண்ணாவிரதப் பந்தலுக்கு வந்து வாழ்த்தினார். வேறு சில அரசியல் கட்சிகளின் சார்பில் ''வாழ்த்த வருகிறோம்'' என்று சொன்னதை, தயவு செய்து அப்படிச்

யல் செய்தி'' இருக்கிறது. தி.மு.க. தரப்பில் இலங்கைத் தமிழர்களுக்காக டெசோ இயக்கத்தின் சார்பில் பந்த் நடத்தப்படும் என்று அறிவித்தவுடன், முதன் முதலாக இலங்கைத் தமிழர்களுக்காக சென்னை லயோலா கல்லூரியில் உண்ணாவிரதம் தொடங்கியது. அந்த உண்ணாவிரதம்தான் அரசியல் கட்சிகளையும் சரி, தமிழகத்தில் உள்ள மாணவர் சமுதாயத்தையும் சரி இலங்கைத் தமிழர்களுக்காக புதிய வேகத்தில் போராட வைத்தது. அதே லயோலா கல்லூரி மாணவர்கள் பழச்சாறு கொடுக்க நடிகர், நடிகைகளின் உண்ணாவிரதம் முடித்து வைக்கப்பட்டது. இலங்கைத் தமிழர்களுக்காக இதுவரை தமிழகத்தில் நடைபெற்ற போராட்டங்கள், உண்ணாவிரதங்கள் வரிசையில் நடிகர், நடிகையரின் உண்ணாவிரதம் சற்று வித்தியாசமாக நடந்து முடிந்துள்ளது. தமிழகத்தில் இலங்கைத் தமிழர்களுக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பொதுசன நூலகம்
யாழ்ப்பாணம்.



காக தீர்மானம் நிறைவேற்றிய முதல்வர் ஜெயலலிதா, "இப்பிரச்சினையில் அரசு எடுக்கும் நடவடிக்கைகளை மனதில் கொண்டு மாணவர்கள் தங்கள் போராட்டங்களை நிறுத்திக் கொண்டு கல்வியில் கவனம் செலுத்தி பெற்றோருக்கும், தமிழகத்திற்கும் பெருமை தேடித்தர வேண்டும்" என்று கோரிக்கை விடுத்தார். அதே போல் முதன் முதலில் இப்பிரச்சினைக்காக உண்ணாவிரதம் இருந்த லயோலா கல்லூரி மாணவர்கள் நடிகர் நடிகையரின் உண்ணாவிரதத்தை முடித்து வைத்துள்ளார்கள்.

15 நாட்களுக்கும் மேலாக விடுமுறை அளிக்கப்பட்டு மீண்டும் கல்லூரிகள் திறக்கப்படுகின்ற நேரத்தில், மாணவர்கள் மீண்டும் இது போன்ற போராட்டத்தை கையிலெடுத்தால், தமிழகத்தில் சட்டம்-ஒழுங்குப் பிரச்சினையில் தொடர்ந்து பிரச்சினை யேற்படும் என்றும், அரசின் கட்டுப்பாட்டை மீறி இது போன்ற போராட்டங்கள் தொடருவது "மாநிலத்தின் முதலீடு விடயங்களை" பாதிக்கும் என்றும் ஒரு புறத்தில் கருத்துகள் வேகமாக பரவி வருகின்றன. இவற்றை மனதில் வைத்து இலங்கைத் தமிழர்களுக்காக நடைபெறும் போராட்டங்களின் வேகம் தற்போதைக்கு குறைக்கப்படலாம். இந்திய அரசுக்கு அளித்து வந்த ஆதரவை தி.மு.க. ஏற்கனவே வாபஸ் பெற்று விட்டது. ஆதரவு கொடுக்கும் கட்சியான சமாஜ்வாடிக் கட்சியின் முலாயம் சிங் யாதவ் அடிக்கடி அடிக்கும் "அந்தர்பல்டிகள்" மத்திய அரசு "எப்போது கவிழும்" என்ற நிலை ஏற்பட்டிருக்கிறது. அதே நேரத்தில் பீஹார் மாநிலத்திற்கு வழங்கப்படும் "சிறப்பு அந்தஸ்து" போன்ற சலுகையால், அம்மாநில முதல்வர் நிதிஷ்குமார் தலைமையிலான ஐக்கிய ஜனதா தளமும், மேற்குவங்கத்தில் குறைந்து வரும் செல்வாக்கால் காங்கிரஸ் கூட்டணி தேவை என்ற நிலைக்கு வந்துள்ள அம்மாநில முதல்வர் மம்தா பானர்ஜியும் முட்டுக்கொடுப்பார்கள் என்ற கருத்தும் நிலவுகிறது. இதனால் "உடனே பாராளுமன்றத் தேர்தல் வருமா?" அல்லது "எப்போதும் போல் மே-2014இல் தான் தேர்தல் வருமா" என்ற சந்தேகம் இன்னும் அரசியல் கட்சிகளுக்கு தீரவில்லை. எப்படிப்பார்த்தாலும் அடுத்து செப்டம்பர் மாதம் நடைபெறும் ஐ.நா. மன்ற கூட்டத்தின் போது மீண்டும் இலங்கைப் பிரச்சினை இந்த அளவிற்கு சூடுபிடிக்கும்! அதுவரை அரசியல் கட்சிகள் எல்லாம் தங்கள் பங்கிற்கு சாதித்து விட்டோம் என்ற நினைப்பில் அமைதிகாக்கும் என்றே தெரிகிறது.

அதேநேரத்தில், காங்கிரஸ் கட்சியைப் பொறுத்தமட்டில் "நெருக்கடி" இன்னும் தமிழகத்தில் தீரவில்லை. இலங்கைத் தமிழர் பிரச்சினையில் அக்கட்சியின் நிலைப்பாட்டிற்கு தமிழகத்தில் ரசிகர்கள் இல்லை. அதனால் தி.மு.க. வெளியேறிய பிறகும் கூட அ.தி.மு.க. தரப்பிலிருந்து காங்கிரஸுக்கு "அனுசரணையாக" வார்த்தைகள் இல்லை. சுதந்திரம் அடைந்தவுடன் காங்கிரஸை கலைத்து விட வேண்டும் என்று மகாத்மா காந்தி சொன்னார் என்ற விவாதம் தமிழக சட்டமன்றத்தில் அரங்கேறியது. "அதற்கு ஆதாரம் இல்லை" என்று காங்கிரஸ் சட்டமன்ற உறுப்பினர் விஜயதாரிணி பேச, "அதெல்லாம் இல்லை. அதற்கு ஆதாரம் இருக்கிறது" என்று உள்ளாட்சி துறை அமைச்சர் கே.பி.முனுசாமி அறிவித்தார். இந்த விவாதம் ஏப்ரல் 1ஆம் திகதி சட்டமன்றத்தில் நடந்தது. ஆனால் 2ஆம் திகதி மீண்டும் இதே விவகாரம் சட்டமன்றத்தில் எழ, இப்போது ஆதாரங்களுடன் பதில் சொன்ன முதல்வர் ஜெயலலிதா, "காங்கிரஸை கலைத்துவிட காந்தி சொன்னதற்கு ஆதாரம் இருக்கிறது" என்று சபையிலேயே அந்த ஆதாரத்தை எடுத்து வைத்தார். அத்துடன் "தங்கள் கட்சி பற்றிய விடயங்களைத் தெரியாமல் காங்கிரஸ்காரர்கள் இருக்கிறார்கள்" என்று வேறு குத்திக்காட்டி விட்டார். அதே நேரத்தில் விலகிச் சென்ற தி.மு.க.வுடன் மீண்டும் கூட்டணியாகப் போய் விட முடியாதா என்ற எண்ணம் சில காங்கிரஸ்காரர்கள் மத்தியில் இருந்தது. அதையும் சில நாட்களுக்கு முன்பு நிராகரித்த தி.மு.க. தலைவர் கருணாநிதி, "ஆட்சிக்கு ஆதரவு என்ற பேச்சுக்கே இடமில்லை" என்று கூறிவிட்டார். அது மட்டுமன்றி, "கேரள மீனவர்களைக் கொன்ற இத்தாலி வீரர்களை விசாரணைக்கு அழைத்து வந்த பிரதமரின் வேகம், ஏன் தமிழக மீனவர்களைக் கொன்ற இலங்கை வீரர்கள் விடயத்தில் இல்லை. இந்தப் பாரபட்சமான போக்கு கண்டனத்திற்குரியது" என்று சாடியிருக்கிறார் கலைஞர் கருணாநிதி. எந்தப் பக்கமும் போக முடியாத நிலையில் தமிழக காங்கிரஸ் கட்சி இன்றைக்கு இருக்கிறது.

இந்த நிலை ஜி.கே. வாசன் போன்றோரை கலங்க வைத்திருக்கிறது. தமிழக காங்கிரஸில் இரு அணிகள்தான் பிரதானமானவை. ஒன்று ஜி.கே. வாசன் அணி. (முன்பு மூப்பனார் இருந்த போது உருவான தமிழ் மாநில காங்கிரஸ் அணி). இன்னொன்று இப்போது நிதியமைச்சராக இருக்கும் ப. சிதம்பரம் அணி. பிரணாப் முகர்ஜி மத்திய அமைச்சராக இருந்தவரை ஜி.கே. வாசனுக்கு டெல்லி காங்கிரஸில் செல்வாக்கு இருந்தது. அவர் குடியரசுத் தலைவரான பிறகு டில்லி மேலிடத்தில் உள்ள மவுசு ஜி.கே. வாசனுக்கு குறைகிறது. சிதம்பரத்திற்கு உள்ள செல்வாக்கு அதிகமாகிவிட்டது. இதுதவிர ஜி.கே. வாசனின் ஆதரவாளராக இருந்த தமிழ்நாடு இளைஞர் காங்கிரஸ் தலைவர் யுவராஜாவையும் திடீரென்று நீக்கிவிட்டது மேலிடத் தலைமை. இதனால் வாசன் மிகவும் அப்செட் ஆகியிருக்கிறார். சென்னை உள்ளிட்ட பல்வேறு நகரங்களில் "தமிழர்களின் தன்மானம் காக்க மீண்டும் தமிழ் மாநில காங்கிரஸை உருவாக்குங்கள்" என்று வாசனுக்கு அழைப்பு விடுத்து ஆங்காங்கே போஸ்டர்கள் ஒட்டப்பட்டுள்ளன. "அப்படியெல்லாம் திட்டம் ஏதுமில்லை" என்று ஜி.கே. வாசன் அறிவித்தாலும், காங்கிரஸ் தலைமை மீது அவருக்கு மனவருத்தம் இருக்கிறது

*(55ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிராந்திய அரசியல்



# முஷாரப்பின் வருகையின் பின்னணியில் உள்ள இராணுவத்தின் வியூகம்

ராகுல்ஜி

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


பாகிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக ஒரு சிவிலியன் அரசாங்கம் அதன் முழுமையான 5 வருட பதவிக் காலத்தையும் பூர்த்தி செய்திருக்கிறது. எதிர்வரும் மே மாதம் 11 ஆம் திகதி நடைபெறவிருக்கும் பொதுத்தேர்தலில் மக்களினால் தெரிவு செய்யப்படும் அரசாங்கம் பதவியேற்கும் போது அது பாகிஸ்தானின் வரலாற்றில் முதற்தடவையாக அமைதியான முறையில் இடம்பெறுகின்ற அதிகார மாற்றமாகவும் அமையப்போகிறது.

பாகிஸ்தானின் ஆறரைத் தசாப்த வரலாற்றில் அரைவாசிக்காலத்துக்கு அது இராணுவத்தின் ஆட்சியின் கீழேயே இருந்திருக்கிறது. சிவிலியன் அரசாங்கங்கள் பதவியில் இருந்த காலகட்டங்களில் கூட தேசிய விவகாரங்களில் இராணுவம் ஆதிக்கம் செலுத்திவந்திருக்கிறது. இத்தகைய பின்புலத்தை அடிப்படையாகக் கொண்டு நோக்குகையில், 2008 பெப்ரவரியில் பதவிக்கு வந்த பாகிஸ்தான் மக்கள்கட்சி தலைமையிலான அரசாங்கம் மக்களால் தெரிவு செய்யப்பட்ட முன்னைய எந்தவொரு அரசாங்கத்துக்கும் கிடைத்திராத பெருமையை- அதாவது 5 வருட பதவிக்காலத்தையும் முழுமையாகப் பூர்த்தி செய்த பெருமையைத் தனதாக்கிக் கொண்டிருக்கிறது. உண்மையிலேயே இதை பாகிஸ்தான் மக்கள் கட்சியின் மிகப்பெரிய சாதனை என்று வர்ணிப்பது எதுவிதத்திலும் மிகைப்படுத்தலாக இருக்கப் போவதில்லை.

ஜனநாயகத்தை நிறுவனமயப்படுத்துவதற்கு பாகிஸ்தான் மக்கள் கட்சி அரசாங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட சில துணிச்சலான நடவடிக்கைகள் பற்றிக் குறிப்பிட வேண்டியதும் அவசியமானதாகும். அரசியலமைப்பில் இராணுவத்தின் தலையீட்டை இல்லாமற் செய்வதற்கு கொண்டுவரப்பட்ட திருத்தங்கள், ஜனாதிபதியின் அதிகாரங்கள் குறைக்கப்பட்டமை, பிரதமரின் நிறைவேற்று அதிகார மேலாண்மையை மீள நிலைநிறுத்தியமை, மாகாணங்களுக்கு கூடுதல் அதிகாரங்கள் வழங்கப்பட்டமை ஆகியவை இவற்றில் முக்கியமானவையாகும். இராணுவத்தின் ஆதிக்கத்தில் இருந்து வெளியுறவுக் கொள்கையை மீட்டெடுப்பதற்கு மக்கள் கட்சி அரசாங்கம் மேற்கொண்டிருக்கக்கூடிய முயற்சிகள் இதுகால வரையிலும் பாகிஸ்தானின் நெருங்கிய வல்லாதிக்க நேசநாடு என்ற நிலையில் இருந்த அமெரிக்காவுடனான உறவுகளில் பெருவாரியான நெருக்கடிகளைக் கொண்டு வந்துவிட்டன என்பது முக்கியமாகக் கவனிக்கப்படவேண்டிய அம்சமாகும். பாகிஸ்தான் மக்கள் கட்சியின் "சாதனைகள்" என்று சொல்லப்படக் கூடியவை எல்லாவற்றுக்கும் அப்பால், அக்கட்சி அதன் ஆட்சிக்காலத்தில் பெரும்பகுதியை தனக்கு வரக்கூடிய ஆபத்துகளில் இருந்து தப்புவது எப்படியென்பதிலேயே கவனத்தைச் செலுத்துவதிலேயே செலவழிக்க வேண்டியிருந்தது. அதனால், ஆட்சி முறையில் ஊன்றிய கவனத்தைச் செலுத்த முடியவில்லை. பாகிஸ்தானின் பொருளாதாரம் அலங்கோலமாகக் கிடக்கிறது. இதற்கு கடைப்பிடிக்கப்பட்ட பொருளாதாரக் கொள்கைகள் மாத்திரமல்ல, படுபயங்கரமான பாதுகாப்புச் சூழ்நிலை மற்றும் அரசியல் நிச்சயமற்ற தன்மையும் காரணமாகும். ஊழல் தலைவிரித்தாடிக்கொண்டிருக்கிறது. இவையெல்லாவற்றுக்கும் முன்னைய இராணுவ ஆட்சிகளையே பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவர்கள் குற்றஞ்சாட்டுவதையும் காணக்கூடியதாக இருக்கிறது.

இன்னும் ஒன்றரை மாத காலத்திற்குள் பாகிஸ்தானில் இடம்பெறப் போகும் முதலாவது ஜனநாயக ஆட்சி மாற்றம் பாகிஸ்தானியர்கள் மத்தியில் ஏற்படுத்தக்கூடிய எதிர்பார்ப்புகளுக்கு ஈடுகொடுக்கக்கூடியதாகச் செயற்பட வேண்டிய பிரமாண்டமான பொறுப்பு அடுத்த அரசாங்கத்தின் கரங்களிலேயே விழுகிறது. பாகிஸ்தானில் முளைவிட்டிருக்கக் காணப்படுகிற "ஜனநாயக இளந்தளிர்க் கொம்புகள்" மேலும் பத்திரமாக வளருவதை புதிய அரசாங்கத்தின் செயற்பாடுகளினால் மாத்திரமே உறுதிசெய்ய முடியும்.


ஜனாதிபதி சர்தாரி


நவாஸ் ஷெரிப்


ஜெனரல் கயானி

இதனிடையே முன்னாள் இராணுவ ஆட்சியாளர் ஜெனரல் பெர்வெஸ் முஷாரப் நான்கு வருட கால சுய அஞ்ஞாதவாசத்துக்குப் பிறகு அரசியலில் ஈடுபடுவதற்காக பாகிஸ்தான் திரும்பியிருக்கிறார். 1999 ஆம் ஆண்டு இராணுவச் சதிப்புரட்சி மூலம் அதிகாரத்தைக் கைப்பற்றிய அன்றைய இராணுவத்தளபதி முஷாரப் பொதுத்தேர்தலில் தனது அகில பாகிஸ்தான் முஸ்லிம் லீக் கட்சிக்கு தலைமை தாங்கி வழிநடத்துவதன் மூலம் தேசிய அரசியல் வாழ்வில் தனக்கொரு பாத்திரத்தை எடுத்துக் கொள்ள முடியுமென்று தன்மட்டில் நம்பிக்கை கொண்டிருக்கிறார்.

கடந்த மாதம் 24 ஆம் திகதி அவர் துபாயில் இருந்து கராச்சி சர்வதேச விமானநிலையத்தில் வந்திறங்கிய போது அவரை வரவேற்க வந்த ஆதரவாளர்களின் தொகையை விடவும் அங்கு பிரசன்னமாகியிருந்த ஊடகவியலாளர்களின் தொகை அதிகமாக இருந்ததாகக் கூறப்படுகிறது. விமான நிலையத்துக்கு தாங்கள் வரு

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**பாகிஸ்தான் இராணுவம் அதன் செல்வாக்கிற்குள் இல்லாத இரு பிரதான கட்சிகளும் ஆட்சி அதிகாரப் பதவிகளை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளக்கூடிய வாய்ப்புகள் ஏற்படாதிருப்பதை உறுதி செய்வதில் குறியாக இருக்கிறது. சர்தாரியோ, நவாஸ் ஷெரிப்போ தங்கள் செல்வாக்கிற்குள் இல்லாமல் இருக்கும் தற்போதைய நிலையை ஜெனரல்களால் எப்படித்தான் சகித்துக்கொள்ள முடியும்?**

வதை பொலிஸார் தடுத்ததாக முஷாரப்பின் ஆதரவாளர்கள் கூறியபோதிலும், வீதிகளில் தடைகள் போடப்பட்டதற்கான எந்த அறிகுறிகளையும் காணக்கூடியதாக இருக்கவில்லை என்று ஊடகங்கள் தெரிவித்திருந்தன.

பாகிஸ்தான் மக்கள் கட்சியின் தலைவி பெனாசீர் பூட்டோ பல வருடகால அஞ்ஞாதவாசத்திற்குப் பிறகு 2007 பிற்பகுதியில் இதே கராச்சி விமான நிலையத்தில் தான் வந்திறங்கினார். அங்கிருந்து அவர் வாகன பவனியில் சென்றபோது வீதியெங் கும் இலட்சக்கணக்கான ஆதரவாளர்கள் திரண்டு நின்று வரவேற்றனர். அந்தப் பவனியின் போது அவரைக் கொலை செய்வதற்கு தற்கொலைக் குண்டுத்தாக்குதலும் மேற்கொள்ளப்பட்டது. அதில் அவர் உயிர் பிழைத்த போதிலும், பிறகு இருமாதங்கள் கழித்து 2007 டிசம்பர் இறுதியில் ராவல் பிண்டி நகரில் தேர்தல் கூட்டமொன்றில் இடம்பெற்ற தாக்குதலில் கொலையுண்டார். நாடு திரும்பினால் பெனாசீர் பூட்டோவை கொல்லப்போவதாக தீவிரவாதிகள் எச்சரிக்கை செய்தபோதிலும், அதைப் பொருட்படுத்தாமல் அவர் நாட்டுக்குத் திரும்பிவந்தார். அதே போன்றே முஷாரப்பும் நாடுதிரும்பினால் கொல்லப்படுவார் என்று பாகிஸ்தான் தலிபான்கள் எச்சரிக்கை செய்தனர். ஆனால், அந்த எச்சரிக்கையைப் பொருட்படுத்தாமல் முஷாரப் வந்து சேர்ந்திருக்கிறார்.

பெனாசீர் பூட்டோ நாடு திரும்பிய வேளையில் முஷாரப்தான் ஆட்சியில் இருந்தார். அப்போது விமான நிலையத்தில் இருந்து வாகனப் பவனியாக வந்த அவருக்கு முஷாரப் அரசாங்கம் போதிய பாதுகாப்பை வழங்கவில்லை. அதனால் தான் தீவிரவாதிகளினால் தாக்குதலை மேற்கொள்ளக் கூடியதாக இருந்தது. இப்போது பெனாசீர் பூட்டோவின் கணவர் அசீவ் அலி சர்தாரிதான் ஜனாதிபதியாக இருக்கிறார். முஷாரப் வந்திறங்கியபோது அவர் பாதுகாப்பாக வாசஸ்தலத்துக்கு கொண்டுசெல்லப்பட்டதைக் காணக்கூடியதாக இருந்தது. பெனாசீர் பூட்டோ கராச்சியில் வந்திறங்கியபோது அவரை வரவேற்கத் திரண்டதைப் போன்ற மக்கள் வெள்ளம் தன்னையும் வரவேற்குமென்று இந்த முஷாரப் தனக்குள் நினைத்திருப்பாரோ என்னவோ? பாகிஸ்தான் தேசபிதா முஹமட் அலி ஜின்னாவின் நினைவுத் தூபிக்கு ஊர்வலமாகச் செல்ல முஷாரப் விரும்பினார். எனினும் பொலிஸார் அதற்கு அனுமதி மறுத்துவிட்டனர்.

துபாயில் இருந்து நாடு திரும்பிக் கொண்டிருந்தபோது பயணத்தின் ஒவ்வொரு கட்டத்தையும் காண்பிக்கும் போட்டோக்களை ருவிற்றரில் முஷாரப் வெளியிட்டுக்கொண்டிருந்தார். விமான நிலையத்துக்கு வந்திருந்த மக்கள் கூட்டத்தின் பெரும் பகுதியும் கலைந்து சென்ற பின்னரே அதிமுக்கிய பிரமுகர்களுக்கான நுழைவாயிலில் முஷாரப் வந்தார். தொலைக்காட்சி கமராக்களுக்கும் ஊடகவியலாளர்களுக்குமே அவர் ஆரவாரத்துடன் கையசைத்து மகிழ்ச்சி தெரிவிக்கக்கூடியதாக இருந்தது.

"ஐந்து வருடங்களுக்கு முன்னர் நான் விட்டுச் சென்ற பாகிஸ்தான் எங்கே போய்விட்டது?" என்று முஷாரப் கேள்வியெழுப்பினார். "இன்று எனது நாட்டு நிலையைப் பார்த்து நான் இரத்தக் கண்ணீர் வடிக்கிறேன். உங்களுக்காகவே மீண்டும் வந்திருக்கிறேன். நான் வெளியேறிச் சென்றபோது இருந்த பாகிஸ்தானை மீளக் கொண்டுவர விரும்புகிறேன்'' என்றும் அவர் ஊடகவியலாளர்களைப் பார்த்துக் கூறினார்.

முஷாரப் என்ன துணிச்சலுடன் மீண்டும் அரசியலில் ஈடுபட நாடு திரும்பியிருக்கிறார் என்ற கேள்வியையே அரசியல் அவதானிகளும் ஊடகவியலாளர்களும் கிளப்பினார்கள். அபிப்பிராய வாக்கெடுப்புகளின்படி அவருக்கு ஆதரவு கிஞ்சித்தும் கிடையாது. பாகிஸ்தானுக்குள் அவருக்கு அரசியல் கட்டமைப்பு கிடையாது. எந்தவொரு பிரதான அரசியல் கட்சியுமே அவரை ஆதரிக்கவில்லை. இராணுவம் கூட வெளிப்படையாக அவரை ஆதரிக்கத் தயாராயிருப்பதாக காட்டிக்கொள்ளுமென்று தோன்றவில்லை.

முன்னாள் கிரிக்கெட் அணியின் கப்டனும் தற்போது தெஹ்றீக்-ஈ. இன்சாப் கட்சியின் தலைவருமான இம்ரான்கானைவிடவும் தனக்கு பாகிஸ்தானில் மக்கள் ஆதரவு இருக்கிறதென்று முஷாரப் அண்மையில் கூறியிருந்தார். ஃபேஸ்புக்கில் உள்ள தனது ஆதரவாளர்களை வைத்துத் தான் தனது ஆதரவை முஷாரப் மதிப்பிட்டிருக்கிறார் போலும், தனக்கென ஒரு பாராளுமன்ற ஆசனத்தைக் கைப்பற்றுவதற்குக் கூட அவர் பெரும் போராட்டத்தை நடத்த வேண்டியிருக்கும் என்று ஜொன் பூன் என்ற செய்தியாளர் கராச்சியில் இருந்து லண்டன் கார்டியன் பத்திரிகைக்கு எழுதிய கட்டுரை ஒன்றில் தெரிவித்திருந்தார்.

மிகவும் சிக்கலான ஒரு சூழ்நிலையில் தான் முஷாரப் நாடுதிரும்பியிருக்கிறார். தலிபான்கள் அவரைக்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

கொலை செய்யப்போவதாக அச்சுறுத்திக் கொண்டிருப்பது ஒரு புறமிருக்க, பெனாசீர் பூட்டோவின் கொலையில் முஷாரப்புக்கு இருப்பதாகக் கூறப்படும் பங்கிற்காக பயங்கரவாதத் தடுப்பு நீதிமன்றமொன்று ஏற்கனவே அவர் மீது பிடியாணை பிறப்பித்திருந்தது. 2006ஆம் ஆண்டு இடம்பெற்ற பலுசிஸ்தான் தலைவர்களில் ஒருவரான நவாப் அக்பர் புக்தி கொலை தொடர்பான வழக்கில் முஷாரப் குற்றஞ்சாட்டப்பட்டிருக்கிறார். அத்துடன் 9 வருடங்கள் முற்றுமுழுதான அதிகாரத்தையும் தனது கையில் வைத்திருந்து ஆட்சி செய்தபோது நீதிபதிகளைப் பதவி நீக்கம் செய்தமைக்காகவும் அவர் பதில் கூறவேண்டியிருக்கிறது. அதனால், பாகிஸ்தான் நீதித்துறை அவர் தொடர்பில் மென்மையாக நடந்துகொள்ளுமா என்ற கேள்வி எழுகிறது. முஷாரப் வெளிநாடுகளுக்கு செல்ல முடியாதவாறு நீதிமன்றம் உத்தரவு பிறப்பித்திருக்கிறது என்பது இது விடயத்தில் கவனிக்கத்தக்கது.

பாகிஸ்தான் இராணுவம் இன்று இருப்பதைப் போன்று அரசியல் ரீதியில் என்றுமே பலவீனமான நிலையில் இருந்ததில்லை. இந்த உண்மையின் பின்புலத்திலேயே அவதானிகள் முஷாரப்பின் வருகையை நோக்குகிறார்கள். ஜனாதிபதியோ, நீதித்துறையோ, மக்களின் அபிப்பிராயமோ, இருபெரிய அரசியற்கட்சிகளுமோ இராணுவத்தின் செல்வாக்கிற்குள் இப்போது இல்லை. இதனால், தனக்கு ஆதரவான அரசியல் சக்திகளை உருவாக்குவதற்கு இராணுவம் முயற்சிப்பதற்கான சகலவாய்ப்புகளும் இருக்கின்றன. கடந்தமாத இறுதியில் லாகூரில் இம்ரான் கானின் கட்சி நடத்திய பேரணியில் கலந்துகொண்ட மக்களின் தொகை ஒரு இலட்சத்துக்கும் அதிகம் என்று மதிப்பிடப்படுகிறது. இந்தப் பேரணியின் வெற்றியின் பின்னணியில் இராணுவம் இருந்ததாகச் சந்தேகிக்கப்படுகிறது. இரு பிரதான கட்சிகளான முன்னாள் பிரதமர் நவாஸ் ஷெரீப் தலைமையிலான பாகிஸ்தான் முஸ்லிம் லீக் (என்) கையும் பூட்டோ குடும்பத்தின் கட்டுப்பாட்டில் உள்ள பாகிஸ்தான் மக்கள் கட்சியையும் பிளவுபடுத்த முடியாத நிலையில் இராணுவம் தேர்தலில் அரசியல் கட்சிகளுக்குக் கிடைக்கக்கூடிய வாக்குகளைச் சிதறடிக்கக் கூடிய வியூகத்தில் இறங்கியிருப்பதாக சந்தேகிக்கப்படுகிறது. அத்தகைய வியூகத்தின் மூலமாக பாராளுமன்றத்தில் எந்தக் கட்சிக்குமே உருப்படியான பலம் இல்லாத நிலை தோன்றுமானால்,மீண்டும் இராணுவம் பழைய அரசியல் செல்வாக்கு நிலைக்கு வரக்கூடியதாக இருக்கும்.

இதனிடையே வேறு எந்தவொரு பாகிஸ்தானிய முக்கிய அரசியல்வாதிக்கும் இல்லாத அனுகூலம் முஷாரப்பிற்கு இருக்கிறது என்பதைக் கவனத்தில் எடுக்கவேண்டியது அவசியமாகும். வெளிப்படையாக அவரை ஆதரிப்பதாக காட்டிக்கொள்ள இராணுவம் தயாரில்லை என்றாலும், அவருக்கு இராணுவத்தின் ஆதரவு இருக்கிறது. பாகிஸ்தானில் ஆட்சியதிகாரக் கட்டமைப்பு என்றால் அடிப்படையில் அது இராணுவம் தான்.

பொதுத்தேர்தலுக்கு முன்னதாக முஷாரப் நாடு திரும்பியதன் பின்னணியில் இராணுவத்தின் வியூகங்கள் இருக்கிறது என்பது அடுத்துவரும் நாட்களின் நிகழ்வுப் போக்குகளின் மூலமாக நிரூபணமாகலாம். மக்கள் முஷாரப்புடன் இல்லாமல் இருக்கலாம், ஆனால் இராணுவம் இருக்கிறதே. அதனால் அவரின் அரசியல் முன்னெடுப்புகளுக்கு வசதியான சூழ்நிலைகள் தோற்றுவிக்கப்படலாம். தற்சமயத்துக்கு முஷாரப்புடன் பலமான எந்தவொரு கட்சியுமோ குழுவுமோ அணி சேரக்கூடிய வாய்ப்பு இல்லை. இந்தியாவில் இருந்து வந்த முஸ்லிம் குடியேற்றவாசிகளின் நலன்களைப் பிரதிநிதித்துவப்படுத்துகிற முற்றிஹாடா குவாமி இயக்கம் கராச்சியில் பெரும் செல்வாக்குடன் இருக்கிறது. இந்த இயக்கம் முஷாரப்பின் அகில பாகிஸ்தான் முஸ்லிம் லீக்கிற்கு ஆதரவளிப்பதில் அக்கறை காட்டியிருக்கிறது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தனக்குச் சாதகமில்லாத சூழ்நிலையையும் சாதகமானதாக மாற்றிக் கொள்வதில் முஷாரப் கெட்டிக்காரர் என்று கூறும் சில அரசியல் அவதானிகள் 1999 இல் இராணுவச் சதிப் புரட்சியின் ஊடாக அவர் ஆட்சியதிகாரத்துக்கு வந்ததை உதாரணமாகச் சுட்டிக்காட்டுகிறார்கள். முஷாரப்பின் அரசியல் வாய்ப்புகள் எத்தகையவையாக இருக்கும் என்பதை அடுத்துவரும் வாரங்களில் காணக்கூடியதாக இருக்கும்.

முஷாரப்பை மிகவும் கடுமையாக வெறுக்கும் நவாஸ் ஷெரீப்பையும் பாகிஸ்தான் இராணுவத்தையும் சம்பந்தப்படுத்தி சவூதி அரேபியாவினால் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கக் கூடிய இணக்கப்பாடு ஒன்று காணப்பட்டிருக்காவிட்டால் முஷாரப்பின் வருகை சாத்தியமாயிருக்க முடியாது என்பதே சர்வதேச அரசியல் வட்டாரங்களினதும் பிராந்திய அரசியல் வட்டாரங்களினதும் நம்பிக்கையாக இருக்கிறது.


இராணுவத்தின் செல்வாக்கிற்குள் இல்லாத நவாஸ் ஷெரீப்பின் முஸ்லிம் லீக்கும் பாகிஸ்தான் மக்கள் கட்சியும் ஆட்சியதிகாரப் பதவிகளை தங்களுக்குள் பகிர்ந்து கொள்ளக் கூடிய வாய்ப்புகள் ஏற்படாதிருப்பதை உறுதிப்படுத்துவதே இராணுவத்தின் குறியாக இருக்கிறது. இராணுவத்துக்கு சவாலாக அமைய முடியாத அளவுக்கு ஜனநாயக அரசியல் கட்சிகள் கடுமையாகப் பிளவுற்றிருப்பதை உறுதி செய்வதிலேயே கடந்த பல தசாப்தங்களை செலவிட்ட ஜெனரல்களுக்கு பாகிஸ்தானின் இரு பிரதான அரசியல் கட்சிகளும் தங்கள் செல்வாக்கிற்குள் இல்லாமல் இருக்கும் தற்போதைய நிலையை சகித்துக் கொண்டிருப்பது கஷ்டமாகத் தானே இருக்கும். ■



# ராகுல் காந்தியின் துறவு

காந்தி வம்ச அரசியல் இவருடன் முடிவுக்கு வந்து விடுமா? ஒரு காந்தி உயர் பீடத்தில் இல்லாமல் காங்கிரஸால் தப்பிப்பிழைக்க முடியுமா?

ராகுல் காந்தி அண்மையில் தெரிவித்திருந்த கருத்துகள் என்னைப் பெரிதும் கவர்ந்தது மாத்திரமல்ல, சிறிது தடுமாற்றத்தையும் எனக்கு ஏற்படுத்திவிட்டன என்பது தான் உண்மை. தான் சொன்னதை உண்மையாகவே அவர் செய்யப் போகின்றாரா அல்லது வெறுமனே ஒரு கேலிப்பேச்சா? இப்போதைக்கு அவர் வெளிப்படையாகப் பேசுவதற்கும் மனதில் நினைப்பதை வெளிப்படுத்துவதற்கும் உத்தேசித்திருக்கிறார் என்பதை ஏற்றுக்கொள்ள நான் தயாராயிருக்கிறேன். அவரின் கருத்துகள் அவரைப் பற்றி எமக்கு என்ன கூறுகின்றன? காங்கிரஸுக்கும் இந்திய



கரன் தாப்பர்

அரசியலுக்கும் அவற்றால் ஏற்படக்கூடிய தாக்கங்கள் எவை? இவையே தற்போது முக்கியமான கேள்விகள். முதலில், அவர் என்னதான் சொன்னார்? நாம் அதைச் சரிவரப் புரிந்து கொண்டோமா என்பதை நிச்சயப்படுத்திக்கொள்ள வேண்டும்.

பத்திரிகைகளில் வெளியான செய்திகளின் பிரகாரம் ராகுல் காந்தி, "நான் அதிகாரத்துக்காக அரசியலில் இருக்கவில்லை. பிரதமராக வருவது எனது முன்னுரிமைக்குரிய விடயம் அல்ல. உண்மையில், அதைப்பற்றி என்னைக் கேட்கும்போது அது எவ்வளவு தவறான கேள்வி என்றே நான் உணருகிறேன்" என்றுதான் கூறியிருக்கிறார். *"நான் திருமணம் செய்*தால், எனக்கு பிள்ளைகள் பிறப்பார்கள். அதற்குப் பிறகு மாற்றங்கள் ஏற்படுவதை விரும்பாத ஒருவராக நான் மாறிவிடுவேன். எனக்குப் பிறகு எனது இடத்தை பிள்ளைகள் பிடிக்க வேண்டும் என்று விரும்புவேன்" என்றும் ராகுல் காந்தி கூறியிருக்கிறார். அவர் காங்கிரஸின் உயர் பீட கலாசாரத்தை (Congress's high command culture) வெறுக்கும் அவர் இறுதியாக அதைக் கலைத்து விடப் போவதாகவும் உறுதியளித்திருக்கிறார்.

இவையெல்லாம் ராகுல்காந்தி ஒரு தனித்துவமான அரசியல்வாதி என்பதையே காட்டுகின்றன. தாயாருக்கு அப்பால், உயர் பதவிக்குப் பின்னால் அலையாத (எனக்குத் தெரிந்த) ஒரே அரசியல்வாதி அவர்தான். நேரு - *காந்தி வம்ச அரசியலுக்கும் முடிவு* கட்டப் போவதாகவும் அவர் சாடை காட்டியிருக்கிறார். காங்கிரஸைத் தனது குடும்பம் வழிநடத்துகிற முறையில் இருந்து தன்னைத் தூர விலக்கிக் கொள்வதற்கும் அவர் அசௌகரியப்படவில்லை. சிந்தனை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

யில் ஈடுபடும் பாங்குடைய இத்த கைய நேர்மை இந்தியாவில் வழ மைக்குமாறானது என்பதையும் விட மேலானது. அரிதானது.

இதனால் ராகுல் காந்தியை இந்தி யாவின் மத்தியதர வர்க்கங்கள் நேசி க்கும் என்பதிற் சந்தேகமில்லை. இதைக் கேள்விப்படத்தான் நாம் விரும்புகிறோம். உண்மையில், அவர் பற்றி நல்லமுறையாகக் காண் பிப்பதற்கு முன்கூட்டியே திட்டமிடப் பட்ட ஒரு செயற்பாடு. ஆனால், இவையெல்லாமே காங்கிரஸ் மீதும் இந்திய அரசியல் மீதும் முக்கியமான தாக்கங்களை ஏற்படுத்தும். இத்தாக் கங்கள் மிகவும் வித்தியாசமானவை யாகவும் கவலை தரக்கூடியவையா கவும் அமையலாம்.

எதிர்காலத்தில் காங்கிரஸ் தலை மையிலான ஒரு அரசாங்கத்தின் பிரதமராக ராகுல் காந்தி பதவி யேற்கப் போவதில்லையென்றால், அவர் தனது மன்மோகன் சிங்கைக் கண்டுபிடிக்க வேண்டியது அவசிய மாகும். ஆனால் யார்? ராகுல் காந்தி யின் மன்மோகன் சிங்காக வருவ தற்கு பலர்விரும்புவார்கள்.அதனால், அந்த இடத்தைக் கைப்பற்றுவதற்குப் பெரிய போட்டாபோட்டியை நினை யாப் பிரகாரம் ஏற்படுத்தியிருக்கிறா ரா? இது காங்கிரஸைப் பலப்படுத்து வதற்குப் பதிலாக உறுதி குலையச் செய்துவிடக் கூடுமல்லவா?

இந்திய அரசியலுக்கு ஏற்படக் கூடிய தாக்கங்கள் கூடுதலான அளவுக்கு மனக்குழப்பத்தைத் தரக் கூடியவையாக இருக்கும். தற்போது இருப்பதைப்போன்று இரு ஆட்சி யாளர்களைக் கொண்ட ஏற்பாடு (Dyarchy) எதிர்காலத்தில் அமை யக்கூடிய எந்தவொரு காங்கிரஸ் தலைமையிலான அரசாங்கத்தின் கீழும் தொடருவதற்கான வாய்ப்பு இருக்கிறது. ஆனால், அது இந்திய ஜனநாயகத்தின் நலன்களுக்கு உகந் ததா? நல்லாட்சிக்கான தேவைக்கு உகந்ததா?

ஒரு ஜனநாயக ஆட்சியிலே ஆளும் கட்சியின் தலைவரே பிரத மர். முதலில் எம்.பி.க்கள் அவருக்கே தங்கள் விசுவாசத்தை வெளிக்காட்ட வேண்டும். ஆனால், இந்தியாவில் காங்கிரஸைப் பொறுத்தவரை அது வல்ல நிலைமை. இங்கு கட்சித் தலை வர்தான் கூடுதல் முக்கியத்துவம் வாய்ந்தவர். இதனால் கட்சித் தலை வர் மீது முழுமையான பொறுப்பு இல்லாமல் அதிகாரம் ஒப்புவிக்கப் படுகிறது. அதேவேளை, பிரதமர் முழுமையான அதிகாரமில்லாமல் பொறுப்பு ஒப்படைக்கப்படும் ஒருவ ராக தரங்குறைக்கப்படுகிறார். இது திருப்தியற்ற ஏற்பாடு என்பது அனுப வத்தின் மூலமாக காண்பிக்கப்பட்டி ருக்கிறது.

உயர்பீட கலாசாரம் மற்றும் திரு மணம் பற்றிய ராகுல் காந்தியின் கருத்துகள் பரவலான மாற்றத்துக்கு கட்டியம் கூறுகின்றன.

கடந்த 15 வருடங்களாக ராகுல் காந்தியின் தாயார் காங்கிரஸின் உயர் பீடமாக இருந்துவருகிறார். இந்த 15 வருட காலகட்டத்திலும் காங்கிரஸின் செயற்குழுவுக்கு ஒரு தேர்தல்தானும் நடத்தப்பட்டதில்லை. அதேவேளை, தாயாரினாலேயே முதலமைச்சர்கள் நியமிக்கப்பட்டார்கள். மாநில சட்ட சபை உறுப்பினர்கள் வெறுமனே அந்த நியமனத்தை அங்கீகரித்தார் கள். இந்த நிலைமை மாறுவதாக இருந்தால் காங்கிரஸ் மாத்திரமல்ல இந்திய அரசியலும் கூட வித்தியாச மானதாக மாறும்.

ஆக, காந்தி வம்ச அரசியல் ராகுல் காந்தியுடன் முடிவுக்கு வந்துவிடு மா? அப்படியானால், முதலில் அது காங்கிரஸுக்குத்தான் பாரிய சவா லைத் தோற்றுவிக்கும். ஒரு காந்தி உயர்பீடத்தில் இல்லாமல் காங்கிரஸி னால் தப்பிப்பிழைக்க முடியுமா? இல்லையானால், எங்களது அரசிய லுக்கு எத்தகைய அர்த்தத்தை அது கொடுக்கும்?

இந்தக் கேள்விகள் காங்கிரஸ் காரர் களை நிலைகுலையச் செய்துவிட லாம். ராகுல் காந்தியின் துறவறத் தையும் மெய்மையையும் வெளியார் மெச்சுவதைப் போன்று அவரது கட்சி அச்சத்தோடும் சந்தேகத்தோடும் பிரதிபலிப்பை வெளிக்காட்டக் கூடும். இது உண்மையில் 2014 பொதுத் தேர்தலுக்குத் தயாராகுவ தற்கு ஒரு விசித்திரமான வழியாகும். ஆனால், அது எதிர்காலத்தை அதிர்ச்சிக்குரியதாகவும் சவால் மிக்க தாகவும் மாற்றும். ■


**இந்துஸ்தான் ரைம்ஸ்**

---

*(49ஆம் பக்கத்தொடர்ச்சி...)*

என்பது தெரிகிறது. அதனால்தான் சமீப காலங்களில் இலங்கைத் தமிழர் பிரச்சினையில் ஜி.கே. வாசன் மட் டும் ஆதரவுக் கருத்துகளை தெரி வித்து வருகிறார். கொழும்பில் நடக் கும் கொமன்வெல்த் மாநாட்டை வேறு நாட்டிற்கு மாற்ற வேண்டும் என்றே கூட கருத்துச் சொல்லி விட் டார். அந்த கருத்தைச் சொன்னவுடன் ஏப்ரில்-2ஆம் திகதி பிரதமர் மன் மோகன்சிங்கைச் சந்தித்த அவர், "இலங்கை கடற்படையால் தாக்கப் படும் தமிழக மீனவர்களைக் காப் பாற்ற தீவிர நடவடிக்கை எடுக்க வேண்டும்" என்று அறிவித்துள்ளார். இலங்கைத் தமிழர் பிரச்சினையில் காங்கிரஸ் கட்சியைக் குறைகூறி மீண்டும் "தமிழ் மாநில காங்கிரஸ்" கட்சியை ஜி.கே.வாசன் உருவாக்கி விடுவாரோ என்ற பீதி டெல்லியில் உள்ள காங்கிரஸ் தலைவர்களுக்கே உருவாகியிருக்கிறதாம். தமிழகத்தில் இதுவரை நடைபெற்றுள்ள இலங் கைத் தமிழருக்கு ஆதரவான போராட்டத்தில் தமிழக காங்கிரஸ் கட்சி 1998ஆம் ஆண்டு போல் மீண் டும் ஒரு முறை தனிமைப்பட் டுள்ளது. அதை மேலும் உறுதி செய் வது போலவே திரையுலகத்தினரின் உண்ணாவிரதம் நடைபெற்றது. அவர்கள் நிறைவேற்றிய தீர்மானத் தில் "தமிழக அரசின் தீர்மானத்தை ஏற்க வேண்டும்" என்று மத்திய அரசு க்கு கோரிக்கை விடுத்ததோடு மட்டு மன்றி, தமிழக அரசையும், மாணவர் சமுதாயத்தையும் பாராட்டியிருக்கின் றனர் திரையுலகத்தினர். ■

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org



# அறிவாற்றலின் சூட்சுமங்கள்

## ஐன்ஸ்ரைனின் மூளை

"இவன்ரை மண்டையுக்கை வெறுங் களிமண்தான் கிடக்கு."

ஒரு மக்குப் பையனைப் பார்த்து இவ்வாறு சொல்லப்படலாம். அல்லது நுணுக்கமான விடயம் பற்றி அலசப்படும்போது மொக்கைக் கருத்தை வீசுபவன் மீது எறியப்படும் சொல்லாடலாகவும் இது இருப்பதுண்டு. இது அவனது மூளையின் உள்ளடக்கத்தைப் பற்றிய விமர்சனமாகும். மாறாக "அவன்ரை உடம்பெல்லாம் மூளை" என்று சொல்லிப் பாராட்டும் போது, அது அந்த மூளையின் கன பரிமாணத்தைப் பேசுகிறது.

இவை வெறும் வாய்ப்பேச்சுகள் மட்டுமே.

### மிருகங்களின் மூளையின் அளவும் அறிவாற்றலும்

ஒரு உயிரினத்தின் அறிவாற்றலை அதனது மூளையின் அளவைக் கொண்டு அளவிட முடியுமா?


அறிவியல் களரி

வெவ்வேறு மிருகங்களின் மூளையின் அளவுகளைப் பற்றி ஆராய்ந்து பார்த்தால் மிகவும் பெரிய மூளை திமிங்கிலத்திற்குத்தான் இருக்கிறது. அதனது மூளையின் எடை 8 கிலோ ஆகும். அடுத்து யானைக்கு சுமார் 5 கிலோ, டொல்பினின் மூளை 1.5-1.7 கிலோ. ஆனால் மிகவும் புத்திசாலியான மிருகம் என நாம் எண்ணும் மனிதனின் மூளையின் எடை 1.3-1.5 கிலோ மட்டுமே ஆகும்.

எடை கூடிய மிருகங்களின் மூளையும் பாரம் அதிகமாக இருப்பது தெரிகிறது. அதேநேரம் மூளையின் அளவிற்கும் அதன் அறிவாற்றலுக்கும் தொடர்பில்லை என்பதும் புரிகிறது. அப்படியானால் அதனது உடலின் அளவிற்கு ஏற்பவே மூளையின் எடையும் இருக்கிறது எனலாம். மூளையின் எடைக்கும் உடல் எடைக்கும் ஆன விகிதாசாரத்தை எம்மால் கணிக்க முடியும்.

மூளையின் எடைக்கும் உடல் எடைக்கும் ஆன விகிதாசாரம் அறிவாற்றலுடன் தொடர்புடையதா?

அவ்வாறிருந்தால் மனிதனளவு அறிவாற்றல் சுண்டெலிக்கும் இருக்க வேண்டும். இரண்டிற்குமான விகிதாசாரம் 1.4 ஆகும். ஆனால் அதைவிட அதிகமான விகிதாசாரம் குதிரை, யானை, சிங்கம் போன்றவற்றுக்கு உண்டு. ஆனால் அவற்றின் அறிவாற்றல் அதிகமாக இல்லையே. உதாரணமாக மூளை உடல் எடை விகிதாசார




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மானது. குதிரைக்கு 1.6, யானை 1.56, சிங்கம் 1.55. ஆகும்.

இந்த விகிதாசாரம் மட்டுமே அறிவாற்றலுக்கான சுட்டி என எடுத்துக் கொண்டால் மிகுந்த அறிவாற்றல் உள்ள மிருகம் சின்னஞ்சிறு எறும்பாகவே இருக்கும். மனிதனுக்கு 1.4 இருக்கும் அதேவேளை எறும்பிற்கு 1.7 இருப்பது குறிப்பிடத்தக்கது.

### மனிதனின் மூளையின் அளவும் அறிவாற்றலும்

எனவே மிருகங்களோடு மனித மூளையை ஒப்பிடுவது தவறு எனக் கொள்ளலாம். மனிதனுக்கும் மனிதனுக்கும் இடையே ஒப்பிடலாமா? ஒரு மனிதனின் அறிவுத் திறனுக்கும் அவனது மூளையின் கனபரிமாண அளவிற்கும் தொடர்பு உண்டா?

மனிதனின் மூதாதையர்களை விட இன்றைய மனிதனின் மூளையின் அளவு பெரிதாக இருப்பது உண்மைதான். 100000 ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த மனித மூதாதையர்கள் இன்றைய மனிதர்களை விட உருவ அளவில் பெரியதாக இருந்தனர். ஆனால், கால ஓட்டத்தில் மனிதன் சூழலுக்கு ஏற்ப கூர்ப்படைந்து வரும் போது அவனது உடலின் அளவு குறைந்து வந்திருக்கிறது.

ஆனால் அதேநேரம் அவனது மூளையின் அளவு பெருத்திருக்கிறது.

ஆனாலும் இதை வைத்துக் கொண்டு அளவில் பெரிய மூளை உள்ளவன் அறிவாற்றல் மிக்கவன் என்று சொல்ல முடியாது. ஏனெனில் சுமார் 35000 ஆண்டுகளுக்கு முன் அழிந்து போன நியன்டதால் மனிதனுக்கு நவ மனிதனை விட பெரிய மூளை இருந்திருக்கிறது.ஐன்ஸ்ரைனின் மூளை தற்கால மனிதர்களைப் பற்றி யோசிப்போம்.

அதிலும் அதீத அறிவாற்றல் மிக்க மனிதர்கள் பற்றி ஆராய்வது அவசியம். உடனடியாக எம் நினைவிற்கு வருவது விஞ்ஞான சூப்பர்ஸ்டாரும், மிக நுட்பமான அறிவியலாளரும் விஞ்ஞானியுமான ஐன்ஸ்ரைன்தான்.

அவரை நினைப்பதற்கு மற்றொரு முக்கிய காரணம் இருக்கிறது. அவர் இறந்து பல வருட காலமாகிவிட்ட போதும் அவரது மூளையானது இன்றும் ஆய்வு கூடத்தில் பாதுகாத்து வைக்கப்பட்டுள்ளதுதான்.


அத்துடன் எமது ஆர்வத்தைத் தூண்டுவது போல அவரது மூளை பற்றிய சில ஆய்வுகளும் இடையிடையே வெளியாகி வருகின்றன. முதலில் அவரது மூளையினது புகைப்படத்தை வைத்து அதன் வெளித் தோற்றம், கனபரிமாணம் ஆகியவற்றை ஆய்வு செய்தார்கள். இப்பொழுது அவரது மூளையின் முக்கிய பகுதியான Grey matter பற்றிய ஆய்வுகள் வெளியாகியுள்ளன.




வைத்தியக் கலாநிதி
எம்.கே. முருகானந்தன்

ஐன்ஸ்ரைன் இறந்தது 1955 ஆம் ஆண்டு ஏப்ரல் 8ஆம் திகதியாகும். நோயியல் pathologist மருத்துவரான Thomas Harvey செய்த தூரதிருஷ்டி கொண்ட காரியம்தான் ஐன்ஸ்ரைனின் மூளையை இன்றும் அழிந்து போகாமல் காப்பாற்றி ஆராய்வதற்கு ஏதுவாக வைத்திருக்கிறது. அவர் ஐன்ஸ்ரைனின் மூளையைத் தனியாகப் பிரித்தெடுத்து அவற்றை 240 துண்டுகளாக வெட்டினார். அத்துடன் அவற்றை பற்பல கோணங்களிலும் முழுமையாகப் படம் எடுத்தார். கறுப்பு வெள்ளைப் புகைப்படங்கள் தான் அப்பொழுது எடுக்க முடிந்திருக்கிறது.

அந்நேரத்தில் அவருக்குக் கிடைந்த குறைந்த வசதிகள் மற்றும் குறைந்த தொழில் நுட்பம் ஆகியவற்றுடன் அவர் ஆற்றிய பணி விதைந்துரைக்கத்தக்கது. அவரது மூளையை பாதுகாக்க அவருக்கு formalin மட்டுமே




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இருந்தது. துண்டுகளைப் போர்மலின் அடங்கிய போத்தலில் போட்டு பெட்டிகளில் வைத்து பியர் கூலரின் குளிரில் தனது அலுவலக அறையில் பேணிப் பாதுகாத்தார்.

தான் எடுத்த படங்களின் சில பிரதிகளையும், மூளையின் சில துண்டுகளையும் அன்று பிரபலமாக இருந்த வேறு சில pathologistகளுக்கு அனுப்பி வைத்தார். ஆரம்ப ஆய்வுகள் குறிப்பிடும்படியாக இருக்கவில்லை. ஒரு ஆய்வின் போது அவரது மூளையானது சராசரியான மூளைகளைவிட சுமார் 200 கிராம் நிறை குறைந்தது எனக் குறிப்பிட்டார்கள்.

குறைந்த எடை கொண்ட மூளையானது அறிவாற்றல் மிக்கதா என்பது போன்ற இடக்குமுடக்கான சந்தேகங்களை எழுப்பாதீர்கள். அந்த குறைந்த எடையானது அவரது வயது முதிர்ச்சியின் காரணமானது எனப் பின்னர் தெரிவிக்கப்பட்டது.

## புதிய ஆய்வுகள்

அவர் இறந்து சுமார் 55 ஆண்டுகளுக்குப் பின்னர் 2010இல் அவரது மூளையின் எஞ்சிய பாகங்களையும் புகைப்படங்களையும் National Museum of Health and Medicine இற்குப் பாரப்படுத்தினார்கள். அவர்கள் அவற்றையெல்லாம் தொகுத்து, டிஜிட்டல் முறையில் படமாக்கினார்கள். இப்பொழுது அவரது மூளையை நேரே இருந்து பார்ப்பது போல காண வசதி கிட்டியுள்ளது.

''முன்பு வெளியான புகைப்படங்களில் காணாத பல விடயங்களைப் புதிய படங்களில் கண்டோம். அவரது பெருமூளையின் வெளித்தோற்றத்தில் முழுவிபரங்களையும் எங்களால் இனங்காண முடிந்தது. அவற்றில் உள்ள மடிப்புகளின் முறைகளின் சிக்கலான தன்மைகளை (complexity) ஏனைய மூளைகளோடு ஒப்பிடும்போது தனித்துவமாக முனைப்பாகத் தெரிகின்றன'' என்றார் மனித வியல் ஆய்வு நிபுணரான டீன் போக் (Dean Falk;).

அண்மையில் மியூசியத்தில் சேர்க்கப்பட்ட புகைப்படங்களில் 18ஐ அவரும் அவரது குழுவினரும் ஆராய்ந்ததை அடுத்தே இந்தக் கருத்தை வெளியிட்டனர்.

அந்த மாற்றங்களானது அறிவார்ந்த ஆற்றலுக்குரிய மூளையின் பகுதியான prefrontal cortex, கணித மற்றும் அண்டவெளி சார்ந்த நுண்ணிய கணிப்புகளுக்கான மூளையின் பகுதியான parietal lobes இலும் முக்கியமாகத் தென்பட்டன என்றார்கள். அதேபோல உணர்வுகளுக்கானதும் உடற் செயற்பாட்டிற்குமான மூளையின் பகுதிகளும் வழமையிலும் விட அதிகமாக பருத்திருந்தன என்றார்கள். இவையே அவரது அதீத அறிவாற்றலுக்கான காரணங்களாக அவர்களால் விளக்க முடிந்தது.

## சந்தேகங்கள்

அவர்களது ஆய்விற்கான இத்தகைய விளக்கம் வேறு விஞ்ஞானிகளிடையே சலசலப்பை ஏற்படுத்தியது. இதை எள்ளிநகையாடுவது போன்ற கருத்தையும் உதிர்த்தார்கள்

## அவ்வாறு கூறியதற்கான காரணங்கள் என்ன?

''ஐன்ஸ்ரைனின் மூளையின் படங்களை மட்டும் வைத்துக் கொண்டு நீங்கள் எந்தவிதமான முடிவுகளுக்கும் இட்டுச் செல்லலாம்'' என நக்கலடித்தார் Cardiff University ஐச் சேர்ந்த நரம்பியல் விஞ்ஞானியான Chris Chambers.

''ஐன்ஸ்ரைனின் மூளையானது மற்றவர்களுடையதை விட பார்வைக்கு சற்று வித்தியாசமாகத் தோன்றுவதை வைத்துக் கொண்டு, தலைகீழான அனுமானங்களுடன் தர்க்கப் பிழைகள், மற்றும் தவறான பொதுமைப்படுத்தல்களினூடாக அவரது மூளையின் செயற்பாட்டுத்தன்மையை விளக்க முயல்வது தவறு. ஏனெனில் மூளையின் வெளித் தோற்றத்திற்கும் அதன் செயற்பாட்டிற்கும் எந்தவித தொடர்பும் இல்லாமலும் இருக்கலாம். அதனால் அவர்களது முடிவுகள் விஞ்ஞான ரீதியாக வலுவற்றவையாகும்.''

மனிதனின் உடல் அமைப்புகளில் ஆளுக்காள் வேறுபாடுகள் உள்ளன. அதேபோல உறுப்புகளிலும் உள்ளன. ஒரு மனிதனின் ஆண்குறி போல மற்றவனது இருப்பதில்லை. பெண்களின் முலைகளில் பெண்ணுக்குப் பெண் வித்தியாசம் மட்டுமன்றி, ஒரே பெண்ணில் ஒரு பக்கத்திற்கும் மறு பக்கத்திற்கும் இடையேயான தோற்ற வித்தியாசங்களை அவதானித்தால் கண்டு கொள்ளலாம். இவ்வாறே எந்தவொரு உறுப்பும் ஒரே மாதிரியானவை அல்ல. இந்த வித்தியாசங்களால் அவர்களது உறுப்புகளின் செயற்பாட்டில் ஏற்றத்தாழ்வுகள் கிடையாது.

மனித மூளைகளும் அவ்வாறே பலவித தோற்றங்களிலும், அளவுகளிலும், கனதியிலும் உள்ளன. அவற்றிலுள்ள வேறுபாடுகளுக்கும் அறிவாற்றலுக்கும் எந்தவித தொடர்பும் கிடையாது. உண்மையில் மருத்துவ நூல்களில் உள்ளது போன்ற அச்சொட்டான மூளை எந்த மனிதனுக்கும் கிடையாது. அவ்வாறே ஐன்ஸ்ரைனுக்கும் இருந்திருக்கவில்லை.


உண்மையில் சொல்வதானால் அவரது மூளையில் உள்ள வேறுபாடுகளைக் கொண்டு அவரது அறிவாற்றலை விளக்க முயல்வதற்கான நவீன விஞ்ஞான தொழில் நுட்பங்களையும் அறிவாற்றலையும் நாம் இன்னமும் கொண்டிருக்கவில்லை எனலாம்.

அப்படியானால் அடுத்து என்ன செய்ய வேண்டும்?

மூளையின் அடிப்படையான பல்வேறு விதமான கலங்களை இன்னமும் நுணுக்கமாக ஆராய வேண்டும். அவற்றிடையே ஒன்றுக்கும் மற்றொன்றுக்கும் இடையேயான தொடர்பு வழிமுறைகளைக் கண்டறிய வேண்டும். இது கூட இன்னமும் சாத்தியப்படவில்லை.அதன் பின்னர் ஐன்ஸ்ரைனின் மூளையின் கலங்களையும் அவற்றிற்கு இடையேயான தொடர்புகளையும் அவரைப் போன்ற வேறு மேதைகளின் மூளையினதுடன் ஒத்துப் பார்த்து ஆராய வேண்டும்.

அதன் பிறகு ஏதாவது தெளிவான முடிவுகள் வெளிப்படலாம். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# பரதேசி

## திரைவிமர்சனம்

உமா

தமிழ் சினிமா உலகம், ஒரு நேர்மையான கதைசொல்லும் அறத்தை இழந்துவிட்டது. சமகாலத்தில் எங்கும் கதைத்திருட்டு இயல்பாக கோலோச்சுகிறது. நேர்மையான, துணிச்சலான சமூகப் பொறுப்புள்ள கலைஞர்கள் பங்குகொள்ளக்கூடியதாக தமிழ் சினிமா உலகம் இன்று இல்லை. இந்த மரபுக்கு யாரும் விதிவிலக்கல்ல. மந்தத்தனமான தமிழ் சினிமாவின் போக்கில் இருந்து விலகிய மாற்று சினிமாவை முன்மொழிபவர்களாக சிலரை முன்னிறுத்தும் உரையாடல்கள், காட்சிகள் அவ்வப்போது திரும்பத் திரும்ப நிகழ்கின்றன. இப்படித்தான் மணிரத்தினம், கமல்ஹாசன் போன்றோர் பேசப்படுகின்றனர். இந்தத் தொடர்ச்சியில் தற்போது இயக்குநர் பாலாவும் பேசப்படுகிறார்.

பாலாவின் இயக்கத்தில் வெளிவந்த படங்கள் யாவும் பாலாவின் படங்கள் என்று தனியாக அடையாளப்படுத்துவதற்கான பல்வேறு கூறுகள் கொண்டவை எனலாம். அதாவது பாலாவிடம் தனித்த ஒரு படைப் புலகமும் படைப்பு நோக்கமும் இருக்கிறது. சேது, நந்தா, பிதாமகன், நான் கடவுள், அவன் இவன், பரதேசி முதலான படங்கள் யாவும் இதற்கு சாட்சி.

பரதேசிப் படம் தற்போது வெளிவந்து ஓடிக்கொண்டிருக்கிறது. இது

## எரியும் பனிக்காடு *(Red Tea)*




இந்தப்படம் உருவாவதற்கான கதை சார்ந்த அருட்டுணர்வைக் கொடுத்த நாவலான 'எரியும் பனிக்காடு' வேண்டுமென்றே இங்கு மறைக்கப்பட்டுள்ளது. தனது சொந்தக்கதையாக பரதேசியை உருவாக்கி நேர்மையான கதை சொல்லும் அறத்தை இழந்துள்ளார் இயக்குநர் பாலா



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org







பல்வேறு சர்ச்சைகளையும் உருவாக்கியுள்ளது. பல விருதுகள் கிடைக்கும் படமாகவும் பேசப்பட்டது. ஆனால் அப்படி குறிப்பிடும் வகையில் விருதுகள் குவியவில்லை. இதற்குப் பின்னால் வேறு அரசியல் இருக்கலாம். ஆனாலும் பரதேசி முன்வைக்கும் அரசியல் கருத்தியல் பல்வேறு விவாதங்களை உருவாக்கியுள்ளது. பாலாவின் ஏனைய படங்களில் இருந்து இப்படம் முற்றிலும் வேறுபட்டதாக உள்ளது. இப்படம் படைப்பு நேர்மையுடன் வெளிப்படவில்லை. இந்தப் படம் உருவாவதற்கான கதையை கதை சார்ந்த அருட்டுணர்வை கொடுத்த நாவலான 'எரியும் பனிக்காடு' வேண்டுமென்றே இங்கு மறைக்கப்பட்டுள்ளது. தனது சொந்த கதையாக பரதேசியை உருவாக்கி நேர்மையான கதைசொல்லும் அறத்தை பாலா இழந்துள்ளார்.

தேயிலைத் தோட்டத் தொழிலாளர்கள் பிரிட்டிஷ் ஏகாதிபத்திய சக்திகளின் சுயநலத்திற்காக எந்தளவிற்குப் பயன்பட்டார்கள் என்பதை உணர்த்தும் படம் தான் பரதேசி. பாலாவின் படங்களில் திணிக்கப்பட்ட வக்கிரங்களும் தீர்வில்லா சோகங்களும் பொது அடையாளங்களாக அமையும். இவர் தனது படங்களில் செயற்கையான வன்முறைக் காட்சிகளுக்காக பாத்திரங்களை உருவாக்கும் பண்புகொண்டவர். ஆனால், பரதேசியில் வரலாற்றின் உண்மையான துன்பவியல் நிகழ்வுகளைப் பதிவு செய்வதால் வன்முறைக்காட்சிகளுக்கேற்ற களமாக இப்படம் அமைகின்றது. பாலாவின் முந்திய படங்களுடன் பரதேசியை ஒப்பிடும் பொழுது இப்படத்தில் அபத்தமான, வக்கிரமான வன்முறைக் காட்சிகள் குறைவு எனலாம். அந்த வகையில் நம்மை நாம் சமாதானப்படுத்திக் கொள்ள முடியும்.

பி.எச். டேனியல் ஆங்கிலத்தில் Red Tea எனும் நாவலை எழுதியிருந்தார். இந்நாவலை இரா.முருகவேல் என்பவர் 'எரியும் பனிக்காடு' என்னும் தலைப்பில் தமிழில் மொழியாக்கம் செய்துள்ளார். இந்நாவலைத் தழுவித்தான் பரதேசியின் கதைக்களமும் கதைத்தளமும் அமைக்கப்பட்டுள்ளது. ஆனால், இந்தப் பதிவை பாலா எந்த இடத்திலும் வெளிப்படையாக பதிவுசெய்யவில்லை. தனது படைப்பாக்கத்தின் உந்துதலுக்கு அறத்தை, நேர்மையை ஒத்துக் கொள்ள அல்லது வெளிப்படுத்த பாலா தவறிவிட்டார். சராசரி தமிழ் சினிமாப் பண்பாட்டில் அசல் பிரதிநிதி தானும் என்பதை இங்கு நிரூபித்துள்ளார்.

பரதேசி 1939 காலகட்டத்தில் நடந்த நிகழ்வாக படம் தொடங்குகிறது. வறுமையின் பிடியில் சிக்கித்தவிக்கும் சாலூர் கிராமம் தான் படத்தின் முதல்பாதி. அங்கு வறுமையிருந்தாலும் நிம்மதியான, மகிழ்ச்சியான கொண்டாட்டமாக அனுபவிப்பவர்கள் அந்த மக்கள். ஒட்டுப் பெ(பொ)றுக்கி என்கிற சாலூர் ராசாவாக டமக்கு அடித்து ஊருக்கு தகவல் சொல்லும் பாத்திரத்தில் நாயகன் அதர்வா முரளி. நான் உன்னை நெனைக்கிறேன் என அன்பு காட்டும் நாயகியாக வேதிகா. இவர்கள் இருவருக்கும் இடையிலான பிணைப்பு இயல்பாகவும் ரசிக்கும்படியும் அமைந்துள்ளது. ஒரு கட்டத்தில் திருமணமாகாமலே இருவரும் கூடி விடுகிறார்கள்.

அதர்வா பக்கத்து ஊருக்கு வேலை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தேடிச்செல்லும்போது அவனுக்கு தேயிலைத்தோட்டத்துக் கங்காணி அறிமுகமாகிறார். கங்காணியின் பசப்பு வார்த்தைகளில் மயங்கி அந் தக் கிராமத்தில் பெரும்பகுதி மக்கள் தேயிலைத்தோட்டப் பணிக்காக எதிர் காலக் கனவுகளோடு நீண்ட பயணம் மேற்கொள்கின்றனர். பரதேசி வாழ் வில் இயங்கு தளம் இங்கு நுட்பமா கவும் உண்மையாகவும் பதிவு செய் யப்படுகிறது. நிலவியல் சார்ந்த காட்சிப்படுத்தல்கள் அதனோடு மக்க ளின் பயணம் வழி எங்கும் ஏற்படக் கூடிய தொந்தரவுகள், நெருக்கடிகள், உளச்சோர்வுகள் என பல்வேறு அம் சங்கள் ஒன்றிலிருந்து ஒன்றாக சுழல் வட்டமாக இயக்கம் கொள்கிறது. கிட்டத்தட்ட ஒன்றரை மாத நடைப்ப யணம். கங்காணி வார்த்தைகளில் சொன்ன அந்த வாழ்வு எதிர்பார்ப்பு கள், நம்பிக்கைகள் அந்தத் தோட்டத் தில் இருக்கவில்லை. கொத்தடிமை களாக எதிர்காலக் கனவுகளைப் புதை த்து வாழ நிர்ப்பந்திக்கப்படுகின்ற னர். பெருந்தோட்ட கட்டமைப்பு எத் தகைய துயரங்கள், வலிகள், இழப்பு கள் மத்தியில் உருவாக்கப்பட்டது என்பதை யதார்த்தமாக படம் காட் சிப்படுத்தப்படுகிறது. பார்வையாள ர்கள் மத்தியில் அந்தக் காலம், அந்த மக்கள் பட்ட வேதனைகள் யாவும் கடத்தப்படுகிறது.

கங்காணியின் அடியாள் பலம் எதி ர்த்துப் பேச முடியாதவாறு மக்களின் கரங்களையும் வாய்களையும் கட்டிப் போட்டுவிடுகின்றது. யாரும் அங்கி ருந்து உயிருடன் தப்பித்து விடமுடி யாது. மர்ம நோயால் கொத்துக்கொத் தாக செத்து விழும் தொழிலாளர்கள், பாழடைந்த மருத்துவமனை, மாட் டுக்கொட்டகை போல் குடிசைகள், வெள்ளைக்கார துரையின் பாலியல் துன்புறுத்தல்கள், கங்காணி ஆட்க ளின் வெறியாட்டங்கள் அட்டைப் பூச்சிகளின் கொடூரத் தாக்குதல்கள், சுகாதாரமற்ற உணர்வுகள் என நரக த்தை விட கொடிய வாழ்வு வாழ நிர்ப்பந்திக்கப்பட்டுள்ள காட்சிகள் யதார்த்தமானவை. ஒவ்வொரு நாளும் கொடுமையிலும் கொடுமை யாக கடந்துசெல்லும் பக்கங்கள் காட்சிகள் நம்மனச்சாட்சி நிலை நின்று நமக்குள் எழுப்பும் கேள்விகள் பலபல. இவ்வாறான கதைக்களம் தமிழ் சினிமாவில் இதுவரை காட்டப் படவில்லை என்றே துணிந்து கூற லாம்.

வருட இறுதியில் கணக்கு முடிக் கும் போது அப்பாடா இத்தோட ஊருக்கு கிளம்பி விடலாம் என்கிற அவர்களது நம்பிக்கையும் இடியை இறக்குகிறான் கங்காணி. பொய்க் கணக்குகள் சொல்லி வாங்கின முன் பணம் முடிய இன்னும் இரண்டு வரு டம் மூன்று வருடமென ஒவ்வொரு வரையும் அந்த நரகக்குழிக்குள் மீண் டும் தள்ள படம் பார்க்கும் நமக்கு வலிக்கிறது. மன அழுத்தம் உருவா கிறது. அந்த தேயிலைத் தோட்டத் தில் ஏற்கெனவே ஓடிப்போன தன் கணவரின் கணக்கைத் தீர்ப்பதற்காக தன் பிஞ்சு மகளுடன் போராடிக் கொண்டிருக்கும் பாத்திரத்தில் தன் சிகா அவருடன் அதர்வாவும் தங்க வைக்கப்படுகிறார். ஒரு கட்டத்தில் தன்சிகாவும் மர்ம நோயிற்குப் பலி யாக மூன்று பேர் கடனும் அதர்வா வில் விழுகிறது. மீண்டும் அதே தோட்டத்தில் ஒன்பது வருடம் தொழில் செய்ய நிர்ப்பந்திக்கிறார்.

பிறந்த தன் மகனையும் மனைவி யையும் பார்க்க முடியவில்லையே என்கிற ஏக்கம், வெறுமை இன்னும் ஒன்பது வருடம் இந்த நரகத்தில் அடி மைவாழ்வு வாழ்ந்து சாகவேண்டு மென்கிற ஆற்றாமை எல்லாம் ஒன்று சேருகிற வேளையில் மலை உச்சியில் அமர்ந்து கொண்டு நெஞ்சு வெடித்து சாலூர் ராஜா(அதர்வா) கதறும் காட்சி நம்மை ஒருகணம் அசைத்துப் பார்த் தது. அந்தநேரத்தில் தோட்ட வேலைக்காக இன்னொரு கூட்டம் அங்கே கொண்டுவரப்படுகின்றது. அந்தக் கூட்டத்தில் தன் கணவனைப் பார்க்கும் ஆவலுடன் பிள்ளை யையும் அழைத்துக்கொண்டு வேதி காவும் வருகிறார். யாரை இவ்வளவு நாளாகப் பார்க்க ஏங்கிக்கொண்டிருந் தானோ தனது குடும்பத்தை கண்டு அந்த சந்தோஷத்தை அனுபவிக்க முடியாமல், இந்த நரகக்குழியில் நீயும் வந்து விழுந்திட்டியே அங் கம்மா... என அந்த காடே நடுங்கும் அளவிற்கு அதர்வா கதறக் கதற படம் முடிகிறது. நாமும் பெரும் சுமைக ளைச் சுமந்து இயல்பு நிலைக்கு திரும்புகிறோம்.

இப்படத்தில் அதர்வாவின் நடிப்பு உண்மையில் பாராட்டத்தக்கது. அது போல் வேதிகாவிற்கான ஒப்பனை பொருந்தவில்லை. பல நடிகர்களுக் கான கறுப்புப் பூச்சு செயற்கையாகத் தெரிகிறது. பாத்திரங்களை இயல் பாக தெரிவு செய்ய முடியும். ஆனால் இயக்குநர் பாலா இங்கு அக்கறை செலுத்தவில்லை. பின்னணி இசை படுமோசம். இதுபோன்ற படங்களு க்கு இளையராஜாவின் இசை சேர்ப்பு படத்திற்கு புதிய அனுபவமாக அமைந்திருக்கும். இந்த படத்தில் வரும் டாக்டர் பாத்திரம் கோமாளி யாக்கப்பட்டிருக்கிறது. உண்மை யில் நாவல் கதையின் படி டாக்டர் பாத்திரம் வெகு சிறப்பானது. அடி மைத்தனத்திலிருந்து விடுவிக்கும் ஆவேசப்பண்பு கொண்டது. பாலா திட்டமிட்டு நாவலின் கதையின் உயிர்ப்பை படத்தில் கொண்டு வர வில்லை. இங்கு நாம் நிதானமாக இயக்குநர் பாலாவை புரிந்துகொள்ள வேண்டிய தேவையுள்ளது.

பாலாவின் படங்களில் தொடர்ச்சி யாக சிறுபான்மை எதிர்ப்பு அரசியல் தலை தூக்குவதை நாம் காணலாம். சேதுவில் தொடங்கி இவரது அனைத் துப் படங்களிலும் இந்துத்துவ பொதுப்புத்தி வெளிப்படுகிறது. ஆதிக்க ஜாதியின் நுட்பமான நவீன அடிமைத்தன கூறுகளை வெளிப் படுத்தும் ஆற்றலை தனது படங்க ளில் படைப்பு நோக்கமாகவே வெளிப்படுத்துகின்றார். பரதேசி திரைப்படத்தில் உடைமைச் சமூகத் திற்கும் சனாதன அமைப்பிற்கும் உள்ள உறவு என்ன என்பது குறித்து எந்தவிதக் கருத்தும் காட்சிப்படுத்த லும் முறையாக பதிவு செய்யப்பட வில்லை. இது பாலாவின் படைப்பு அரசியல் சார்ந்த விடயம்.

*(13ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை வாழ வைத்தவர்கள்



## பனுவல் பார்வை

ஆதிசேனன்

யாழ்ப்பாணம், மகாஜனக்கல்லூரியின் ஆசிரியராக, அதிபராக, இருந்து புகழ்பெற்றவர் பொ. கனகசபாபதி. இவர் கல்விப் பணியில் இருந்து ஓய்வு பெற்றபின் தீவிரமாக எழுத்துத்துறையில் இறங்கியுள்ளார். இன்று பல்வேறு ஆக்கங்களையும் படைத்துவருகின்றார். பெற்றோர்/பிள்ளை உளவியல், மாறன் மணிக்கதைகள் (இருபகுதிகள்), திறவுகோல், மனம் எங்கே போகிறது? முதலான நூல்களை நமக்குத் தந்துள்ளார். இந்த நூல் வரிசையில் தற்போது 'எம்மை வாழ வைத்தவர்கள்' எனும் நூலைத் தந்துள்ளார்.

தனக்குத் தெரிந்த-கேள்வியுற்ற ஆனால் தான் அதிபராவதற்கு முன்பிருந்த, தனக்கு இலட்சியமாகக் கருத்தில் இருத்திக் கொண்ட, முக்கிய ஆளுமைகளான 23 பாடசாலை அதிபர்களைப் பற்றி மிக நுட்பமான அவதானிப்புகளுடன் இந்த நூலை எழுதியிருக்கிறார். இந்த நூல் வெறுமனே பாடசாலை அதிபர்களின் வரலாறு அல்ல. இது தமிழ் மக்களின் கல்வி வரலாறு. ஒரு குறித்த காலகட்டத்தில் ஈழத் தமிழ் மக்களின் சிந்தனை உருவாக்கத்திற்கும் சமூக பொருளாதார அரசியல் பண்பாட்டு உருவாக்கத்திற்கும் ஊற்றுகளாகவும் ஓட்டங்களாகவும் அமைந்துள்ளவற்றை பதிவு செய்கின்றது. மேலும் அடிப்படை நிறுவனங்களாகவும் இருந்த கல்வி நிறுவனங்கள் பற்றிய விரிவான தகவல்கள், சாதனைகள் முதலானவை பதிவு செய்யப்படுகின்றது. இந்த கல்வி மரபு வழிவந்த அறிவு கையளிப்புகளையும், ஆளுமைகளையும் வரலாற்றுப் பிரக்ஞையுடன் ஆராய்ந்து இந்நூல் எழுதப்பட்டிருக்கிறது.



எமது கல்விச் சமூகம் பற்றி பின்னோக்கிய தேடல்களின் போது தலைமையாசிரியர், அதிபர் நிலை நின்று கல்வி வரலாறு எழுதியலுக்கான பின்புலங்கள் 23 ஆளுமைகளை மையப்படுத்தி விரிகின்றது. கல்வி வரலாற்றின் கல்விப் பண்பாட்டின் உயிர்ப்பான விழுமியங்களின் சேகரிப்பிற்கான சமூக வரலாற்றுத் தடயங்கள் தொகுக்கப்பட்டுள்ளது. இனங்காணப்படுகிறது.

இந்நூலில் வரும் அதிபர்கள் 1930களுக்கும் 1970களின் தொடக்கத்திற்கும் இடைப்பட்ட காலத்தில் பிரபல தமிழ், ஆங்கில கல்வி நிறுவனங்களை வழிநடத்தியவர்கள். இதனால் இவர்கள் நன்கு பெயரெடுத்த அதிபர்கள். இவர்களது கல்வி நிருவாகச் சாதனைகளை குறை நிறைகளுடன் பின்னோக்கிப் பார்க்கும் அதேநேரத்தில், அவர்கள் வழிநடத்திய கல்வி நிறுவனங்களின் வரலாற்றுப் பின்னணியையும் பொருத்தமாகக் கொண்டுவந்து இணைத்திருப்பது இந்நூலின் தனிச்சிறப்பு எனலாம். குறிப்பிட்ட காலகட்டத்தினூடு வெளிப்படும் ஆளுமைகளை தேர்ந்தெடுத்து முன்னிறுத்தும் பாங்கு நமக்கு முக்கியமாகின்றது. இவை சமூக மட்டத்தில் கல்வி விரிவாக்கத்தின் வளர்ச்சியில் புதிய விசையாக தொழிற்பட்டு வந்தமைக்கான தர்க்கவியல், சமூகத்தின் கூட்டாற்றல் சந்தர்ப்பச் சூழ்நிலைகள் முதலியன தெளிவாகவும், நுட்பமாகவும் எடுத்துப் பேசப்படுகின்றது. இந்த எழுத்தாக்க மரபு பொ.கனகசபாபதி என்ற பெரும் ஆளுமையை மீட்டுருவாக்கம் செய்து ஆழமாகப் புரிந்துகொள்வதற்கான சமூகத் தேவையையும் இந்நூல் சுட்டிநிற்கின்றது.


இந்நூலில் அருட்தந்தை லோங் அடிகளார், ஹன்டி எஸ்.பேரின்பநாயகம், சங்.ஜோன் பிக்னெல், ச.வீரசிங்கம், ஒரேற்றர் சி.சுப்பிரமணியம், ரி.ரி. ஜெயரட்ணம், எஸ்.வி.ஓ.சோமநாதர், சங்.ஜே.ரி.அருளானந்தம், சி.வி. ஈ.நவரத்தினசிங்கம், வீ.தம்பு, எம்.ரி. சீனித்தம்பி, சி.குமாரசாமி, செல்வி ஈ.எம். தில்லையம்பலம், ஏ.ஈ.தம்பர், திருமதி எஸ்.பிள்ளை, எஸ்.அம்பிகைபாகன், சி.கே. கந்தசாமி, என்.சபாரத்தினம், கே.பூரணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பிள்ளை, ஐ.பி.துரைரெத்தினம், விபுலானந்த அடிகள், வீ.வீரசிங்கம், சைவப்பெரியார் சிவபாதசுந்தரனார் முதலியோர் இடம்பெற்றுள்ளனர். சுமார் 504 பக்கங்களில் இந்நூல் ஆக்கப்பட்டுள்ளது. இந்நூலுக்கு இந்நூலாசிரியரின் இரு மாணவர்களான இந்நாள் பேராசிரியர்களான பொ. இரகுபதி, என். சண்முகலிங்கம் ஆகியோர் அணிந்துரை வழங்கியுள்ளனர். குறிப்பாக இரகுபதியின் அணிந்துரை தமிழ்க் கல்வி வரலாற்றில் குறுக்கு வெட்டு முகத்தை தெளிவாக அடையாளப்படுத்துகின்றது. கருத்துநிலை சார்ந்த விவாதத்திற்கான ஆய்விற்கான சட்டகத்தையும் முன்வைக்கின்றது.

யாழ்.புனித சம்பத்திரியார் கல்லூரியின் அதிபராக விளங்கியவர் லோங் அடிகளார். இவர் உயிர் வாழ்ந்த 66 வருடங்களில் 36 வருடங்கள் யாழ்ப்பாணத்து மாணவர்களின் நலனுக்காகவும் யாழ்ப்பாண சமூகத்தின் உயர்விற்காகவும் அரும்பணியாற்றியமையை எவரும் மறுப்பதற்கில்லை. இக்கல்லூரியில் அடிகளார் மாணவர்களின் அறிவு விருத்திக்கு ஆசிரியர் போதிப்பது மாத்திரம் போதாது. சிறப்பாக உயர்தர மாணவர்கள் மேலும் பல தகவல்களைப் பெற வேண்டும் என விரும்பினார். அதனை வழங்குவதற்கு ஒரு சிறந்த நூலகம் அமையவேண்டும் என்பதை உணர்ந்து அதனை உருவாக்க முயற்சிசெய்தார். நூலகத்தின் தரத்தினையும் வளர்த்து வந்தார். தமது மாணவர்கள் விளையாட்டுத் தளங்களில் கட்டுப்பாட்டுடன் நடக்க வேண்டும் என கறாராக இருந்து வந்தார். மாணவர்கள் விளையாட்டுத்துறையில் ஈடுபடுவதை ஊக்குவித்தும் வந்தார்.

ஹன்டி பேரின்பநாயகம் கொக்குவில் இந்துக்கல்லூரியின் அதிபராக பதவிவகித்தார். இங்கு பாடசாலையில் பெருகிவரும் மாணவர் சமூகத்திற்கு வேண்டிய வசதிகளை அமைத்துக்கொடுத்தல் தொடர்பில் பல்வேறு சவால்களுக்கு முகம் கொடுத்தார். இதற்காக மூன்று வழிமுறைகளைக் கண்டுபிடித்தார். 1. பெற்றோர், பழைய மாணவர்கள், நலன்விரும்பிகளிடம் உதவிகோரல். 2) களியாட்ட விழா ஒன்றை நடத்துதல் 3) மலேசியா, சிங்கப்பூர் போன்ற கடல் கடந்த நாடுகளுக்குச் சென்று அங்குள்ளோரிடம் உதவிபெறுதல். கடமை உணர்வுமிக்க பாடசாலை ஆசிரியர்கள், அபிமானமிக்க பெற்றோர்கள், விசுவாசமிக்க பழைய மாணவர்கள் என அத்தனை பேருடைய அபரிமிதமான ஒத்துழைப்புகளுடன் அதிபர் ஹன்டி இந்த மூன்று செயல்திட்டங்களையும் ஒருங்கே செயல்படுத்தினார்.




எஸ்.வி.ஓ. சோமநாதர் பல்துறை வித்தகராக விளங்கிய அதிபர், மட்டக்களப்பு மெதடிஸ் மத்தியகல்லூரியில் ஆசிரியராக, அதிபராக 35 ஆண்டுகள் பணிபுரிந்தவர். சோமநாதர் சகலகலா வல்லவன், இயற்கைப் பிரியன், ஆங்கிலத்தில் தலைசிறந்த ஆசிரியர், புவியியல், விஞ்ஞானம் முதலான பாடங்களின் தரத்தை உயர்த்துவதில் அதிகம் அக்கறை காட்டியவர். பாடசாலையில் விஞ்ஞானக் கழகத்தின் செயற்பாடுகளை விரிவாக்கி வந்தவர். விஞ்ஞானக் கட்டுரைகளை மாணவர்கள் எழுதி வரவேண்டும் என விரும்பியவர்கள். மெதடிஸ் மத்திய கல்லூரியில் மாணவர் தொகை திடீரென அதிகரித்தது. புதிய வகுப்பறைத் தேவைகள் ஏற்பட்டன. ஆசிரியர் பற்றாக்குறை முக்கிய பிரச்சினையாகியது. இதற்கான தீர்வினைக் காண்பதற்கு சோமநாதன் கடினமாக உழைத்தார். மேலதிக வகுப்பறைகள் கட்டப்பட்டன. நூலகம் விரிவாக்கப்பட்டது. மாணவர்களின் அறிவை வளர்ப்பதற்கு நூல்களும் சஞ்சிகைகளும் வரவழைக்கப்பட்டன.

சுண்டுக்குளி மகளிர் கல்லூரியின் அதிபராக இருந்தவர் கலாநிதி செல்வி தில்லையம்பலம். இவர் 'இந்தியக் கடல்களில் சுறாமீன்' என்ற தலைப்பில் ஆய்வு செய்து கலாநிதிப் பட்டம் பெற்றவர். விஞ்ஞானத்துறையொன்றில் கலாநிதிப் பட்டம் பெற்ற இலங்கையின் முதல் பெண் என்ற பெருமை இவருக்கு உண்டு. இந்திய விலங்கியல் கழகம் உருவான போது அதில் முக்கிய அங்கத்தினர்களின் ஒருவர். அந்த நிறுவனம் வெளியிட்ட இதழின் உதவியாசிரியர். அமெரிக்க, இந்திய பல்கலைக்கழகங்களின் பேராசிரியராகவும் பணிபுரிந்தவர். பல்வேறு சிறப்புகள், தகுதிகள் கொண்டவர். அவை யாவற்றையும் விடுத்து சுண்டுக்குளி கல்லூரிக்கு அதிபர் வெற்றிடம் வந்த போது தனது பெரும் பொறுப்புகளை விட்டு அதிபர் பதவியை ஏற்று திறன்பட இயங்கியவர்.

தேவரையாளி இந்துக் கல்லூரியின் அதிபராக இருந்து கல்விப்பணியும் சமூகப் பணியும் ஆற்றிவந்தவர் சீனித்தம்பி. 1942 ஆம் ஆண்டு இப்பாடசாலையின் முகாமையாளராக நியமிக்கப்பட்டவர். 1954ஆம் ஆண்டு சீனித்தம்பி பாடசாலையின் அதிபராக பொறுப்பேற்றுக்கொண்டார். அப்போது பாடசாலையில் 338 மாணவர்களும் 10 ஆசிரியர்களும் இருந்தனர். இவர்களில் 4 ஆசிரியர்கள் மட்டுமே பயிற்றப்பட்ட ஆசிரியர்களாக இருந்தனர். அன்றிலிருந்து ஓய்வுபெறும்வரை பாடசாலையின் சிந்தனையுடனும் வளர்ச்சியுடனும் முழுக்கவனம் செலுத்தி வந்தார். இவரது கடமையானது ஏனைய பாடசாலைகளில் இருந்து வேறுபட்டதும் சவாலானதாகவும் இருந்தது.


*(31ஆம் பக்கம் பார்க்க...)*

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## கடைசிப் பக்கம்

# முன்னைப் பெருமைகளை சின்னஞ்சிறியவர்கள் உணர வழி செய்வோம்

"தமிழன் என்றொரு இனமுண்டு தனியே அதற்கொரு குணமுண்டு" என்று பாடப்பட்டது சரியாகத்தான் இருக்கின்றது. அந்த இனத்தின் பிரதான குணமாகக் காணப்படுவது "நன்றி மறப்பது" மட்டும் தான் என்ற நிலை இன்று ஊர்ஜிதம் செய்யப்பட்டு வருகிறது. பண்பாட்டோடு கூடிய இனமாக, ஒழுக்கத்தை உயிரினும் மேலாகக் கருதிய இனம் இன்று "சொந்தச் சகோதரர் துன்பத்தில் வாழ்தல் கண்டும் சிந்தை நெகிழாதவர்களாக" அஞ்சி அஞ்சிச் சாகும் சமூகமாக மாறி வருகின்றோம். "நாமார்க்கும் குடியல்லோம்" என்றும் "அஞ்சத்தக்கது எதுவும் இல்லை. அஞ்சுவதும் இல்லை" என்றும் மார்பு தட்டி நின்ற இனம் இன்று மண்டியிட்டுக் கிடக்கி றது.



மா. கணபதிப்பிள்ளை

"முன்னையர் ஆயிரம் ஆண்டுகள் வாழ்ந்து முடிந்ததும் இந்நாடே" என்று பாடினான் பாரதி. அத்தகைய முன்னையவர்களால் ஆக்கப்பட்ட, சீர் செய்யப்பட்ட நாகரிகம் மிக்க உலகத்தின் அறுவடையாளர்களாகவே நாம் இன்று விளங்குகின்றோம். "தண்ணீர் விட்டோ வளர்ந்தோம் சர்வேசா இப்பயிரைக் கண்ணீரால் காத்தோம் கருகத் திருவுளமோ" என்ற பாரதி வாக்குக்கு ஏற்ப எம்முன்னையவர்கள் ஆக்கி எமக்களித்த விழுமியங்களை, பண்பாட்டை, நாகரிகத்தை மறந்து விட்டோம். அந்நிய மோகத்திலும், அடிமைப் புத்தியிலும் அடிபணிந்து எடுப்பார் கைப்பிள்ளைகளாய் மாறி வருகின்றோம்.


எத்தனை பெரிய மனிதர்களின் அர்ப்பணிப்பால் இந்த நிலைக்கு நாம் உயர்ந்தோம் என்பதை எண்ணிப் பார்க்கின்றோமா? அந்த மனிதர்களை ஆகக் குறைந்தது நினைவு கூருகின்றோமா? என்றால் இல்லை என்றே குறிப்பிடலாம். "கண்டதே காட்சி, கொண்டதே கோலம்" என்று மாறி விட்ட ஒரு நாடோடிக் கூட்டம் போல் எதுவுமற்ற ஏதிலிகளாக நாம் நிற்கும் நிலை வேதனை தரவில்லையா?

"நாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல் இனிதாவது எங்கும் காணோம்" என்று பாடிக் கொண்டு இருந்து பயன் இல்லை. எனவே தான் உலகமெல்லாம் தமிழ் மொழியினைக் கொண்டு செல்ல ஒரு வீரத் துறவி புறப்பட்டான். அவர் பெயர் தமிழ்த் தூது சேவியர் தனிநாயகம் அடிகளார். தமிழுக்கு ஆராய்ச்சி மாநாடுகளை ஏற்படுத்தினான். "தமிழ்க் கலாசாரம்" என்ற ஆங்கிலக் கட்டுரைகளில் தமிழையும் தமிழர்களையும் உலகம் முழுவதுக்கும் எடுத்துச் சென்றான். எமது பண் பாட்டு மரபுகளை, தமிழின் சிறப்பை காய்தல் உவத்தல் இன்றி எடுத்துச் சொன்னான்.

கத்தோலிக்க துறவியான அவர் மாணிக்கவாசகரின் திருவாசகத்தின் சிறப்பை உலகுக்கு எடுத்துச் சொன்னார். நம் சிறப்பை நாமே சொல்லிக் கொண்டு இருக்காது உலகம் அதைப் பற்றிச் சொல்ல வேண்டும் என்ற வேணாவாவில் தான் சென்ற இடமெல்லாம் தமிழுக்கு அருந்தொண்டாற்றி இன்று செம்மொழிகளில் ஒன்று தமிழ் மொழி என்று பிரான்சிய, பிரித்தானிய, அமெரிக்க பேராசிரியர்களை எழுத வைத்த மகாத்மாவின் நூற்றாண்டு இந்த ஆண்டாகும். அதை நாம் நமது மூலை முடுக்கெல்லாம் கொண்டு செல்ல வேண்டாமா? எம்மை எமக்குக் காட்டிய பெரியாரின் புகழை எம் சின்னஞ்சிறிய குழந்தைகள் அறிய வேண்டாமா? அத்தகைய வீரத்துறவிகள் மீண்டும் எம்மிடையே தோன்ற வேண்டாமா? அவரைப் பற்றியல்லவா நாம் இந்த ஆண்டு முழுவதுமாகப் பேச வேண்டும். நன்றி மறந்தவர்களாய், நாதியற்றவர்களாய் நிற்காமல் நம்மவர் பெருமையை நாம் பேசப் பேச அது உலகம் முழுவதும் கொண்டு செல்லப்படலாம் அல்லவா? அதற்காக உழையுங்கள் என்று இன்றைய கல்விச் சமூகத்தை வினயமாக வேண்டுகின்றோம்.

"பண்புடையார் பட்டுண்டு உலகம்" என்பர். அத்தகைய பண்புடையார் பற்றி பேசிக் கொண்டு இருப்பது எமது தேவையல்லவா. முன்னைப் பெருமை படைத்த எம்மினத்தின் பெருமைகளை எம்சின்னஞ்சிறியவர்கள் உணர வழி செய்ய வேண்டும். மாறாக நன்றி மறந்த இனக்குழுமமாக நாம் மாறாதிருக்க முயல வேண்டும் என்பது இன்றைய தேவையாகும். ■

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

வளமான மண்ணும்
செழிப்பான வாழ்வும்...

யாழ் மண்
Yarl Mann
Connect with Jaffna



www.yarlmann.lk

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Printed and published by Express Newspapers (Ceylon) (Pvt) Ltd, at No.185, Grandpass road, Colombo -14, Sri Lanka.